பக்கங்கள்: 20+IV+2(வண்ணம்)=26

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 13 ஞாயிற்றுக்கிழமை (27-06-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:215

# போருக்கான சூழல் உருவாகின்றது அதை எதிர்கொள்ள புலிகள் தயார்!

## எழுச்சிப் பேரவை சங்கம நிகழ்வில் புலிகள் பிரமுகர் தங்கன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

**ஒருபுறம் தமிழ்த் தேசியத்தைப் பலவீனப்படுத்திக்கொண்டு, மறுபுறம் சர்வதேசத்திடம் உதவிகளைப் பெற்றுத் தன்னைப் பலப்படுத்திக்கொண்டு மீண்டும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு அரசு தயாராகிவருகின்றது. போர் வரட்டும். எத்தகைய சூழ்நிலையையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.**

**- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்.**

**தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் சங்கமம் நிகழ்வு நேற்று மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அதில் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கன் கலந்துகொண்டு உரையாற்றினார்.**

தேசிய எழுச்சிப் பேரவை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் இடம்பெற்ற மூன்றாவது பேராளர் சங்கமம் நிகழ்வு இதுவாகும். யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் தலைமையில் நேற்றைய நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு சிறப்புரையாற்றிய தங்கன் மேலும் கூறியதாவது:-

தமிழர்களின் ஒற்றுமையைச் சிதைத்து - பிரிவினை, பிளவுகளை ஏற்படுத்தி - தமிழ்த்தேசியத்தைப் பலவீனப்படுத்தி தமிழ்த் தேசியப் போராட்டத்தை நசுக்கும் திட்டங்களில் சிங்களப் பேரினவாத அரசுகள் ஈடுபட்டு வந்துள்ளமை இன்று அம்பலமாகியுள்ளது.

துரோகி கருணாவைப் பயன்படுத்தி தேசிய ஒற்றுமையைக் குலைக்கும் திட்டம் இன்று பிசுபிசுத்துப்போய் விட்டது.

எமது தாயகத்தை நாங்களே பெற்று நாமே ஆளவேண்டுமானால் நாம் ஒன்றுபட்டுள்ளோம், பலமாகவுள்ளோம் என்பதை உணர்த்தவேண்டும். விடுதலைப் புலிகள்தான் மக்கள்;

(20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்க அச்சகத்தில் தீ! வாக்குச்சீட்டுகள் தப்பின!!

கொழும்பு,ஜூன்27

கொழும்பு, பொரளையில் உள்ள அரச அச்சகத்தில் நேற்று மாலை 6.30 மணிக்கு திடீர் தீவிபத்து ஏற்பட்டது. இதனால் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டது.

அச்சகத்துக்குத் தேவையான இரசாயனப் பொருள்கள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியப் பகுதியில் தீ பற்றிக் கொண்டது என்றும் - தொடர்ந்து ஏனைய பகுதிகளுக்கும் தீ பரவத் தொடங்கியது என்றும் தெரிவிக்கப் பட்டது.

தீயணைப்புப் படையைச் சேர்ந்த 50 இற்கு மேற்பட்ட வீரர்கள் தீயணைப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். (20ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றச் சம்பவத்தைக் கண்டித்து ஜாதிக ஹெல உறுமயவின் யாத்திரை இன்று ஆரம்பம்

கொழும்பு,ஜூன்27

நாடாளுமன்றத்தில் இடம்பெறும் அடாவடித்தனங்களைக் கண்டித்து 'ஜாதிக ஹெல உறுமய' கட்சியினர் நடத்தும் 'தர்மராஜ்ஜியம்' யாத்திரை இன்று களுத்துறையில் ஆரம்பமாகிறது.

நாடாளுமன்றத்துக்குத் தெரிவான பிக்கு எம்.பிக்களை இழிவுபடுத்திய அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் அநாகரிகச் செயல்களைக் கண்டித்தும் -

நாடாளுமன்றச் செயற்பாடுகள் ஜனநாயக மரபுகளின்படி இடம்பெற வேண்டும் என்பதை வலியுறுத்தியும் ஜாதிக ஹெல உறுமய இந்த யாத்திரையை ஏற்பாடு செய்துள்ளது.

கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பெரும் எண்ணிக்கையான பௌத்த பிக்குமாரும் இந்த யாத்திரையில் பங்குபற்றுகின்றனர்.

கடைசியாக கொழும்பில் இந்த யாத்திரை பூர்த்தியடையும் (ஐ-3)

## 'யுனிசெவ்' குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்27

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தில் சிறுவர்களை இணைத்துக்கொள்வதில் மீண்டும் தீவிரமாகச் செயற்படுகின்றனர் என்று 'யுனிசெவ்' குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் பகிஷ்கரிப்பு முடிவு

வவுனியா,ஜூன்27

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவந்த மாணவர்களின் பகிஷ்கரிப்புப் போராட்டம் நேற்று முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

வளாக மாணவர்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க வேண்டும் என்று கோரி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ். பல்கலைக்கழக துணை

(20ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிகளுக்கு எதிராகப் பேரணி

மட்டக்களப்பு,ஜூன்27

கண்ணிகளைப் புதைக்கக்கூடாது என்று கோரி மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுப் பேரணி ஒன்று இடம்பெற்றது.

'யுனிசெவ்', சர்வோதயம் ஆகிய அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடந்த இந்தப் பேரணியில் வவுணதீவு, உன்

(20ஆம் பக்கம் பார்க்க)

## தப்பியோடிய கைதி கைது!

கண்டி,ஜூன்27

கண்டி போகம்பரை சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் நேற்று முன்தினம் தப்பி ஓடிவிட்டார்.

பின்னர் அவர் கண்டிப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதி தப்பியோடிய சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகள் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ-3-6-13)

## துணைப்படை நேர்முகப் பரீட்சைக்கு அதிக எண்ணிக்கையானோர் வருகை

### ஆள்சேர்ப்பு 30ஆம் திகதி வரை தொடர்ந்து நடக்கும்

கிளிநொச்சி,ஜூன்27

தமிழீழ தேசிய துணைப்படையில் அதிக எண்ணிக்கையானோர் இணைந்து வருகின்றனர் என்று தமிழீழ காவல்துறை தெரிவித்திருக்கிறது.

கிளிநொச்சியில் தற்சமயம் நடைபெற்று வரும் தேசிய துணைப் படைக்கு ஆள்களைச் சேர்க்கும் நேர்முகப் பரீட்சைக்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் சமுகமளிக்கின்றனர் என காவல்துறையின் ஆளணிப் பிரிவுப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

கடந்த 23ஆம் திகதி முதல் இந்த நேர்முகத் தேர்வு கிளிநொச்சியில் உள்ள தமிழீழ காவல்த்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்று வருகின்றது. இந்த நேர்முகத் தேர்வு எதிர்வரும் 30ஆம் திகதி வரை இடம்பெறும்.

தமிழர் தாயகத்தின் சகல மாவட்டங்களில் இருந்தும் தினமும் பெரும் எண்ணிக்கையானவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என்றும் -

அவர்களில் தகுதியானவர்கள் பின்னர் பயிற்சிக்கு அழைக்கப்படுவர் என்றும - ஆளணிப் பிரிவுப் பொறுப்பாளர் மேலும் தெரிவித்தார். (ஐ-3)

**இன்றைய உதயனுடன் இரண்டு வர்ணப் பக்கங்கள் தனியாக...**

## கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் மீட்கப்பட்ட சிறுவனின் சடலம்!

### வட்டக்கச்சிப் பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி,ஜூன்27

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் 12 வயதுச் சிறுவன் ஒருவனின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

வட்டக்கச்சியைச் சேர்ந்த சிறீதரன் பிரதீபன் என்ற சிறுவனே சடலமாக மீட்கப்பட்டான்

தற்கொலை செய்துகொண்டார் எனத் தெரிவித்து சிறுவனது பெற்றோர் சடலத்தை கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்த்தனர்.

சடலத்தை பரிசோதனை செய்த வைத்தியர்கள் அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாகத் தெரிவித்தனர் என்று கூறப்படுகிறது. மரண விசாரணை, பிரேத பரிசோதனை ஆகியன இன்று நடைபெறும். (ஐ-3-301)

## கருணாவுக்குப் பாதுகாப்பு; ஹெல உறுமய கேட்கிறது

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி, அதிகாரிகளைக் கோரியுள்ளது.

இவ்விடயம் குறித்து ஜாதிக ஹெல உறுமய வெள்ளிக்கிழமை இரவு அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

கருணா ஒரு காலத்தில் ஆயுதம் தாங்கி இராணுவத்தினருக்கு எதிராகப் போராடிய போதிலும் தற்போது ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிமுறையில் கிழக்கை ஆட்சி செய்ய அவர் விரும்புவதாக தெரிவித்த ஹெல உறுமயவின் பொதுச் செயலாளர், நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டு இவ்விடயத்தில் கருணாவிற்கு அனைத்து உதவிகளும் வழங்கப்படவேண்டும் என அறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளார். (ஐ-3)

## ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறைக்கைதி அங்கு மரணம்!

யாழ்ப்பாணம்,ஜூன்27

சுகயீனம் காரணமாக நேற்றுமுன்தினம் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட சிறைக்கைதி ஒருவர் நேற்றுப் பிற்பகல் அங்கு மரணமானார்.

யாழ்ப்பாணம் திருநகரைச் சேர்ந்த அன்ரனி ரவிக்குமார் (வயது 32) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ். நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த இரு களவு வழக்குகள் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டிருந்த இவர், நீதிமன்ற உத்தரவின்பேரில் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

திடீரென அவருக்கு ஏற்பட்ட நோயை அடுத்து நேற்றுமுன்தினம் அவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. நேற்று அங்கு அவர் மரணமானார்.

மரணத்துக்கான காரணத்தைக் கண்டறிய பிரேத பரிசோதனை இன்று நடைபெறும். (ஐ-3-13)

## 'ஹலோ ரஸ்ட்' நிறுவனப் பணிகள் திங்கள் முதல் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம்,ஜூன்27

'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் வாகனத் தரிப்பிடத்தில் கடந்த வியாழக்கிழமை அதிகாலை மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த கண்ணிவெடி அகற்றும் பணிகள் மீண்டும் நாளை திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும்.

'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் திட்டமிடல் முகாமையாளர் வலோன் கும்லோவா இதனைத் தெரிவித்தார்.

இந்த நிறுவனத்தின் வாகனத் தரிப்பிடத்துக்குள் நுளைந்த இனந்தெரியாத நபர்கள் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களைத் தீக்கிரையாக்கியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கண்ணி அகற்றும் பணிகளை இடைநிறுத்தியிருந்த 'ஹலோ ரஸ்ட்' நிறுவனம் மீண்டும் தமது வேலைகளைத் திங்கட்கிழமை ஆரம்பிக்கிறது.

இதேவேளை -

இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸார் நேற்றும் பலரை

(20ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ராணுவம்-தீவிரவாதிகள் யேமனில் பெரும் மோதல்!

## 50பேர் பலி; பலர் காயம்

சனா(யேமன்),ஜூன்27


யேமன் நாட்டில் கடந்த 4 நாள்களாக ராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே கடும் மோதல் நடைபெற்று வருகிறது.

இதில் 46 பயங்கரவாதிகளும் 9 சிப்பாய்களும் உயிரிழந்தனர்.

இந்த மோதல் சவூதி எல்லைக்கு அருகேயுள்ள சாதா மாகாணத்தில் நடந்ததாக யேமன் உள்துறை அமைச்சகம் தெரிவிக்கிறது.

10 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 43 பயங்கரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (8)

# அமெரிக்க விமானப்படைக்கு புதிய செயற்கைக் கோள்



அமெரிக்க விமானப்படைக்கு முக்கிய தகவல்களை அனுப்ப புதிய செயற்கைக்கோள் அனுப்பப்பட்டுள்ளது. ஏற்கனவே அனுப்பப்பட்ட செயற்கைக்கோள் செயலிழந்ததைத் தொடர்ந்து இந்தப் புதிய செயற்கைக்கோள் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தச் செயற்கைக்கோள் புளோரிடா மாநிலத்தில் உள்ள விமானப் படைத் தளத்தில் இருந்து போயிங் டெல்டா -2 ரொக்கெட்டில் வைத்து அனுப்பப்பட்டது. தீப்பிளம்பைக் கக்கியபடி அந்த ரொக்கெட் புறப்பட்டுச் சென்ற காட்சி இது.

# ஈராக்கிற்கு புதிய ஐ.நா. தூதரை நியமிப்பதற்கு அனான் திட்டம்!


நியூயோர்க்,ஜூன்27

ஈராக்குக்கு ஐ.நா. சார்பில் புதிய தூதரை நியமிக்க ஐ.நா. தலைமைச் செயலாளர் கோபி அனான் திட்டமிட்டுள்ளார்.

தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் நடந்து வந்தாலும் புதிய தூதர் பக்தாத்தில் இருந்து செயற்படுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கை அமெரிக்கக் கூட்டுப் படைகள் கைப்பற்றியதும், அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து, ஈராக் தீவிரவாதிகள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். பக்தாத்திலும் முக்கிய நகரங்களிலும் கார் வெடிகுண்டுகள், தற்கொலைப் படைத் தாக்குதல்கள் என தினமும் வன்முறை நடந்துவருகிறது.

ஐ.நா. தூதரக அலுவலகம் மீதும் தீவிரவாதிகள் இரண்டுமுறை தாக்குதல் நடத்தினர். இதில் மூத்த தூதரக அதிகாரி செர்ஜியோ வியெராடி மெல்லோ உட்பட 22 பேர் கொல்லப்பட்டனர்.



இதையடுத்து, ஐ.நா. தூதரக ஊழியர்கள் அனைவரையும் ஈராக்கை விட்டு வெளியேறும்படி கோபி அனான் உத்தரவிட்டார்.

ஈராக்கில் இடைக்கால அரசு எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் நிர்வாகத்தைக் கவனிக்கப்போகிறது. இந்த நிலையில் ஈராக்குக்கு புதிய தூதரை நியமிக்க அனான் திட்டமிட்டுள்ளார். அடுத்தவாரம் புதிய ஐ.நா. தூதர் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தானுக்கு நேட்டோ நாடுகள் அதிக படைகளை அனுப்பி பாதுகாப்பில் ஈடுபடவேண்டும் என அனான் கேட்டுக்கொண்டுள்ளார். போதுமான படைகள் இருந்தால்தான் அங்கு எதிர்வரும் செப்ரெம்பரில் தேர்தலை பிரச்சினை இல்லாமல் நடத்த முடியும் என்றும் அவர் கூறியுள்ளார். (8)

# மியான்மரில் அடக்குமுறை தொடர்கிறது

ஒரு பக்கம் ஜனநாயகம் பேசிய போதும், மறுபுறம் அடக்குமுறையை மியான்மர் இராணுவ அரசு கைவிடவில்லை. கடந்த சில நாள்களுக்கு முன் பிரதமர் கின் நியூண்ட் மலேஷியா மற்றும் தாய்லாந்து நாடுகளுக்கு சுற்றுப்பயணம் செய்தார். அப்போது அவர் மியான்மர் அரசு ஜனநாயகத்தைக் கட்டிக்காப்பது போலப் பேசினார்.

ஆனால், தொடர்ந்து சிறையில் இருக்கும் ஆங்சாங் சூகி ஆதரவாளர்கள் சில துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்துப் பிரசாரம் செய்தனர். அவ்வளவுதான். அடக்குமுறை பாய்ந்தது. பலர் கைதுசெய்யப்பட்டனர். ஆங்சாங் சூகிக்கு ஆதரவாக நிருபர் ஒருவர் ஆதரவு தெரிவித்தார் என்பதால் அவருக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

அடக்குமுறை ஆட்சியில் இருந்து தப்பி மியான்மர் தாய்லாந்து எல்லையிலிருந்து வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்குப் பேட்டியளித்த ஒருவர் சிறைகளில் தினமும் அறைகள் எண்

உலக அரங்கில்

ணிக்கை அதிகரிக்கிறது. அதுதான் எங்கள் நாட்டின் அடக்குமுறைக்கு அத்தாட்சி - என்றிருக்கிறார்.

ஆனால், மியான்மர் இராணுவ அரசு, சிறைகளைப் பார்க்க மனித உரிமைக் குழுக்களுக்கு அனுமதி தருமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. (8)

## மலேஷியாவில் சர்வதேச இசைத் திருவிழா

குச்சிங்,ஜூன்27

மலேசியாவில் ஜூலை 9ஆம் திகதி தொடங்கும் 7ஆவது மழைக் காடுகள் உலக இசைத் திருவிழாவில் இந்தியா உட்பட பல்வேறு நாடுகளிலிருந்து 15,000 இசைக் கலைஞர்கள், ரசிகர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தியா, ஈராக், ஜப்பான், நியூஸிலாந்து உள்ளிட்ட நாடுகளிலிருந்து 15 இசைக் குழுக்கள் இந்த 3 நாள் திருவிழாவில் பங்கேற்கின்றன.

சார்வாக் கலாசார கிராமத்தில் நடைபெறும் இத்திருவிழாவில் இசை, கலாசார நிகழ்ச்சிகளுடன், கருத்தரங்குகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

# நேபாள முன்னாள் பிரதமரின் உறவினரின் குரல்வளையை அறுத்தனர் தீவிரவாதிகள்

காத்மண்டு,ஜூன்27

நேபாள முன்னாள் பிரதமர் சூரிய பகதூர் தாபாவின் உறவினர் ராம்ஜி தாபாவின் குரல்வளையை அறுத்தனர் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள்.

கிழக்கு நேபாளம் தனுகுதா மாவட்டத்தில் ராம்ஜி தாபாவின் வீட்டுக்குள் கத்தி மற்றும் ஆயுதங்களுடன் கடந்த வியாழக்கிழமை தீவிரவாதிகள் புகுந்தனர்.

ராம்ஜியின் குரல்வளையைக் கத்தியால் அறுத்துவிட்டு மாவோ தீவிரவாதிகள் தப்பிவிட்டதாக பொலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில், தலைநகர் காத்மண்டுவின் மத்திய பகுதியில் தாக்குதல் நடத்த மவோ தீவிரவாதிகள் செய்த சதித் திட்டம் முறியடிக்கப்பட்டதாக இராணுவப் பிரிகேடியர் ஜெனரல் நேத்ர பகதூர் தாபா கூறினார்.

தாக்குதல் நடத்துவதற்காக தீவிரவாதிகள் பதுங்கியிருந்த இடத்தில் வெடிகுண்டுகள் உட்பட பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் அவர் தெரிரித்தார்.

வெடிகுண்டை, மோட்டார் சைக்கிளுடன் தீவிரவாதிகள் இணைத்து வைத்திருந்தனர். இதன்மூலம் அவர்கள் அரசுக் கட்டடத்தைத் தாக்க சதித்திட்டம் தீட்டியிருக்கலாம் எனவும் இராணுவப் பிரிகேடியர் கூறினார். (8)

# அமெரிக்கா வழங்கிய கப்பலை கையேற்றார் தயா சந்தகிரி

கொழும்பு,ஜூன்27

இலங்கைக்கு அமெரிக்கா வழங்கிய கடற்படைக் கப்பலைக் கையளிக்கும் வைபவம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை அமெரிக்காவில் இடம்பெற்றது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட இராணுவ ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 'கரேஜஸ்' என்ற இந்தக் கப்பல் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டது.

இக்கப்பலைக் கையளிக்கும் வைபவம் வாஷிங்ரன் பாதுகாப்புச் செயலகத்தில் நடைபெற்றது.

அமெரிக்கக் கடற்கரையோரப் பாதுகாப்புப் பிரிவின் தளபதி வைஸ் அட்மிரல் தோமஸ் கொலின் இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியிடம் கப்பலை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

இந்தக் கப்பல் அமெரிக்கக் கரையோரப் பாதுகாப்பில் முன்னர் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. அண்மையில் அமெரிக்கா சென்றிருந்த இலங்கைக் கடற்படை உயர் அதிகாரிகள் குழு ஒன்று இந்தக் கப்பலைப் பரீட்சார்த்தமாகச் செலுத்திப் பார்த்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

210 அடி நீளமான இந்தக் கப்பலில் 70 பேர் பணியாற்ற முடியும். அத்துடன், இரண்டு உலங்குவானூர்திகளை நிறுத்திவைக்கக் கூடிய தளமும் இதில் உள்ளது. (ஓ-8)

# பொதுக்கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் இன்று காலை 9மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சமாசத் தலைவர் ச.முருகநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்27

வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்திச் சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு யாழ். ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து ஓட்டோ உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் கிளைச் சங்கங்களின் உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-ரி)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்27

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (எ-ரி)

## மக்கள் வங்கியின் வாடிக்கையாளர் தினம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

சங்கானை மக்கள் வங்கிக் கிளையின் வாடிக்கையாளர் தினம் இன்று காலை 10மணிக்கு வலிமேற்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வாடிக்கையாளர்களுக்கான ஒன்றுகூடலும், கலந்துரையாடலும் இடம்பெறும்.

வாடிக்கையாளர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை கேட்டுள்ளார். (எ-7-29)

## இருளில் மூழ்கும் திடற்புலம் கிராமம்

யாழ்ப்பாணம்,ஜூன்27

புன்னாலைக்கட்டுவன் வடக்கு, திடற்புலம் கிராமத்திற்கு இதுவரை மின்சாரம் விநியோகிக்கப்படவில்லை என அப்பகுதி மக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இடப்பெயர்வின் பின் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இக்கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளனர். இக்கிராம மக்கள் மின்சாரம் வழங்கக் கோரிப் பல தடைவைகள் உரியவர்களிடம் தொடர்புகொண்ட போதிலும் இதுவரை மின்சாரம் வழங்கப்படாத நிலையே தொடர்கிறது.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பே மின்கம்பங்கள் இக்கிராம பிரதான வீதியில் பறிக்கப்பட்டுள்ளன. ஆயினும் மின்விநியோகப் பணிகள் தொடராத நிலையில் கிராமம் இருளில் மூழ்கிக்கிடக்கிறது. (ஓ-15)

# மகவுக்குத் தமிழில் பெயர் சூட்டியோர் திருகோணமலையில் இன்று கௌரவிப்பு

யாழ்ப்பணம்,ஜூன்27

கனடா 'சிலம்பம்' அமைப்பின் ஏற்பாட்டில் மகவுக்குத் தமிழிற் பெயர் சூட்டியோருக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வரவேற்புரையை சிலம்பம் அமைப்பின் திருகோணமலை இணைப்பாளர் வி.குணபாலனும், சிறப்புரையை திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலனும், பரிசளிப்புரையை நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கமும் விசேட உரைகளை பண்பாட்டலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி மற்றும் குறளமுதம், திருமதி ராணி சீதரன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

சிலம்பம் அமைப்பின் தாயகக் கிளை இணைப்பாளர் கிருபராசா கௌரவிப்பை நிகழ்த்த நன்றியுரையை கலாசார அலுவலர் வீ.கோணேஸ்வரன் நிகழ்த்துவார்.

# லெப்டினன்ட் உத்தமனுக்கு வடமராட்சியில் நினைவுக் கல்

வடமராட்சி,ஜூன்27

திருகோணமலைக் கடற்பரப்பில், கடந்த 97ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி வீரச்சாவடைந்த லெப்டினன்ட் உத்தமனின் (பொன்னுத்துரை அருமைத்துரை, சண்டிக்குளம், கரவெட்டி) நினைவுக்கல் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் திரை நீக்கம் செய்துவைக்கப்படும்.

அன்னாரின் திருவுருவப் படம் அன்றையதினம் அவரின் இல்லத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு கரவெட்டி சண்டிக்குளம் நவசக்தி சனசமூக நிலையத்தில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்று பின்னர் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்துவைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டுக் குழு தெரிவித்தது. (ஐ-173)

## முன்பள்ளி விளையாட்டு விழா

ஊர்காவற்றுறை,ஜூன்27

தம்பசிட்டி காந்திஜி முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2மணிக்கு முன்பள்ளி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஊர்காவற்றுறை அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.ரதன், ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலாளர் கு.கணேசலிங்கம், தீவக கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-16)

உதயன்

## அமெ.தூதுவரின் உபதேசத்தில் நாம் படிக்க வேண்டிய பாடம்

"இலங்கைக்கு சமாதானம் வேண்டுமானால் இலங்கையின் இராணுவம் பலமாக இருக்கவேண்டும். இலங்கை இராணுவம் பலமாகவும் வலுவுடையதாகவும் உள்ளது என்ற செய்தி - யுத்தத்துக்கு மீளவும் போகக்கூடாது என்ற செய்தி - புலிகளுக்குப் போனால்தான் சமாதானம் கிட்டும்" - என்று கூறியிருக்கின்றார் கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி ஜே. லன்ஸ்டெட்.

இலங்கையின் கடலோரக் கண்காணிப்பு வலுவை கணிசமான அளவு மேம்படுத்தும் நோக்கோடு கண்காணிப்புத் தொடர்பான முக்கிய கப்பலை இலங்கைக்கு அமெரிக்கா வழங்குகின்றது என்று குறிப்பிட்ட அவர், இலங்கை அரசுக்குப் பக்கபலமாக அமெரிக்காவும் மற்ற நாடுகளும் நிற்கவேண்டும் என்ற பலமான சமிக்ஞையை வெளிப்படுத்த விரும்புகிறோம் என்றும் கூறியிருக்கின்றார்.

அதற்காகவே, இந்தக் கப்பல் வழங்கப்படுகின்றது என்றும் அமெரிக்கத் தூதுவர் கூறியிருக்கின்றார்.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இரண்டரை வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சமாதான முயற்சிகள் தேக்கநிலையை அடைந்து, அமைதி நடவடிக்கைகள் ஓர் இக்கட்டான எல்லையில் இறுகிநிற்கின்ற இந்தச் சமயத்தில் -

அதுவும் அமைதி எத்தனங்களில் ஆர்வங்காட்ட முடியாத நிலையில் பேரினவாத சக்திகளின் பிடியில் இலங்கை அரசுத் தரப்பு சிக்குண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில்-

வழமைபோல வெளியே சமாதான தேவதை வேடம் போட்டுக்கொண்டு பின்னணியில் யுத்தப்பொறியில் - போர்த்தீவிரத்தில் - நாட்டங்காட்டும் ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியைப் பார்த்தே -

கடலாதிக்கத்தை மேம்படுத்தும் கப்பலை வெகுமதியாகக் கொடுத்து இந்த 'நல்லுபதேசத்தை' செய்திருக்கிறார் அமெரிக்கத்தூதுவர்.

அதுவும், தனது முன்னைய ஆட்சிக் காலத்தில் 'சமாதானத்துக்கான போர்' என்ற விநோதக் கொள்கையைப் பிரகடனப்படுத்தி, தமிழர்கள் மீது கொடூர யுத்தத்தைத் திணித்த ஒரு தலைவியை நோக்கித்தான், 'உங்களுக்குச் சமாதானம் வேண்டுமானால் உங்கள் இராணுவம் பலமாக இருக்கவேண்டும்' - என்று கூறியிருக்கின்றார் அமெரிக்கத்தூதுவர்.

ஆப்கானிஸ்தான், ஈராக், மத்தியகிழக்கு என்று பல இடங்களில் சமாதானத்தை ஏற்படுத்துகின்றோம் என்ற பெயரில் இராணுவப் பலத்தை - வல்லாதிக்கத்தை - பெருக்கிய அமெரிக்க வல்லரசின் கொள்கை இன்று உலக சந்தியில் நகைப்புக்கிடமாகி நிற்கின்றது.

அதேபாணியில் - தனது போக்கைப் போன்ற வல்லாதிக்க மிரட்டல் செய்ய - இலங்கைக்கும் போதிக்க முயல்கிறது அமெரிக்கா.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பான விடயங்களிலும் சமாதான முயற்சிகளிலும் அனுசரணைப் பணியாற்றும் நோர்வேத்தரப்பு, தனது சமாதான முயற்சிகளில் ஆரம்பத்திலிருந்தே இந்த விடயத்தைத் திரும்பத்திரும்ப வலியுறுத்தி வந்திருக்கின்றது.

இலங்கை அரசுப்படைகள் மற்றும் புலிகளுக்கு இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தகாலத்தில் இருந்த இராணுவச் சமநிலை (Balance of Power) இந்தச சமாதானச் சூழ்நிலையும் உடன்பாட்டு இணக்கமும் குழம்பாமல் நீடிப்பதற்கு அப்படியே மாறாமல் பேணப்படுவது அவசியம் என்பதையே நோர்வே அனுசரணைத்தரப்பு சுட்டிக் காட்டி வந்தது.

அந்த அடிப்படை விடயத்தில்தான் - அடிமடியில்தான் - இப்போது கையை வைக்கிறது அமெரிக்கா.

இலங்கை அரசின் இராணுவ, கடற்படை வலுவை மேம்படுத்துவதற்கான வசதி, வாய்ப்புக்களை அளித்துக்கொண்டு - அதாவது இதுவரை அரசுப் படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் இருந்த இராணுவச் சமநிலையை அரசுப்படைகளுக்குச் சாதகமாக மாறும் விதத்தில் குழப்பம் பண்ணிக்கொண்டு - "உங்களுக்குச சமாதானம் வேண்டுமானால் நீங்கள் பலமாக இருக்கவேண்டும்" என்று இலங்கை அரசுக்கு உபதேசிக்கின்றது அமெரிக்கா.

இது நிச்சயமாக, இங்குள்ள அமைதி நிலையைக் குழப்பும் விஷமத்தனமின்றி வேறென்ன?

என்றாலும், அமெரிக்கத் தூதுவர் இலங்கை அரசுக்குக் கூறும் உபதேசம் - வழிகாட்டல் - ஆலோசனை - தமிழர் தரப்புக்கும் புரியும், பொருந்தும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

"நமக்கு சமாதானம் வேண்டுமானால் - கௌரவத்துடன் கூடிய அமைதி வாழ்வு வேண்டுமானால் - சுதந்திரத்துடன் கூடிய இருப்புக்கான வாழ்வுரிமை உறுதிப்படுத்தப்படவேண்டுமானால் - நமது அடுத்த சந்ததியாவது பேரினவாதத்தினால் அடக்கி ஆளப்படும் இழிநிலையிலிருந்து விடுவிக்கப்படவேண்டுமானால் - நாம் பலமாக இருக்கவேண்டும். நாம் பலமாக இருக்கின்றோம் என்ற செய்தி - நம்மை அடக்கியாள முயலும் பேரினவாதிகளிடம் சென்றடைந்தால்தான் நமக்கு சமாதானம் கிட்டும்."

- அமெரிக்கத்தூதுவர் வரைந்த உபதேசத்திலிருந்து நாம் படிக்க வேண்டிய பாடம் இதுவே.

# புற்றுநோயாளர்கள் 125 பேருக்கு லண்டன் 'சிவயோகம்' கருணைநிதி

### யாழ். மருத்துவமனையில் நேற்று வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜுன்27

புற்றுநோயாளர்களுக்கான கருணைநிதி நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து நூற்றி இருபத்தைந்து நோயாளர்களுக்கு வழங்கப்பட்டது.

லண்டன் சிவயோகம் அறக்கட்டளை சார்பில் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனின் அனுசரணையுடன் லண்டன் முத்துமாரி அம்மன் கோயிலில் வைக்கப்பட்டுள்ள உண்டியலில் சேரும் பணத்தில் இருந்து இந்தக் கருணை நிதி வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வைத்தியசாலைக் கணக்காளர் மு.விஜயரகுநாதன், கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் க.குகதாஸன் ஆகிய இருவரும் நேற்றையதினம் கருணை நிதியை வழங்கினர். ஒருவருக்கு தலா 2ஆயிரம் ரூபாவீதம் கருணை நிதி வழங்கப்பட்டது.

நேற்றையதினம் கருணை நிதிக் கொடுப்பனவினைப் பெற்றுக்கொள்ள முடியாது திரும்பிய புற்றுநோயாளர்களை மறு அறிவித்தலைத் தொடர்ந்து யாழ்.போதனாவைத்தியசாலைக்கு வருகைதந்து பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

இக்கொடுப்பனவைப் பெறவரும்போது நோயாளர்கள் நோய் நிர்ணய அட்டை மற்றும் அதற்குரிய ஆவணங்களுடன் வருகை தர வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளனர். (எ-15)

# குடாநாட்டில் கூட்டுறவைப் புனரமைக்க நடவடிக்கை

## ஆளுநரின் செயலாளர் அமிர்தலிங்கம் உறுதி!

அரியாலை,ஜுன்27

யாழ். குடாநாட்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களினால் சேதமடைந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஏனைய கூட்டுறவு அமைப்புக்களைப் புனரமைத்து மீளக் கட்டியெழுப்புவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும், கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் பதில் செயலாளருமான எஸ்.அமிர்தலிங்கம் இவ்வாறு உறுதியளித்துள்ளார்.

குடாநாட்டுக் கூட்டுறவாளர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஆராயும் கூட்டம் ஒன்று கடந்தவாரம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எஸ்.அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த யுத்த காலங்களின்போது குடாநாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்கு ஆற்றிய சேவையை எவரும் மறந்துவிடமுடியாது.

இந்தச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களது பிரச்சினைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமையால், பணியாளர்களும், சங்கங்களும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன.

இந்நிலையில், பணியாளர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் சம்பந்தமான விடயங்களைக் கையாள்வதற்குக் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு 3 மாதங்களுக்கு ஒருதடவை தனது இடம்பெயர் சேவையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது - என்றார்.

இந்தக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பொறுப்பாளர் புஸ்பகுமார், வடக்கு - கிழக்கு மாகாணப் பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்களான எஸ்.கனகசபாபதி, எஸ்.ஐயாத்துரை உட்பட கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொதுமுகாமையாளர்கள், கூட்டுறவு உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (-4-17)

## தேசியக் கல்வி நிறுவகத்தின் பிராந்திய நிலையங்கள் குறைப்பு

அச்சுவேலி,ஜுன்27

தேசியக் கல்வி நிறுவகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறிகளைப் பிராந்திய ரீதியில் போதித்துவந்த நிலையங்கள் நாடளாவிய ரீதியில் தொகைக் குறைப்புச் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதியில் இதுவரை காலமும் செயற்பட்டுவந்த தேசியக் கல்வி நிறுவகத்தின் 9 பயிற்சி நிலையங்கள் மூன்றாகக் குறைக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் யாழ். இந்துக் கல்லூரி நிலையம், மன்னார் நிலையம், கல்முனை நிலையம் என்பன வடக்கு - கிழக்கில் செயற்படவுள்ளன.

ஏனைய நிலையங்களில் பயிற்சிநெறியைத் தொடர்ந்து வந்த பயிற்சியாளர்களின் செயற்பாடுகள் மேற்குறிப்பிட்ட 3 நிலையங்களில் வசதிக்கேற்ற ஒன்றுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-11)

## போதையில் வாகனம் செலுத்தியவர் கோப்பாய்ப் பொலீஸாரால் கைது!

யாழ்ப்பாணம்,ஜுன்27

மதுபோதையில் மினி பஸ்ஸைச் செலுத்திய சாரதியொருவர் நேற்றுக்காலை கோப்பாய்ப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

பயணிகளை ஏற்றிவந்த இந்த மினிபஸ்ஸைக் கோப்பாய்ப் பகுதியில் வைத்துப் பொலீஸார் மறித்துச்சோதனையிட்டனர். அப்போது மேற்படி சாரதி மதுபோதையில் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன், அவரிடம் வாகனத்துக்கான ஆவணங்கள் இல்லாமையும் தெரியவந்தது.

இதனையடுத்துக் குறிப்பிட்ட மினிபஸ்ஸைக் கோப்பாய்ப் பொலீஸ் நிலையத்துக்கு எடுத்துச்சென்றனர்.

இச்சம்பவம் தொடர்பாகச் சாரதி மீது நீதிமன்றில் பொலீஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்று பொலீஸ நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## அனலைதீவில் குரங்கினால் பொதுமக்கள் அச்சம்!

ஊர்காவற்றுறை,ஜுன்27

அனலைதீவுப் பகுதியில் குரங்கு ஒன்று குடிமனைக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்துவருவதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

தினமும் மாலைவேளைகளில் இந்தக் குரங்கு குடிமனைகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரிவதாகவும் - அதனை விரட்ட முற்படும் பொதுமக்களை அது கடித்தும், தாக்கியும் வருவதாகவும் - கூறப்படுகிறது.

அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய மாணவன் சு.பகீரதன் (வயது 14) கடந்தவாரம் இந்தக் குரங்கினால் கடியுண்டார். இன்னும் சில பொதுமக்களும் குரங்குக் கடிக்கு இலக்காகினர்.

இந்தக் குரங்கு இப்பகுதியிலுள்ள கடற்படைமுகாமில் வளர்க்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை - இந்தக் குரங்கு கடந்தவாரம் கடற்படைச் சிப்பாய்கள் இருவரைக் கடித்துக் காயப்படுத்தியதாகவும் கூறப்படுகிறது. (ஒ-4-16)

### நாளை

ஆனி 14
திங்கட்கிழமை
(28.06.2004)
திதி : ஏகாதசி
பின்னிரவு 2.48
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல் 5.35
சயன ஏகாதசி விரதம்
சுபநேரம்: 11.56- 1.20
ராகுகாலம்: 7.26 - 8.53
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

வாழ்வில் உயரவேண்டும் என்று உங்கள் மனத்துக்குக் கட்டளையிட்டால் அதை நிறைவேற்றச் செயலிலும் இறங்குவீர்கள்.

## விருது பெறும் பத்திரிகையாளர்



இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் அவை நடத்திய கடந்த வருடத்திற்கான சிறந்த பத்திரிகையாளர் தேர்வில் வடபகுதியில் இடம்பெற்ற சமகாலப்பிரச்சினைகளையும் சுவாரஸ்யமான செய்திகளையும் வழங்கியமைக்கான சிறந்த விருதினை மூத்த தமிழ்ப்பத்திரிகையாளரும் புலோலியைச் சேர்ந்தவருமான எஸ்.தில்லைநாதன் பெற்றுள்ளார்.

எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பு மவுண்ட்லவினியா ஹோட்டலில் நடைபெற ஏற்பாடாகியுள்ள விருது வழங்கும் வைபவத்தில் இவருக்கான விருது வழங்கப்படவுள்ளது.

1967ஆம் ஆண்டு முதல் கண்டியிலிருந்து வெளிவந்த செய்தி' வார இதழின் மூலம் பத்திரிகை உலகில் பிரவேசித்த இவர், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையின் நெல்லியடி செய்தியாளராக 1970ஆம் ஆண்டு சேர்ந்துகொண்டார். இவர் 1972ஆம் ஆண்டு வீரகேசரியின் புலோலி நிருபராகப் பணிபுரியத் தொடங்கினார். அக்காலப்பகுதியில் வீரகேசரியில் வயதில் குறைந்த இளம் செய்தியாளராக விளங்கியவர் இவரே.

1987இல் இவர் வீரகேசரி பத்திரிகையின் வடமராட்சி செய்தியாளரானார். விடுதலைப் போராட்டம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்திலும், இடப்பெயர்வுகள், அனர்த்தங்கள் நிகழ்ந்த கால கட்டத்திலும் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்தார். இலங்கை, இந்தியப்படைகளாலும், அரசியல் வாதிகளாலும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பத்திரிகையாளர் என்ற வகையில் பல்வேறு அச்சுறுத்தல்களுக்கு முகங் கொடுத்தும் அதற்கு அஞ்சி ஒடுங்கிவிடாது தொடர்ந்தும் செய்திப் பணியாற்றிவருகிறார்.

'உதயன்' நாளிதழின் ஆரம்ப காலத்திலிருந்து வடமராட்சிப் பிரதேச செய்தியாளராகவும் இவர் பணியாற்றி வருகிறார். இம்முறை இலங்கைப் பத்திரிகையாளர் அவையின் விருது பெறும் வடபகுதிப் பத்திரிகையாளர் இவர் மட்டுமே.

இவருக்குக் கடந்த ஆண்டு தமிழ் ஊடகவியலாளர் சங்கமும் விருது வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கைத்தொழிற்சாலைகளின் விவரங்கள் திரட்டப்படும்

யாழ்ப்பாணம்,ஜுன்27

குடாநாட்டில் உள்ள கைத்தொழிற்சாலைகளின் விவரங்கள் சேகரிக்கப்படவிருக்கின்றன.

யாழ். உப பிராந்திய மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பொறுப்பதிகாரி வி.சத்தியகுமாரின் தலைமையில் இந்த விவரங்களைத் திரட்டும் பணி இடம்பெறும்.

குடாநாட்டின் பல பகுதிகளிலுமுள்ள கைத்தொழிற்சாலைகளின் விவரங்கள் அனைத்தும் உள்ளூராட்சிச் சபைகள் மூலம் திரட்டப்படவுள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கிவரும் 80 வகையான கைத்தொழிற்சாலைகளுக்கும் உள்ளூராட்சி மன்றத் திட்டமிடற் பொறுப்பதிகாரியூடாக ஆய்வுப்படிவங்கள் வழங்கப்படவுள்ளன.

கைத்தொழிற்துறையில் ஈடுபடும் உற்பத்தி நிறுவனங்கள் அதற்கான படிவங்களை உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் உள்ளூராட்சி உதவியாளர்களிடம் பெற்று, அவற்றைப் பூர்த்திசெய்து 9ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த உள்ளூராட்சி சபைகளில் கையளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-6-185)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தரமான Prima Broiler அதி விசேட பேட்டுக் குஞ்சுகள் 05.07.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். பருத்தித்துறைக் கிளையிலும், Suddi Farm (வட்டுக்கோட்டை)இலும் பெற்றுக் கொள்ளலாம். முன்கூட்டிப் பதிவுசெய்யவும். க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33483)

சாவகச்சேரி, டச்சு வீதி, மருதடிச் சந்தியில் வீடு கட்டுவதற்குகந்த தென்னை வளம் உள்ள 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.சி.கமலநாதன், கந்தசுவாமி கோயில் வீதி, சங்கத்தானை.
T.P.: 0777 676593. (33418)

Pure Bred Dobermann, Pincher ஆண் நாய்க்குட்டி Dachshund நாய்க்குட்டிகளும் உடன் விற்பனைக்குண்டு. க.தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33482)

DASHHUND பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.உருத்திரன், 82/7, செட்டித்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (33481)

பருத்தித்துறை, புலோலி தெற்கு, சிலுத்தில் பெரியதம்பிரான் கோயில் சூழலில் அமைந்துள்ள 30 பரப்பு நெற் காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: K.C.சிவசுப்பிரமணியம், இல.51, பிறவுண் வீதி, முதலாவது ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-35749)

நல்ல நிலையிலுள்ள (R 60) குளிர் சாதனப்பெட்டி (REFRIGERATOR) மற்றும் BENLY SUPER HONDA (105CC) மோட்டார் சைக்கிள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: சாயிராம், 101, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 0712324846 (33495)

2½ பரப்புக் காணி (கிணற்றுப் பங்குடன்) கோண்டாவில் மேற்கில் விற்பனைக்குண்டு. தொடர்பு:
T.P.:4590959. (33478)

யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில் சிவலிங்கப்புளியடியில் பிரதான வீதியில் சகல வசதிகளையும் கொண்டமைந்த வீடு, 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0814485483 (சி-35777)

Super Cup 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திரு. தியாகராஜா, 39, நீராவியடி, யாழ்ப்பாணம். (33491)

எம்மிடம் IMT ட்ராக்டர் பெட்டியுடன் (ரெயிலருடன்) விற்பனைக்குண்டு. தொடர்பு: க.செல்லையா, சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய். (33488)

தரமான நம்பர் 1 பகிரா இன புறொயிலர் குஞ்சுகளும், பிறீமா இன சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும் 30.06.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.No. 3529, 2867. P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (33305)

40 நாள்கள் நிரம்பிய நாய்க்குட்டிகள் [Belgian Shepherd (Black) x German Shepherd] விறபனைக்குண்டு. தொடர்பு: பாலா, இல.18, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். T.P.: 021 222 6875. (33521)

TECHNOSAT டிஜிற்றல் றிசீவர் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0777 156994.(33508)

யாழ்ப்பாணம், நாவலர் வீதிக்கு அண்மையில் நன்னீர்க் கிணற்றுடன் கூடிய 3½ பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்களில் மாலை 6 மணிக்குப் பின் தொடர்புகொள்ளவும். மே/பா. S.மகேந்திரன் (மாஸ்ரர்), 284, இராசாவின் தோட்டம் வீதி அருகில், நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33525)

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் அமைந்துள்ள ஸ்ரான்லி பாடசாலைக்கு முன் ஒழுங்கையில் (வேலப்பர் வீதி) சுற்றுமதிலுடன் 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விவரங்களுக்கு: இல. 144, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 7654 (33527)

## தவறிவிட்டது

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைச் சேர்ந்த தம்பிமுத்து யோகநாதன் என்பவரது சாரதி அனுமதிப் பத்திரம், வாகன காப்புறுதிப்பத்திரம், வரிப்பத்திரம், இ.போ.ச. அடையாள அட்டை என்பன 24.06.2004 வியாழக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரியிலோ அல்லது யாழ். பஸ்நிலையக் காரியாலயத்திலோ ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (33519)

ஆனந்தவேல் தீபனின் தேசிய அடையாள அட்டை (722020839V), வங்கிப் புத்தகம், காசோலை என்பன அடங்கிய கறுத்த நிற (தோளில் மாட்டும்) பை 24.06.2004 வியாழன்று வல்லைவெளிக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'உதயன்' விளம்பரப் பிரிவில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (33531)

## வாடகைக்கு

முனீஸ்வரா வீதியில் INT கிளினிக மேல்மாடியில் புதிதாக அமைக்கப்பட்ட 4 அறைகளும் பல்கனியும் வாடகைக்குண்டு. (நிறுவனங்கள், கணனிப் பயிற்சி நிலையம் முதலியவற்றுக்கு உகந்தது.) வாகனத் தரிப்பிட வசதியும் உண்டு. தொடர்பு T.பொன்னம்பலம். T.P.: 222 2792 (33526)

### சிறுகுறிஞ்சா பவுடர்

*சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A.C யுடன் கல்சியம், இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும்.*
தொடர்பு: BioTec International
இல. 131/2, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(33500)(42) T.P.: 4590907

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1976இல் பிறந்த, உதயத்துச் செவ்வாய் உடைய, கனடாவில் கல்விகற்று, பிரஜாவுரிமை பெற்று, தொழில்புரியும் அழகிய மணமகளுக்குப் படித்த நற்பண்புகளுடைய தொழில்புரியும் மணமகனை உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். விளம்பர இல. 2313 மே/பா. உதயன். (33522)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, UK இல் வசிக்கும், 1970இல் பிறந்த, உதயத்துச் செவ்வாயுடைய நற்பண்புகள் கொண்ட மணமகனுக்கு லண்டன், கனடா தவிர்ந்த ஏனைய நாடுகளில் வசிக்கும் பிரஜாவுரிமையுடைய நல்லொழுக்கமுடைய அழகிய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். ஜாதகத்துடன் தொடர்புகொள்ளவும். விள. இல.2314. மே/பா உதயன். (33253)

## காலாவதியான உணவுப் பொருள்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்27

காரைநகர் தோப்புக்காட்டுப் பகுதியில் அப்பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட திடீர்ப் பரிசோதனை நடவடிக்கையின்போது காலாவதியான பல உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற இப்பரிசோதனை நடவடிக்கையில் தண்டுபிடிக்கப்பட்ட சமபோஷா உட்பட காலாவதியான பல உணவுப் பொருள்கள் அனைத்தும் கடை உரிமையாளரின் அனுமதியுடன் அழிக்கப்பட்டன. (எ-15)

## பதவி வெற்றிடம்

### காப்புறுதி முகவர்கள் தேவை

**கல்வித் தகைமைகள்:**
**க.பொ.த.சாதாரண தரம் (கணிதம் உட்பட), க.பொ.த.உயர்தரம்**
**வயதெல்லை: 18-55 வரை**

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் 05.07.2004 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

உங்கள் விண்ணப்பக் கடித மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் *"காப்புறுதி முகவர்கள்"* எனக் குறிப்பிட்டு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மனிதவள முகாமையாளர்,
**யூரோவில் முதலீட்டு நிறுவனம்,**
இல.17, செம்மணி வீதி,
(கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அருகில்) நல்லூர்.
(சி-35831) (34-18-19-24)

## டாக்டர், தாதிகள் தேவை

எமது வைத்திய நிலையத்திற்கு முழுமையாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றக்கூடிய டாக்டரும், பயிற்றப்பட்ட தாதியும் பயில விரும்புபவர்களும் தேவை. நேரடியாக எமது நிலையத்துடன் தொடர்புகொள்ளவும்.

அப்பலோ வைத்திய நிலையம்,
இல.16, பலாலி வீதி,
(ஆரியகுளம் அருகில்)
நிர்வாகம். (33529)(42-18-19-24) யாழ்ப்பாணம்.

## கூறுவிலை கோரல்

எமது சங்கத்திற்குச் சொந்தமான "சமுத்திராதேவி" என்னும் இயந்திரப் படகை (ஓடமுடியாதுள்ளது) நெடுந்தீவில் இருந்து இயந்திரப் படகுமூலம் கட்டியிழுத்து மன்னார் ஊடாக நீர்கொழும்புக்குக் கொண்டு செல்வதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது.

கூறுவிலைகள் 05.07.2004 ஆம் திகதிக்குள் 'தலைவர், நெடுந்தீவு, பல நோ.கூ.சங்கம், நெடுந்தீவு' எனும் விலாசத்திற்குத் தபாலில் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்,
25.06.2004 (சி-35845)(34-18-19-24) பல நோ.கூ.சங்கம், நெடுந்தீவு.

## யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன் இலவச ஆங்கில நேரடி வகுப்பு

### ஒருமணி நேரத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் கதைக்க முடியும்

சந்தேகம் வேண்டாம். இதுவரை முப்பதாயிரத்துக்கு மேற்பட்டோர் பயிற்சிபெற்று நிரூபிக்கப்பட்ட பாடநெறி.
இடம்: றிம்மர் மண்டபம் (TRIMMER HALL)
யாழ். மத்திய கல்லூரி அருகில்
காலம்: 27.06.2004, 28.06.2004
ஞாயிறு மற்றும் திங்கட்கிழமை
வகுப்புகள் (ஏதாவதொரு வகுப்பில் கலந்துகொள்ளலாம்)

| | |
|---|---|
| காலை 9.00 முதல் 10.00 | காலை 10.00 முதல் 11.00 |
| மாலை 2.00 முதல் 3.00 | மாலை 3.00 முதல் 4.00 |
| மாலை 4.00 முதல் 5.00 | மாலை 5.00 முதல் 6.00 |

குறிப்பு: *ஞாயிறு காலை வகுப்புகள் நடைபெறமாட்டாது.*

### அனுமதி இலவசம்

பாடசாலை மாணவர்கள், பெற்றோர், கணனி, உயர்கல்வி மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், வீட்டுப்பெண்கள், இளைஞர், யுவதிகள், பட்டதாரிகள், அரச தனியார் அலுவலர்கள், ஆசிரியர்கள் -

அனைவரும் கலந்துகொள்ளலாம்.

கலந்துகொள்ளும் அனைவருக்கும் கற்கைநெறி வழிகாட்டியும் கலந்துகொண்டதற்கான சான்றிதழும் இலவசம்.

**குறிப்பு:** கடந்த காலங்களில் வகுப்புகளில் கலந்து சான்றிதழைப் பெறாதவர்கள் நேரடியாக வந்து சான்றிதழைப் பெற்றுக் கொள்ளலாம். எமது பாடநெறிகளுக்கான புத்தகங்கள் கிடைக்கப் பெறாதவர்களும் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.


PSALM INSTITUTE OF ENGINEERING AND TECHNOLOGY
(சி-35829)(34-19)

# STUDY IN INDIA

## SSM College of Engineering affiliated to ANNA UNIVERSITY ( Channai)

## Garden City College affiliated to UNIVERSITY of BANGALORE





**A/L 2004 STUDENTS**
Arrangements have been made for enrolment with pending results

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.E. Information Technology | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Computer Science and Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Electronics and Communication Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.E. Mechanical Engineering | 4 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Information Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Computer Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| B.Sc. Apparel and Fashion Technology | 3 Year | Pass in All Subjects with Maths & Physics |
| M.S.C. Information Technology | 5 Year | Pass in All Subjects in any discipline |

| COURSES | DURATION | G.C.E. (A/L) PASSES NEEDED |
|---|---|---|
| B.Sc. (Computer Science) | 3 Year | Maths, Physics & Statistics |
| B.Sc. (Fashion & Apparel Design) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Sc. (Microbiology) | 3 Year | Chemistry and Biology |
| B.Sc. (Genetics) | 3 Year | Chemistry, Physics, Biology, Zoology, Botany |
| B.Sc. (Biotechnology) | 3 Year | Chemistry, Physics, Biology |
| BCA. (Bachelor of Computer Applicants) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BBM. (Bachelor of Business Management) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| BHM. (Bachelor of Hotel Management) | 4 Year | Pass in All Subjects in any discipline |
| B.A. (Journalism) | 3 Year | Pass in All Subjects in any discipline |
| B.Com (Computers) | 3 Year | Pass in All Subjects in any discipline |

*Partial SCHOLARSHIPS for students with average of 75 marks in A/L exam*

யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு
Mr. K.Jegaeswaran (B.Sc, Dip. in Edu.)
(Chemistry Teacher - J/Vembady Girls High School)
ANDRA, உப்புமடச்சந்தி. K.K.S Road, கோண்டாவில்
Telephone :- 021-4590268 or 9

*Already many Sri Lankan Students are studying in these Colleges - REFERENCE AVAILABLE*

| | | | |
|---|---|---|---|
| | ரா | வெ | சூ., பு., சனி |
| | இராசிச் சக்கரம் | | செவ். |
| | | | வியா. |
| | | கே. | சந். |

# இந்த வார இராசி பலன்

## 27-06-2004 - 03-07-2004

**மாற்றம் :**

**27.6.2004இல் சித்திரை 2 நட்ஷத்திரம் - கன்னி ராசியில் சந்திரன் நிற்கும்.**

**28.6.2004இல் புதன்கிரகம் கடகராசியில் மாறும்.**

காலங்கள் மாறும் கருத்துக்கள் மாறும். ஆனால், துவேசமனோநிலை மாறாது. இதனை உலகம் கணிப்பீடு செய்யும். அரசியல்வாதிகள் கருத்துக்களைக் கலக்கியபடி இருப்பார்கள். நிதிப்பற்றாக்குறை, சமாதானப் பேச்சின் இழக்கம, நடுநிலைமையாளர்கள் மாற்றம், இந்தியா மெல்ல எட்டிப்பார்க்கும், வடக்கே கலக்கம், தெற்கே மக்கள் கருணாநிதி பக்கம், மத்தியகிழக்கில் பொருமல், ஈராக்கில் மக்கள் புரட்சி செய்யும் நிலை. ஈராக்கில் வன்செயல்கள் அதிகரிக்கும். இந்து சமுத்திரம், அரபிக் கடலில் காற்றழுத்தம் ஏற்பட்டுத் திடீரென மழை கொடுக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

கருத்துக்கள் மாறும், வாழ்க்கையில் ஒரு தென்பு பிறக்கும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் கலக்கம் எதிர்ப்பாலாரால் ஆதரவு கிடைக்கும். அந்நியர் உதவுவார்கள். மாணவர்களுக்குக் கல்வியில் மாற்றம் ஏற்படும். பித்தக் கொதிப்பு, சளித்தொல்லை கொடுக்கும். பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், குருத்துறையினர்கள், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### இடபம்

திட்டமிட்டு பணம் சம்பாதிப்பர். பிரயாணச் சிந்தனை, கோவில செல்லல், புதிய நண்பர்களின் உதவி கிடைத்தல், குடும்பச் செலவுகள் அதிகரித்தல், இடமாற்றங்களால் நன்மை ஏற்படல். மாணவர்களுக்கு கல்விச் சிறப்புவரும். கால்நோ, நாரிப்பிடிப்பு, பணவரவு அதிகரிக்கும் காலமாகும். சங்கீதத்துறை, ரீ.வீ.டெக் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வெள்ளி, சனி.*

### மிதுனம்

மனக்குழப்பநிலை, அவசரத்தால் அடிக்கடி பொருளைத் தவறவிடுவீர்கள். மேலிடத்து அதிகாரிகள் உதவி செய்து தருவர். காரிய அனுகூலங்கள், புத்திரரால் யோசனை அதிகரிக்கும். அந்நியர்கள் உதவுவார்கள். சளித்தொல்லை, மறதி கொடுக்கும். உத்தியோகத்தர்கள், குருத்துறையினர், செய்தித்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், சனி.*

### கடகம்

குடும்பத்தில் அபிப்பிராய பேதம் ஏற்பட இடம் உண்டு. சகோதரர் உதவுவர். சகோதரர்களுக்காக ஓடியாடித் திரிவீர்கள். வீடு,வாகனச் சிறப்பு அடைவீர்கள். தொழில் ஸ்தானத்தில் அன்னிய நண்பர்கள் உதவுவார்கள். சலவருத்தம், உஷ்ண பீடைகள் கொடுக்கும். சட்டத்துறை, மருந்துத்துறை, குருத்துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள் :- திங்கள், புதன், வியாழன், சனி.*

### சிங்கம்

குடும்பத்தினருக்காக ஓடியாடித் திரிவீர்கள். பணவரவு கொடுக்கும். சகோதரங்களைப பகைப்பீர்கள். மாணவர்களுக்குக் கல்விச் சிறப்புக்கொடுக்கும். பல்வருத்தம், பித்தக்கொதிப்பு, தூரத்துச் செய்திகள் மன நிறைவைக் கொடுக்கும். வீட்டுச்செலவுகள், வாகனச் செலவுகள் அதிகரிக்க இடமுண்டு. குருத்துறை, இசைத்துறை, விடுதித்துறை தொடர்பானவர்களுக்குப் பணவரவு அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### கன்னி

கலைத்துறையில் நாட்டம் அதிகம், தொழில்ஸ்தானத்தில் தளம்பல்நிலை, எதிர்ப்புகள் மேலிடும் , அடிக்கடி படபடப்பு, அலைச்சல் என்பன கொடுக்கும. தூரத்துச் செய்திகளால் மனக்கவலை ஏற்படல், பெரியவர்கள் உதவிகள் செய்துதருவர். சங்கீதத்துறையினர்களுக்கு அதிக நன்மைகள் ஏற்பட இடமுண்டு.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன் வியாழன், வெள்ளி, சனி.*

### துலாம்

ஏன் அதிகம் யோசிக்கிறீர்கள்? எடுத்தவுடனேயே வெற்ற'ச் செயற்பாடுகள் அதிகரிக்கும். இனஜனப் பகை, அரச அதிகாரிகள் உதவி செய்வர். உங்கள் இரகசியங்களைக் காப்பாற்றுவீர்கள். அதனால், இலாபங்கள் அடைவீர்கள். பதவியால் பிறர் உதவுவர். நீங்களும் உதவுவீர்கள். கமிஷன் தொழில், வங்கி, பணத்துடன் சம்பந்தமானவர்கள், சட்டத்துறை, பாதுகாப்புத் துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### விருச்சிகம்

பணம்பற்றி 9 இல் உள்ள செவ்வாய் யோசிக்கச்செய்யும். சகோதரர்களுடன் வாக்குக்கலகம் கொடுக்கும். திட்டமிட்டபடி தொழிலிடத்தில் செயற்படாது குறைகேட்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். பழைய கடன்கள் வசூலாகும். தூரத்துச் செய்திகள் மனஆறுதலைத் தரும். இரும்பு, மருந்து தொடர்பானவர்கள் நன்மை அடைவர்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வியாழன், வெள்ளி.*

### தனுசு

தொழில் ஸ்தானத்தில் திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். அன்னியர் உதவிகள் கிடைக்கும். மனைவியின் உடல்நிலை பாதிக்கும். சகோதர வழியினர்கள் உதவுவார்கள். எதிர்ப்பாலாருடன் நிதானமாக இருந்து உங்கள் கருத்துக்களைப் பரிமாறவும். அரசியல்வாதிகள் உதவுவார்கள். தூரப்பிரயாணங்களைத் தவிர்க்கவும். குருத்துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: ஞாயிறு, புதன், வெள்ளி*

### மகரம்

அடிக்கடி கோவிப்பீர்கள். அதனால், சந்தர்ப்பங்களை இழந்துவிடுவீர்கள். நண்பர்கள் உதவசெய்யமாட்டார்கள். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு ஆளாகுவீர்கள். இடமாற்றங்கள் சிலருக்குத் திடீரெனக் கொடுக்கும். குருத்துறை, மருந்து, பிரயாணத்துறையினர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்., வியாழன், வெள்., சனி*

### கும்பம்

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளவும், தொழில் ரீதியில் நனமைகள் கொடுக்கும். குடும்பத்தில் பிள்ளைகளுக்கோ சகோதரத்திற்கோ நன்மைகள் அதிகரிக்கும். புதிய பொறுப்புக்களால் ஓடியாடித் திரிவீர்கள். இடமாற்றங்கள் நன்மை கொடுக்கும். புதிய நண்பர்களால் நன்மைகள் அதிகரிக்கும். வாகனத்தால் செலவுகள் அதிகரிக்கலாம். கைகால் பிடிப்பு அல்லது காயம் வரும். குருத்துறை, சட்டத்துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்., வியாழன், சனி*

### மீனம்

புதிய திட்டங்கள் வெற்றி பெறும். நண்பர்களின் உதவிகள் அதிகரிக்கும். தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சியைக் கொடுக்கும். குடும்பத்தில் சிறப்பு, மகிழ்ச்சி கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மைகள் கொடுக்கும். தொழில்ஸ்தானத்தில் நன்மைகள் அதிகரிக்கும். காலில் நோய், உளைவு, விறைப்பு கொடுக்கும், வியாபாரிகள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்., வியாழன், சனி.*

**மகாதேவா ஜோதிடம்**

# 43 ஆவது ஆண்டு நிறைவில் மக்கள் வங்கி; கைத்தொழில்களுக்குக் கடன் வழங்கும்

## செய்தியாளர் சந்திப்பில் வங்கியின் நிறைவேற்று அதிகாரி

யாழ்ப்பாணம்,ஜூன்27

மக்கள் வங்கி தனது 43 ஆவது ஆண்டு நிறைவைமுன்னிட்டு, சிறிய, நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகளுக்குத் துரித கடன் திட்டங்களை வழங்கவுள்ளது.

- இவ்வாறு தெரிவித்தார் மக்கள் வங்கியின் வடவலய நிறைவேற்று அதிகாரி சி.இளம்பிறைநாதன்.

மக்கள் வங்கியின் 43 ஆவது ஆண்டு விழா தொடர்பான செய்தியாளர் சந்திப்பு நேற்று முன்தினம் கன்னாதிடடி மக்கள் வங்கிக்கிளையில இடம் பெற்றது. இந்தச் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் இது விடயமாக மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் வங்கி தனது சேவையை நிறைவேற்ற முடியாத இடங்களில் நடமாடும் சேவை மூலம் தனது வங்கிச சேவையை வழங்கவுள்ளது.

அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் இந்த நடமாடும் சேவை ஆரம்பிக்கப்படும். நாட்டில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் பணிகளில் யாழ்ப்பாணக் கிளைகளின் செயறபாடுகள் பாராட்டுக்குரியனவாகவுள்ளன.

மக்கள் வங்கிமூலம் மாணவர்களுக்கு உதவும் திட்டங்கள் யாழ்ப்பாணத்திலேயே கூடுதலாக முன்னெடுக்கப்படுகின்றன. யாழ்ப்பாண மக்கள வங்கிக்கிளைகளின் செயற்பாடுகளைக குடாநாட்டிலுள்ள வர்த்தக சங்கங்களும் பாராட்டியுள்ளன.

அத்துடன், மக்கள் வங்கியின் செயற்பாடுகளில் தூய தமிழ் மொழிப் பிரயோகம் முதன்மையானது. இதனால், சாதாரண மக்களும இலகுவில் வாசித்து விளங்கிக்கொள் ளக்கூடிய வகையில் வங்கியின் கொடுக்கல் வாங்கல், படிவங்கள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

போரினால் பெரும் அழிவுகளைக கண்டு புனரமைக்கப்பட்ட சாவகச்சேரி மக்கள் வங்கி முழுமையாகக் குளிரூட்டப்பட்ட நிலைக்கு மாற்றப்படவுள்ளது. - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் மு.க.சிவபாதவிருதையர், மக்கள் வங்கியின் உதவி முகாமையாளர் து.ரகு ஆகியோரும் இந்தச் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(எ-12)

# கொடிகாமம் மருந்தகத்தை தரம் உயர்த்தும் நடவடிக்கையைத் துரிதப்படுத்தக்கோரி மகஜர்

தென்மராட்சி,ஜூன்27

கொடிகாமம் மத்திய மருந்தகததை மாவட்ட வைத்தியசாலையாகத் தரம உயர்த்த மாகாண சுகாதார அமைச்சு வழங்கியுள்ள அங்கீகாரத்தைத் துரிதப்படுத்திச் செயற்படுத்துமாறு வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பிரதி மாகாணப்பணிப்பாளரை மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

மகஜரில் குறிப்பிட்டுள்ள மேலும் சில விடயங்கள் வருமாறு:-

மகப்பேற்று நிலையம் முழுநேரமும் இயங்கக் கூடிய வகையில் குடும்பநல சேவையாளரின் விடுதிப் புனரமைப்பு வேலைகளை விரைவில் ஆரம்பித்தல வேண்டும்.

·தென்மராட்சி கிழக்கில் உள்ள இந்த மகப்பேற்று நிலையத்தினை பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணிகளும் பயன்படுத்த வாய்ப்புள்ளதால் இவ்வைத்தியசாலைக்கு நிரந்தர அம்புலன்ஸ் வண்டியினை வழங்குதல்.

ஆஸ்பத்திரி முன்பாக உள்ள முட்கம்பி வேலியை மதிலாக அமைத்தல், தாய்சேய் சிகிச்சை நிலையம், மலேரியா இரத்தப்பரிசோதனை ஆகிய பகுதிகளுக்கு மின் இணைப்பை வழங்கல் வேண்டும் - என்ற கோரிக்கைகள் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(எ-117)

# எம்.பி. பதவியை ஏற்றதுமே மயோன் அதனை இராஜினாமாச் செய்வாராம்!

கொழும்பு,ஜூன்27

ஐக்கிய தேசியக் கட்சி தன்னிச்சையாக வழங்கியிருக்கும் தேசியப் பட்டியல் எம்.பி. பதவியை மயோன் முஸதபா ஏற்பாரா, இல்லை உதறி விடுவாரா என்பதை அவரது ஆதரவாளர்களே தீர்மானிப்பர்.

தேசிய ரீதியாக முஸ்லிம்களுக்கென அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான முனைப்பில் தாம் தீவிரமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில், ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் எம.பி. பதவியை ஏற்பது சாத்தியபபடாது என்றும் மயோன் முஸ்தபா கருதுகிறார்.

"சுயமரியாதையுடனும் சுதந்திரமாகவும் செயற்படவேண்டும் என்ற இலட்சியத்துடனேயே நான் எமது மக்களின் ஆதரவுடன் தேசிய ரீதியாகக் கட்சி ஒன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளேன்.

"வடக்கு-கிழக்கு, தலைநகர் என பல பாகங்களிலும் செறிந்து வாழும் புத்திஜீவிகளும், இளம்தலை முறையினரும், பல அனுபவமிக்க அரசியல் வாதிகளும் எமது முயற்சிக்குப் பக்க பலமாகத் திரண்டு நின்று ஆதரவளிக்கின்றார்கள். எனவே, ஆரம்பித்திருக்கும் இலட்சியப் பயணத்தை இந்த எம.பி. பதவியை ஏற்பதன் மூலம் இடை நடுவில் முறிக்க நான் விரும்பவில்லை. அதற்குப் பதிலாக எமது அமைப்பை பேரம்பேசும் ஒரு சக்தியாக உருவாக்குவோம்.

"நான் ஏற்கனவே ஐக்கியதேசியக கட்சியாலும், முஸ்லிம் காங்கிரஸினாலும் ஏமாற்றப்பட்டவன். என்னை நம்பி - என் பின்னால் அணி வகுத்து - நிற்கும் ஆதரவாளர்கள் எவராலும் ஏமாற்றப்படக் கூடாது. அதற்கான வாய்ப்பை நான் ஏற்படுத்தமாட்டேன.

"மேலும் இந்த நாடாளுமன்றத்தின் ஆயுள், நாள்கணக்கில் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தொங்கிக்கொண்டிருக்கும் இந்த நாடாளுமன்றத்தில் நானும் ஒட்டிக் கொள்ளவேண்டுமா? இதைப் புத்திசாலிகள் வரவேற்பார்களா? எனது ஆதரவாளர்களின் முடிவே எனது முடிவு!" - என்கிறார் மயோன் முஸ்தபா.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கடசியின் தலைமை அவருக்கு எம்.பி. பதவி வழங்கியதற்கு மதிப்பளிக்கும் வகையில் நாடாளுமன்றம் அடுத்த முறை கூடும்போது அங்கு பிரசன்னமாகி, பதவிப்பிரமாணம் செய்து கொண்டு, அன்றைய தினமே அப்பதவியை அவர் இராஜினாமாச் செய்வார் என நம்பகரமான தகவல்கள் தெரிவிததன.

சில சமயங்களில் நாடாளுமன்றத்தில் அன்றைய தினம் தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்றை அவர் வெளியிடக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

(க)





தாய்லாந்து சத்தியசாயி பல்கலைக்கழகத்தின் தலைவர் கலாநிதி ஆர்ற்ஓங் ஜூம்சாய் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் உரையாற்றுவதையும், அருகில் வாழ்நாள் பேராசிரியர் நந்தி, இலங்கைக்கான மொரிசியஸ் தூதுவர் தெ.ஈஸ்வரன், பேராசிரியர் சுனந்த, லொறோஜின் பரோஸ் அம்மையார் செ.சிவஞானம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்து கொண் டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படம்: அலுவலகப் படப்பிடிப்பாளர்.)*



# மல்லாகம் பதியில் எழுந்தருளியிருந்து
# புதன்கிழமை தோறும் புதுமை மலர் பொழிகின்ற
# சதாசகாய மாதா ஆலய
# பொன்விழாச் சிறப்பிதழ் = 27.06.2004

## சதாசகாய மாதாவின் ஓவியம் பற்றிய வரலாறு



### முன்னுரை

சதாசகாய மாதாவின் ஓவியம் பற்றி மிகப் பழைமையானதும் சிறப்பு மிக்கதுமான வரலாறு ஒன்று உண்டு. இந்த ஓவியத்தைச் செதுக்கு வண்ண ஓவியம் என்று அழைக்கின்றோம். ஏனெனில், அது புராதன கிறிஸ்தவ கலைவடிவங்களில் ஒரு குறிப்பிட்ட பாணியையும், மரபையும் சார்ந்ததாக இருக்கின்றது. வழக்கமாக ஒரு செதுக்கு வண்ண ஓவியம் ஒரு தட்டையான மரப்பலகையில் தீட்டப்பட்ட மத சம்பந்தமான ஓவியமாகும். இதன் பூர்வீகம் கீழைத் திருச்சபையாகும். அங்கு ஐந்தாம் நூற்றாண்டு தொட்டே இத்தகைய செதுக்கு வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. இவை புதுமையுள்ளன என்றும் அவற்றிலுள்ள தெய்வீக சக்தியில் விசுவாசம் கொண்டவர்களுக்கு அற்புதங்கள் பல நிகழ்ந்துள்ளன என்றும் நம்பப்படுகின்றது.

### அன்னையின் செதுக்குவண்ணஓவியம்

சதாசகாய மாதாவின் அற்புத ஓவியம் 1499ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் நாள் உரோமாபுரியிலிலுள்ள புனித மத்தேயு ஆலயத்தில் வைக்கப்பட்டது. ஒரு வர்த்தகன் கிறீட் தீவிலுள்ள ஒரு கோயிலில் இருந்து அதைத் திருடிவந்து தனது வீட்டில் வைத்து வணங்கி வந்தான் என்றொரு கதை உண்டு. ஆனால், மாதாவோ அதை விரும்பாது குடும்பத்திலுள்ள ஒரு சிறுமியிடம் தான் ஓர் ஆலயத்தில் வைத்து வணங்கப்பட விரும்புவதாகத் தெரிவித்தார். அச்சிறுமிக்குத் தேவதாய் அளித்த செய்தியில் தாம் "சதாசகாயம் புரியும் பரிசுத்த மரியாய்" என்று வெளிப்படுத்தினார். எவ்வாறோ, அந்த ஓவியம் மத்தேயு ஆலயத்தை அடைந்து அங்கு 300 ஆண்டுகளாக வணங்கப்பட்டு வந்தது. பின்னர், பிரெஞ்சுக்காரர் ரோமாபுரியைக் கைப்பற்றி அங்குள்ள சில ஆலயங்களை அழித்தபோது புனித மத்தேயு ஆலயத்திற்குப் பொறுப்பாக இருந்த அருஸ்தீன் சபையைச் சேர்ந்த ஐரிஸ் துறவிகள் பாதுகாப்புக்காக அந்த ஓவியத்தை ஆலயத்திலிருந்து எடுத்து ஒரு சிற்றாலயத்தில் வைத்தனர். பின்னர் 1866இல் ரோமாபுரியிலிருந்த இரட்சகர் சபையினர் அதை எடுத்துப் புனித அல்பொன்ஸஸ் ஆலயத்தில் வணக்கத்திற்காக வைத்தனர்.

### அற்புத ஓவியத்தை வரைந்தவர் யார்?

புனித சதாசகாய மாதா ஓவியம் மிகவும் பழைமையானதாகக் காணப்படுகிறது. புனித லூக்காஸ் ஒரு நற்செய்தி எழுதியதுடன், ஓவியங்களும் வரைந்தார் என்ற ஒரு பழம் பாரம்பரியமும் உண்டு. புனித விளாடிமீர் மாதா திருநாட்செபம் ஒன்று பின்வருமாறு கூறுகின்றது. "கிறிஸ்துவின் நற்செய்தியை எழுதிய தெய்வீக எழுத்தாளரான புனித லூக்காஸ் உமது வணக்கத்திற்குரிய ஓவியத்தை வரையவும் அனைத்தையும் படைத்தவரான யேசுவை உமது கரத்தில் ஏந்தவும் இறைவனது குரலொலியால் ஊக்குவிக்கப்பட்டார்" புனித லூக்காஸ் தேவதாயின் ஓவியத்தை வரைந்து அந்தியோக்கில் உள்ள தியோபிலுவுக்கு அதை அனுப்பினார் என்று ஒரு பழங்கதை உண்டு.

இருபதாம் நூற்றாண்டில் பேரரசியூடோசியா, புனித லூக்காஸ் வரைந்த தேவதாயின் ஓவியத்தை அந்தியோக்கியாவில் கண்டெடுத்து கொன்ஸ்தாந்திநோபிளிலிருந்த தன் உறவினரான புனித புல்கேரியாவுக்கு அனுப்பிவைத்தார். புனித புல்கேரியா தான் நகரின் தென்கிழக்குப் பகுதியில் கட்டிய ஓர் ஆலயத்தில் அதை வணக்கத்திற்கு வைத்தான். இது மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்றது. இந்த ஓவியம் பல தடவைகள் கிரேக்கப் படைகளால் போர்க்களத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. அது ஊர்வலத்தில் கொண்டுசெல்லும் புனிதப் பொருளாகவும் இருந்தது. எத்தனையோ தடவை அதன் மகிமையால் கீழை ரோமப் பேரரசு காப்பாற்றப்பட்டதாகவும் கூறப்பட்டது. அது மக்களைப் பாதுகாத்தமையாலும் "தேவதாயின் பாதுகாவல" என்ற ஒரு பெருநாள் மாதாவின் பெயரால் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டாடப்பட்டு வந்தது.

### ஓவியத்தில் காணப்படும் உருவங்கள்

சதாசகாய அன்னையின் செதுக்கு ஓவியம் குழந்தை யேசுவைக் கரத்தில் ஏந்தியபடி காட்சியளித்தது. தேவதாயின் முகம் துக்கம் நிறைந்ததாகக் காணப்படுகிறது. ஆனால், தனது துக்கத்தை அல்ல தனது திருமகனின் பாடுகளைத் தியானித்த வண்ணம் தோற்றமளிக்கிறது. ஓவியத்தின் பின்னணியில் தேவதூதர் பாடுகளின் கருவியை ஏந்தி நிற்பது, யேசுவின் பாடுகளைப் பற்றிய நினைவுதான் அவனது துக்கத்துக்குக் காரணம் என்பதைக் காட்டுகிறது. சிலுவை, ஈட்டி, கடற்பஞ்சு, ஆணிகள் ஆகியவையே பெரும்பாலும் காட்டப்படும் கருவிகள்.

பதினைந்தாம் நூற்றாண்டிலோ, அதற்குச் சற்று முன்னரோ கிறீட் தீவில் உள்ள ஓவியன் ஒருவனால் வரையப்பட்ட தேவதாயின் ஓவியமே எமக்குக்கிடைத்துள்ளது. அதுவே நாம் இன்று வணங்கும் சதாசகாய மாதா ஓவியம் எனக் கூறப்படுகின்றது. ஆகவே, புனித லூக்காஸ் வரைந்த ஓவியம் கிறீட் தீவில் ஓவியனால் கார்டியோதிஸர் பாணியில் முகபாவம் மென்மையாக்கப்பட்டு இறுதி வடிவம் பெற்றது எனலாம். அதிதூதர்களான கபிரியேல், மிக்கேல் ஆகியோர் ஓவியத்தில் காட்சி தருகிறார்கள். கபிரியேல் சிலுவையையும் யேசுவை அறைந்த ஆணிகளையும் தாங்கி நிற்கின்றார். மிக்கேல் ஈட்டியையும், காடி நிறைந்த கடற்பஞ்சையும் வைத்திருக்கின்றார். இந்தக்காட்சியால் அச்சமுற்ற குழந்தையேசு தாயின் அரவணைப்பைத் தேடுகின்றார்.

### ஆங்கில அட்சரங்களும் அதன் அர்த்தங்களும்

மேலும் இதில் தெரிகின்ற ஆங்கில எழுத்துக்கள் போன்றவை கிரேக்க எழுத்துக்கள். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அர்த்தத்தைக் கொண்டுள்ளன. M என்ற எழுத்தும் "IC XC JX" போன்ற எழுத்துக்களும் தென்படுகின்றன. JX என்பது "இயேசுக்கிறிஸ்துவைக்" குறிக்கிறது.

சதாசகாய மாதா ஓவியத்தினால் பல புதுமைகள் நிகழ்ந்துள்ளன. இறந்தவர்கள் உயிர் பெற்றமையும், மிகக்கடும் நோயாளிகள் குணமடைந்தமையும் இப்புதுமைகளில் குறிப்பிடத்தவைகளாகும். ஓவியத்தின் முன் விசுவாசத்தோடு செப்பபவர்கள் இறைவனது வல்லமை மூலம் தேவதாயை நிறைவு செய்கிறார்கள். தேவதாயின் கரம் உலகின் ஒளியும் வல்லப மகிமையுமான அவளது குழந்தையைச் சுட்டிக்காட்டுகிறது.

### அர்த்தம் பொதிந்த அடையாளங்கள்

மேலம்பல நூற்றாண்டுகளாக இந்த ஓவியம் குறித்து எழுந்த சிந்தனைகளில் இருந்து பல அர்த்தங்கள் கூறப்படுகின்றன. இவற்றில் ஒன்று குழந்தையின் மேல் நோக்கிய பாதமும் அதிலிருந்து தொங்கும் காலணியும் பற்றியது. உள்ளங்காலைக்காட்டுவது தாழ்ச்சியைக் குறிக்கும். இறைமகன் தம்மைத் தாழ்த்தி மனுவுரு எடுத்தார்.

அடுத்த பொருள் காலணியைக் குறித்தது. குழந்தை ஆறுதலுக்காகத் தாயை நோக்கி ஓடும்போது அது கழன்றுவிட்டது போலத் தோன்றுகின்றது. 'பரதேசிகளாகயிருக்கின்ற ஏழையின் மக்கள் இதோ உமது அடைக்கலமாக ஓடி வந்தோம்' என்ற தேவ மாதாவின் அடைக்கலச் செபத்தின் பொருளுக்கு இது ஓர் அடையாளமாக இருக்கின்றது. எமது அச்சத்திலும், தேவைகளிலும் நாம் வேகமாக ஓடும்போது எம்மை அரவணைக்கும் சதாசகாய அன்னை உலகெங்கும் போற்றப்படுகின்றாள்.

"சதாசகாய தாயே நின் தயை நம்பி வந்தோம் திருமகன் ஆசியை நீர் இரந்து எங்கட்கருள்வீர்"

என்ற பாடல்கள் ஒலிக்க புதன்கிழமைகள் தோறும் பல ஆலயங்களில் ஆராதித்து வணங்கப்படுகின்றாள் எம் "சதாசகாய அன்னை".

இந்தவகையிலே மல்லாகம் பதியில் அமைந்து அருள்பாலிக்கும் சதாசகாய அன்னையின் வழிபாட்டுத் தலத்தின் வரலாற்றைக் கூறுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

### மல்லாகம் புனித சதாசகாய அன்னையின் ஆலயம் உருவான வரலாறு



மல்லாகம் சந்திக்கு அண்மையில் பேரும் புகழும் பெற்று வாழ்ந்த சபாபதி குடும்பத்தினரே சதாசகாய அன்னையினுடைய பெயரில் ஓர் ஆலயம் அமைக்க வேண்டுமென ஆவல் கொண்டனர். யாழ்நகர் தொடங்கி காங்கேசன்துறை வரையிலான பிரதான வீதி அருகில் ஒரு கத்தோலிக்க தேவாலயம் இல்லை என்ற குறைபாட்டை நீக்குவது அவர்களது விருப்பமாக இருந்தது. இதற்கு ஒரு தூண்டுதலாக நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களும் செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தூண்டுதலின் பேரில் டாக்டர் பொன்னையா ஜோசப் சபாபதி என்பவர் தற்போது ஆலயம் அமைந்திருக்கும் நிலப்பகுதியை ஆலயம் கட்டுவதற்கென அன்பளிப்பாகக் கொடுத்தார். ஆனாலும், ஆலயத்தைக் கட்டுவதற்கு முன்பு அவர் மரணமடைந்ததனால் அவருடைய சகோதரர் செல்லையா ஜோசப் சபாபதி இச்சிற்றாலயத்தைக் கட்டினார். இவ்வாறு கட்டிமுடிக்கப்பட்ட சிற்றாலயத்தில் 1954 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதன் முறையாகத் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இக்காலத்தில் சுன்னாகம் பங்குத்தந்தையாக இருந்த பாலசுந்தரம் அடிகளாருக்கு அன்னையின் அருள் பெற்றவர்களால் நல்ல ஆதரவு கிடைத்தது. பக்தர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகியது. வழிபாடுகள் சிறப்பாக நடைபெற்றன.

### கவனிப்பாரற்ற நிலையும், அன்னையின் அருள்மாரியும்

சுன்னாகப் பங்கு பிரிக்கப்பட்ட காலத்தில் இச்சிற்றாலயம் கவனிப்பாரற்று விடப்பட்டது. ஆனாலும், அன்னை அருள்மாரி பொழிந்தாள். பிறசமயத்தவர்களும் இறைமக்களும் ஆலயத்தில் அருள்வேண்டி சமுகங்கொடுப்பர். ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் குத்தகைக்குப் பயிர்செய்த இந்து சமயச் சகோதரன் வயித்திலிங்கம் (அருட்தந்தை எட்வின் (அ.ம.தி.) அடிகளாரின் தாய்மாமன்) என்பவர் காலை, மாலை ஆலயத்தைத் துப்புரவுசெய்து, தண்ணீர் தெளித்துப் பூவைத்து வணங்குவார். அன்னையின் பாதுகாவலில் தனது தொழிலை ஒப்படைப்பார். ஒருநாள் இரவு அவருடைய தோட்ட உபகரணங்களை யாரோ களவாடிச் சென்றுவிட்டனர். அதனால், அவர் அன்னையிடம் முறைப்பட்டார். மூன்றாம் நாள் கண்டு எடுத்தார். ஆனந்தங்கொண்டார். எல்லோருக்கும் அன்னையின் அருளைக் கூறினார்.

### இந்து சமய சகோதரரின் சாட்சியும், திருப்பலியும்

இவர் அன்னையின் அருளால் ஏவப்பெற்று சூராவத்தை, ஏழாலையிலுள்ள தனது இனபந்துக்களாகிய இறைமக்களுக்கு அன்னையின் அருள்நிலையைக் கூறி எல்லோரையும் அன்னையுடைய பதிக்குச் செல்லத்தூண்டுவார். அக்காலத்தில் தனிப்பங்காய்த் திகழ்ந்த குளமங்கால் புனித சவேரியார் ஆலயம் அருட்தந்தை ஏபிரகாம் அ[illegible]ளாரின் காலத்திற்குப் பின்னர் ஏழாலைப் பங்குடன் சேர்க்கப்பட்டது. ஏழாலைப் பங்கின் பங்குத் தந்தையார் இராசகாரியர் அடிகளார்-சதாசகாய அன்னையின் பக்தியை சூராவத்தை புனித திரேசாள் ஆலயத்[illegible] ஆரம்பித்து புதன்வாரங்களில் நவநாளை நடத்தி வந்தார். ஒருநாள் மல்லாகம் சந்தியில் அருட்தந்தையைச் சந்தித்த இந்து சமயச் சகோதரன் அவரை அன்னையின் ஆலயத்திற்கு அழைத்துச்சென்றார். அன்னையின் அருள்வளங்களையும், கவனிப்பாரற்ற தன்மையையும் எடுத்துக்கூறினார். அருட்தந்தை அச்சகோதரனுக்கு நன்றிகூறி ஆலயத்தைக் கவனிக்கும்படி கூறிச்சென்றார். சூராவத்தையில் நடைபெற்ற புதன்வழிபாட்டை நிறுத்தி, சதாசகாய அன்னையின் ஆலயத்தில் மாலைத் திருப்பலியும், நவநாள் வழிபாட்டையும் நடத்தி வந்தார். பக்தர் கூட்டம் பெருகியது. அன்னையின் பதி பொலிவடைந்தது. அக்காலத்தில் பங்குத் தந்தையராக இருந்த அருட்தந்தை சூசைப்பிள்ளை அடிகளார் காலத்தில் ஆலயத்தில் சிறப்புவழிபாடுகள், பஜனைகள் நடைபெற்று வந்தன. வருடாந்த விழா ஆனிமாதக் கடைசிவாரம் சனத்திரள் மத்தியில் பெருவிழாவாக நடைபெற்றது. அன்னையின் அருள் பொலிவுற்றது. இதனைத் தொடர்ந்து அருட்தந்தையர்களான எட்மன் மைக்கல், யோகராஜா, மொன்பேட் ஆகியோரின் பணியும் நினைவுகூரத்தக்கதாகும்.

### யுத்தகாலச்சூழல்

இந்திய இராணுவம், இலங்கை இராணுவம் ஆகியவை புரிந்த பயங்கரத் தாக்குதல்களினால் ஆலயமும், சூழலும் பாதிப்படைந்தன; மதில்கள் சாய்ந்தன; மக்கள் இடம்பெயர்ந்தனர்; ஆலயம் செயலிழந்தது.

### மீளக்குடியமர்வு

மக்கள் திரும்பவும் ஆலயச்சூழலில் குடியமர்ந்ததும் பங்கைப் பொறுப்பேற்ற அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார் மாதத்தின் புதன்கிழமை தோறும் திருப்பலி ஒப்புக்கொடுத்து வந்தார்.

### மீண்டும் வளர்ச்சிக்காலம்

தற்போது தொண்டாற்றும் பங்குத் தந்தை அருட்திரு.பா.பி.இராஜசிங்கம் அடிகளார், ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் மாலைத் திருப்பலி ஒப்புக்கொடுப்பதோடு, ஆலய வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டு பணியாற்றுகின்றார். சூழலைச் சிறப்பாக வைத்து ஒவ்வோர் ஆலயங்களையும், வழிபாடுகள் மூலம் இணைத்து சதாசகாய அன்னையின் அருள் பெருகப் பணி புரிந்துவருகின்றார்.



### பொன்விழாவும் வருடாந்தப் பெருவிழாவும்

1954இல் முதற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆலயம் 50 ஆண்டுகளின் நிறைவோடு பூரிப்படைகிறது. அருட் பெருக்கின் உறைவிடமாய் விளங்கும் அன்னையின் வருடாந்தப் பெருவிழாவும் பொன்விழாவும் ஒருங்கே இடம்பெறுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அதேவேளையில், சதாசகாய அன்னையின் பரிந்துரையைக் குடும்பங்கள் தோறும் வலுப்படுத்த, குடும்ப ஆண்டாகிய இவ்வருடத்தில் வரும் யூபிலி, திருநாட்திருப்பலியைத் தலைமை வகித்து ஒப்புக்கொடுக்க யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் வருகை தருவது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகின்றது.

### புதிய ஆலயம் அமைக்க முயற்சிகள்

அன்னைக்கென அதே வளாகத்தில் புதிய ஆலயம் அமைக்கப் பல்வேறு வழிகளில் நிதி திரட்டும் பணியில் திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திவரும் பங்குத் தந்தை பா.பி.இராஜசிங்கம் அடிகளாரின் சிந்தனைக்குப் பக்தர்களும், பங்குமக்களும் செயல்வடிவம் கொடுத்து வருகின்றார்கள். மேலும் அன்பு நெஞ்சங்களின் தாராள உதவிகள் கிடைக்கும் பட்சத்தில் அந்த அரும்பெரும் புனித முயற்சி வெற்றிபெறும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

தகவல்கள்: திரு.வ.யோ.அருமைநாயகம்
(ஓய்வுபெற்ற அதிபர், சூராவத்தை)
தொகுப்பு: திரு.சிறில் சுகந்தரன் J.P. சுன்னாகம்.

(33480) (24-19-14)

# ஆட்சி மாறினாலும் அவலம் மாறாத ஈராக்!

ஒருவழியாக ஜூன் 30 ஆம் திகதி ஈராக்கியர்களிடம் ஈராக் ஒப்படைக்கப்படப்போகிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் ஈராக்கில் கூட்டுப்படைகள் நுழைந்து சதாம் ஹுசைனின் ஆட்சி அகற்றப்பட்டு, பின் சதாம் கைதாகி 'மழைவிட்டும் தூறல்விடவில்லை' என்ற கதையாக யுத்தம் ஓய்ந்தும் கூட்டுப்படையினர் மீதான தாக்குதல்கள் தொடர் கதையாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இந்தநிலையிலேயே, ஈராக்கின் இடைக்கால அரசிடம் நாட்டின் நிர்வாகம் வழங்கப்படப் போகிறது.

ஒருநாட்டின் இறைமை பாதுகாக்கப்பட்டு, அந்நாட்டு மக்கள் தம்மைத் தாமே ஆளும் நிலை ஏற்படுவது அவர்களுக்கு உண்மையில் மகிழ்ச்சி அளிக்கவேண்டிய விடயம்தான். ஆனால்,



பகிரங்கமாக நடமாடும் கிளர்ச்சியாளர்கள்

ஈராக்கில் இந்த 'சுதந்திரம்' ஈராக்கியர்களை அப்படி ஒன்றும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி விடவில்லை.

## பாதுகாப்புக் கேள்விக்குறி

போருக்குப் பின்னரான ஈராக்கில் எந்தவொரு சாதாரண ஈராக்கியக் குடிமகனையும் அவரது வாழ்க்கை நிலைமை பற்றிக்கேட்டால் உடனடியாக அவரிடமிருந்து பதில் வரும்.....

'மாகு அமான்...' அதாவது பாதுகாப்பில்லை என்பார்.

இது அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் ஏற்படுத்திய ஆட்சி மாற்றத்தால் மட்டும் ஏற்பட்டதல்ல. ஏற்கனவே, பலவீனப்பட்டுப் போயிருந்த நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு கூட்டுபபடைகள் நுழைந்து யுத்தம் மூண்டவுடன் முற்றாகத் தகர்ந்து போனதே இதற்குப் பிரதான காரணம்.

சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பின்னணியிலிருந்து இன்றுவரையான சுமார் ஒருவருடகாலப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள், தீவிரவாதிகள், சமூகவிரோதிகள் போன்றவர்கள் தம்மை நன்கு வளமாக்கித் தமது நிலைமையை ஸ்திரப்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

ஈராக்கிற்குள் நுழைந்த கூட்டுப்படைகள் சதாம் ஆட்சியின் பிரதிநிதிகளைத் தேடிப்பிடிப்பதிலும், தம்மைத் தாமே காப்பாற்றிக்கொள்வதிலும் முழுக் கவனஞ் செலுத்திக்கொண்டிருந்தமை, கிளர்ச்சியாளர்களும், தீவிரவாதிகளும், சமூக விரோதிகளும் தடையின்றி வளாவதறகு நல்ல வாய்ப்பாகப் போய்விட்டது. சதாம் ஆட்சி கவிழ்க்கப்பட்ட கையோடு சட்டம் - ஒழுங்கு காப்பாற்றப்படுவது அடியோடு நிலை குலைந்தும் போனது.

## நாட்டுக்கு அச்சுறுத்தல்

இதுவே இன்று புதிய சகாப்தத்துக்குள் ஈராக் அடியெடுத்துவைக்கும் நிலையிலும் பெரும் அச்சுறுத்தலாக உருவாகியுள்ளது. சதாமின் சர்வாதிகார ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் ஜனநாயக அரசு ஒன்று ஈராக்கில் உருவாக்கும் நடவடிக்கைகளுக்கு வன்முறைச் சக்திகளின் அச்சுறுத்தல்கள் முட்டுக்கட்டையாக உள்ளதற்கும் அதுவே காரணமாகும்.

## தோல்வியடைந்த நாடு

அமெரிக்காவின் வாஷிங்ரன் நகரைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'சமாதானத்திற்கான நிதியம்' என்ற அமைப்பு தனது சமீபத்திய அறிக்கை ஒன்றில் ஈராக்கைத் தோலவியடைந்த நாடு' என்று குறிப்பிட்டுள்ளது.

ஈராக்கில் தேர்தலை வெற்றிகரமாக நடத்தி, தேசிய அரசொன்றை அமைப்பதற்குத் தேவையான அரசியல் பேச்சுக்களை நடத்தவும் ஒற்றுமையைக் கட்டியெழுப்பவும் தற்போது காணப்படும் தொடர்ச்சியான மோதல்களும், வனமுறைகளும் தடைக்கற்களாக அமைந்துள்ளன.

சமாதானத்துக்கான நிதியம் இவ்வாறு கூறுகிறது.

## படுகொலை அச்சங்கள்

தனிமனிதப் பாதுகாப்பே இன்று ஈராக்கில் அதிகம் கவலைதரும் விடயமாகும். குறிப்பாக, ஈராக்கில் அமெரிக்க அனுசரணையுடன் உருவாக்கப்படக்கூடிய ஜனநாயக அரசில் அங்கம் வகிக்கும் வாய்ப்புள்ள அனைவரும் அமெரிக்கப் பிரசன்னத்தை எதிர்ப்பவர்களின் கொலை இலக்குகளாகின்றனர். ஈராக்கில் முறையாகச் செயற்படத் தொடங்கிய இடைக்கால நிர்வாக அமைப்பின் உறுப்பினர்கள் குண்டுத் தாக்குதல்களுக்கும் ஆயுதத் தாக்குதல்களுக்கும் இலகுவில் இலக்கானார்கள். ஜூன்30 ஆம் திகதிக்குப் பின்னர் இந்த நிலைமாறும் என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை.

இத்தனைக்கும் நிர்வாக உட்கட்டமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகளை அமெரிக்கா ஈராக்கில் முன்னெடுத்துத்தான் வருகிறது. ஆனாலும், அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்பவாகளின் உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலைத் தடுக்கத்தான் வழிதெரியவில்லை.

ஈராக்கில் அடுத்து பிரச்சினையை எதிர்நோக்குபவர்கள் அரச அலுவலர்கள். வெளிநாட்டவருடன் குறிப்பாக அமெரிக்கர்களுடன் இணைந்து பணியாற்றும் மொழிபெயர்ப்பாளர்கள் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட ஈராக்


உலக வலம்
நாடோடி

கின் இராணுவத்தினர் மற்றும் பொலீஸார் அமெரிக்கப் பிரசன்னத்தை வெறுக்கும் கிளர்ச்சியாளர்களின் அடுத்த இலக்குகளாக இவர்களே உள்ளனர்.

நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் கூடிய பங்காற்ற வேண்டியவர்கள் இவர்கள். ஆனால், சில நூறு டொலர்களுக்காகத் தமது உயிரைப் பணயம் வைக்க இவர்களில் எத்தனை பேர் தயாராக இருப்பார்கள் என்பது கேள்விக்குரியது.

பொலீஸாரை எடுத்துக்கொண்டால் கார்க்குண்டுத் தாக்குதல்களுக்கு இவர்களே அதிகம் பலியாகின்றனர். ஆனாலும், இத்தாக்குதல்களுக்குப் பொலீஸார் சிலர் உடந்தையாக உள்ளனர் என்பது அதிர்ச்சி தரும் விடயம். கிளர்ச்சியாளர்கள் பலரும் பொலீஸ்துறையில் நுழைந்து விட்டனர். இதனால், அமெரிக்க எதிர்ப்பு வன்முறைகள் தடையின்றி அதிகரிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் ஈராக்கில் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு, அதன்மூலம் ஜனநாயக அரசொன்று உருவாக்கப்படவேண்டும் என்ற எண்ணம் வெறும் பகற்கனவாகவே இருக்கும்.



இயட் அல்லவி

## பொலீஸாரின் தகுதியின்மை

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகளுக்கு எதிரானவர்கள் பொலீஸ்துறையில் சேர்ந்ததால் ஏற்பட்ட தலைவலி ஒருபுறமிருக்க, தகுதியில்லாதவர்கள் எல்லாம் பொலீஸ பணியில் சேர்த்துக்கொள்ளப்பட்டதால் சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவது இயலாத காரியமாக உள்ளது ஈராக்கில்.

இதனால், தகுதியின்மை, நம்பகத்தன்மை இல்லாமை மற்றும் அமெரிக்க - பிரிட்டன் கூட்டணிப் படையினருக்கு எதிராகச் செயற்படுகின்றமை ஆகிய காரணங்களால் முப்பதாயிரம் ஈராக் பொலீஸ் அதிகாரிகளைப் பதவி நீக்கம்செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது. ஈராக்கின் நிர்வாகப் பொறுப்பை உள்ளூர் தலைவர்களிடம் அளிக்கவுள்ள நிலையில் இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நீக்கப்படுகின்ற பொலீஸ் அதிகாரிகள் பலரிடம் பயிற்சிக் குறைபாடு இருப்பதாகவும் முக்கிய ஆயுதங்களைக் கையாள்வதில் திறமைக் குறைபாடு இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது: ஈராக்கின் பொலீஸ் அதிகாரிகள் சம்பளப் பட்டியலில் ஒருலட்சத்து 20 ஆயிரம் பேர் உள்ளனர். இதில் 89 ஆயிரம் பேர் பணியில் சேர்ந்துவிட்டபோதிலும், இவர்களில் பாதிப்பேர் இன்னும் பயிற்சியே பெறாதவர்கள் என்றும் சொல்லப்படுகிறது. பணியில் இருந்து நீக்கப்படுகின்ற ஒவ்வொரு பொலீஸ் அதிகாரியும் தலா 2 ஆயிரம் டொலர்கள் பெறுவார்கள். இவர்கள் ஏதேனும் வியாபாரஞ்செய்து பிழைத்துக்கொள்ளவேண்டும் என்றும், திரும்பவும் பொலீஸ் அதிகாரி பணிக்கு வரக்கூடாது என்பதை உணர்த்தவே இவர்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படுகிறது என்றும் கூறப்படுகிறது. ஆனாலும், நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலை நாட்ட இது எந்தவகையிலும் உகவப் போவதில்லை என்பதே உண்மையாகும்.

## தேர்தல் நடத்த வழியில்லை

சட்டம் - ஒழுங்கு சீர்குலைந்து வன்முறைகள் அதிகரித்துள்ள தற்போதைய சூழ்நிலையில் ஒரு ஜனநாயக அரசொன்றை ஏற்படுத்துவதென்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகவேயுள்ளது. ஏற்கனவே, நாட்டை அச்சத்தில் ஆழ்த்தியுள்ள வன்முறை, தேர்தல் நடவடிக்கைகளான வாக்காளர் பதிவு, பிரசாரம், வாக்களிப்பு, வாக்குகளை எண்ணுதல் ஆகியவற்றைச் சீர்குலைக்கும் என்பது நிச்சயம்.

## அபிவிருத்தி

இதேசமயம், போருக்குப் பின்னரான ஈராக்கில் மீள்கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி ஆகியவையும் பாதுகாப்பின்மையால் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டுப் பணியாளர்கள், குறிப்பாகப் பெற்றோலியம் மற்றும் கட்டுமானத்துறைகளில் பணியாற்றுபவர்கள் தாம் இதுவரை பணியாற்றிய யுத்தபூமிகளில் ஈராக்கே அதிக அபாயகரமானது என்கிறார்கள்.

ஏற்கனவே, ஈராக்கின் பெற்றோலியக் குழாய்ப் பாதைகள் கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாகின. பெரும்பாலும் அமெரிக்க நிறுவனங்களே பெற்றோலிய உற்பத்தித் துறையில் ஒப்பந்தங்களைப் பெற்றுள்ளதால் கிளர்ச்சியாளர்கள் அதனை இலக்கு வைக்கின்றனர்.

வெளிநாட்டு நிறுவனங்கள் மின்சார உற்பத்தி மற்றும் குடிதண்ணீர் உற்பத்தி போன்றவற்றையும் மேற்கொள்வதால் கிளர்ச்சியாளர்களின் அடுத்த இலக்குகளாக எவை அமையக்கூடும்.

ஈராக்கை உலுக்கும் மற்றொரு பிரச்சினை வேலையில்லாத் திண்டாட்டமாகும். சுய தொழில் வாய்ப்புகள் முடங்கிப்போய்விட்ட நிலையில் ஈராக்கியர்கள் அமெரிக்க அனுசரணையுடனான அரசுப்பணிகளிலோ அல்லது ஈராக்கில் தொழிலில் ஈடுபட்டுள்ள வெளிநாட்டு நிறுவனங்களிலோ இணையவேண்டிய நிலை. அதே வேளை, அப்பணிகளில் இணைந்து பணியாற்றினால் கிளர்ச்சியாளர்களின் கோபத்துக்கு இலக்காகி உயிரைவிடவேண்டி வருமோ என்ற அச்சம்வேறு. இதனால், வேலையற்றவர்களின் எண்ணிக்கை ஈராக்கை மிரளவைக்கிறது.

நாள்தோறும் தினக்கூலிகளாகப் பணியாற்ற வேலைத்தளங்களின் முன்பாக முட்கம்பிகளிடையே வரிசையில் ஈராக்கியர்கள் காத்திருப்பது அங்கு வழக்கமான ஒன்றாகி விட்டது.

இத்தனை பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண வேண்டுமானால் ஈராக்கில் சட்டம் - ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப் பட வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே ஈராக்கிய இடைக்காலப் பிரதமர் இயட் அல்லவி, கிளர்ச்சியாளர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறுகின்றார்.


ஆனாலும், இது நடைமுறைக்கு ஒத்து வருமா என்பதில் ஈராக்கியர்களுக்குச் சந்தேகமே.

கடந்த முதலாம்திகதி இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்பட்ட பின்னர் கார்க்குண்டுத் தாக்குதல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன; ஈராக்கிய உயர் அதிகாரிகள் மூவர் கொல்லப்பட்டனர்; பெற்றோலியக் குழாய்ப்பாதைகள் தகர்க்கப்பட்டன. ஆனாலும், ஈராக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று அல்லவி நம்புகின்றார். ஜூன்30 இல் நாடு கையளிக்கப்பட்ட பின் ஈராக்கியப் படைகள் ஈராக்கை முற்றுமுழுதாகப் பாதுகாக்குமென்பது உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று அவர் விரும்புகின்றார்.

அடுத்த ஆண்டின் முற்பகுதியில் ஈராக்கில் தேர்தல் நடத்தப்பட்டு ஜனநாயக அரசொன்று உருவாக்கப்படவேண்டும் என்பதே அமெரிக்காவின் திட்டம். அதுவரையிலுமே அல்லவி பதவியிலிருப்பார். அதற்குள் அவர் ஈராக்கின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதைப் பொறுத்தே ஈராக்கின் எதிர்காலம் அமையப்போகிறது.

## ஐ.நாவின் பங்கு

ஈராக்கிய நிர்வாகத்தில் அமெரிக்கா தனது தலைமைத்துவத்தை மாற்றிக்கொண்டால்



வேலைக்காகக் காத்திருக்கும் ஈராக்கியர்கள்

கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் கட்டுப்படுத்தப்படவாய்ப்புள்ளது. இல்லாவிட்டால், ஈராக மிகமோசமான ஓர் இருண்ட சூழ்நிலைக்குள் தள்ளப்படக்கூடும்.

அமெரிக்கா தொடர்ந்து தனது தலைமையைத் தக்கவைத்துக்கொண்டிருந்தால், ஈராக்கிய கிளர்ச்சியாளர்களுக்கு அயல்நாடுகளின் உதவிகள் கிடைக்கவும், உள்நாட்டுப் போர் மூண்டு, நாடு பிளவுபடவும் வாய்ப்புகள் அதிகம் உண்டு. இதனைத்தடுக்க இருக்கும் ஒரேவழி ஈராக்கில் ஐ.நாவின் தலையீடு அதிகரிக்கப்பட வேண்டும் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

ஆனாலும், கடந்தகாலத்தில் ஐ.நா.அதிகாரிகள் ஈராக்கில் சந்தித்த உயிரிழப்பு மற்றும் கசப்பான சம்பவங்கள் போன்றவற்றால் ஐ.நா. தலையடு அதிகரிப்பதில் சிக்கல் எழுந்துள்ளது.

எது எப்படியோ ஈராக்கில் பாதுகாப்புப் பலப படுத்தப்பட்டு அந்தநாடு புதிய சகாப்தத்தில் அடியெடுத்துவைக்கவேண்டுமானால் நடுநிலை கொண்ட அமைதிப்படை, அதிகபணம், சர்வதேச சமூகத்தின் அதிக பங்களிப்பு ஆகியவை கடந்தகாலத்தை விட அதிகம் தேவை.

நிலைமை இப்போதுள்ளதைவிட மேலும் மோசமாகாமல் பார்த்துக்கொண்டாலே போதும், ஈராக்கியர்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுவார்கள். ★

# திருமண வாழ்த்து

இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை
இல.19, அவன்யூ, டீசயின் குயின், பிரான்ஸ் திருமண மண்டபத்தில்
திருமாங்கல்ய தாரணமாகி இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணையும்

| மணமகன் | மணமகள் |
|---|---|
| திருவளர் செல்வன் | திருவளர் செல்வி |
| **ஸ்ரீ கிருஷ்ணா** | **தர்சிகா** |

இருவரையும்

அன்புள்ளங்கொண்ட பெற்றோர், சகோதரர்கள், உறவினர், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல நல்லைக்கந்தன் திருவருள் பெற்று வெல்லப் பிள்ளையாரின் திருவருள் துணையுடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

திரு.திருமதி சி.பொ.தருமராஜா
17/36, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

திரு.திருமதி M.சண்முகராஜா
தனங்களப்பு,
சாவகச்சேரி.

(33485) (24-11-38)




*யாழ் நகரில் புதிய உதயம்*

# K.K.போன் சேவிஸ்

இல.01, நவீன சந்தை மேல்மாடி,
மக்கள் வங்கிக் கிளைக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

அனைத்துப் போன்வகைகளும் SIM காட்
Kit காட் மற்றும் உதிரிப்பாகங்களை
மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்
கொள்வதோடு போன்பழுது லொக்
உடைத்தல் போன்றவற்றை துரித கதியில்
பெற்றுக்கொள்ளவும்

உத்தரவாதத்துடன் பற்றறிகளை பெறவும் நாடுங்கள்.

K.K.போன் சேவிஸ்

(33118)



இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி
விசேட கழிவில் விற்பனைக்கு!

24 மணி நேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான
மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும்
பொருத்தித் தரப்படும்

HAND PHONE UNLOCK
செய்து தரப்படும்

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்
பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்
தருகின்றோம். அத்துடன் அன்ரனா மூலம்
இயங்குகின்றது. மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன்
முற்றுமுழுதான துணை நிறுவனம்.

HAND PHONE
பழுது பார்க்கப்படும்.

உள்வரும் அழைப்பு
முற்றிலும் இலவசம்

I.D.D இணைப்புக்கள்
ஸ்ரீலங்கா ரெலிகொம்
கட்டணம் 25/=

மொபிடெல் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்றுமுழுதான துணை நிறுவனம்

# பவர் செல்லுலர் ட்ரேடிங் கம்பனி

**SHOP**
205/1 Kasthuriyar Road,
Jaffna Tel : 0712 399220

**Office**
185, 1st floor,
Kasthuriyar Road,
Jaffna Tel/fax : 021 2227070

# ரஷ்யாவில் உயர்தரக் கல்வி

ரஷ்யாவில் பிரசித்திபெற்ற இஸ்மொளின்ஸ் (**Somlensk State**) அரச பல் கலைக்கழகத்தில் மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்வியை தொடங்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

★ முற்று முழுதாக 100% ஆங்கிலத்தில் மட்டுமே கல்வி கற்பிக்கப்படும்.
(காலவரையறை 06 ஆண்டுகள் மட்டுமே)

★ இலங்கை மருத்துவக் கல்லூரியால் அங்கீகரிக்கப்படும்.

★ ஆங்கில மொழியில் கல்வியைத் தொடர இலங்கையில் அங்கீகாரம் கொடுக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனம் இதுவே.

★ சகல விதமான பொறியியல் பாடநெறிக்கான பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்து தரப்படும்.

கீழ்க்காணும் விலாசத்திற்குத் தொடர்புகொள்ளவும்:

Dr.ஜூட் நாகலிங்கம் M.D.(Somlensk Russia)
Tele: 057-2268037 (Between 10 a.m. to 6 p.m.)
Tele.: 057-2229164 (Between 9 p.m. to 9 a.m.)
திரு.குமார் M.Sc.(Engineering)(St.Petersburg Russia)

**GOLDEN INTERNATIONAL (PVT) LTD.**

UG 46, 47 PEOPLE'S PARK, COLOMBO-11
Telephone : 011-2399688. 011-4718691
Fax : 011-2384659 Email:golden in@sltnet.lk.

(34-11-38) (சி-35827)

# ST.JOHN'S COLLEGE JAFFNA

## ANNUAL PRIZE GIVING-2004

Friday 2nd July 2004 at 10.00 a.m.
Chief Guest
Professor **S.Ratnajeevan H.Hoole**
&
Dr.(Mrs.) **Dushyanthi Hoole**
Chairman
**Ven. S.P. Nesakumar**
Archdeacon of Jaffna
Parents, Old Boys & Well - Wishers
are Cordially invited.

**Principal, Staff & Students.**

(C-35671)(34-11-18)

மீண்டும் இயங்குகின்றது

# சாந்தி மணிக்கூட்டுத் திருத்தகம்

35 வருட காலமாகச் சாவகச்சேரி, கண்டி வீதியில்
இயங்கிவந்த எமது திருத்தகம் -
இருவருட இடைவெளியின் பின்னர் இப்போது மீண்டும் புதுப் பொலிவுடன் சாவகச்சேரி, கண்டி வீதி, இராமலிங்கம் வீதி, பழைய பிரதேச செயலகத்துக்கு அருகில் இயங்கி வருகின்றது என்பதை எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

உங்கள் மணிக்கூடுகளைச் சிறந்த முறையில்
திருத்திக்கொள்ள எங்களை நாடுங்கள்:

*இராமலிங்கம் வீதி,*
*சாவகச்சேரி.*

உரிமையாளர்:
**சாந்தி வோச் வேக்.**

(33492) (24-11-18)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



# பேரம்பலம் மயில்வாகனம்

(வேலணை கிழக்கு - வேலணை)

| அன்னை மடியில் | ஆண்டவன் திருவடியில் |
|---|---|
| 22-04-1920 | 29-05-2004 |

பாசத்தின் உறைவிடமாய்; பண்பின் சிகரமாய்;
வாழ்வின் வழிகாட்டியாய்
மலர்ந்த வதனத்துடன்; மாசற்ற நெஞ்சுடன்;
மானிடரில் தெய்வமாய்
எம்மில் வலம் வந்த ஐயாவே!
பிறந்த பூமியாம்; புனித பூமியாம்;
அழகிய தீவாம; அவ்வேலணை மண்ணில்,
மீளாத் துயில் கொள்ள,
நல்லூரான் திருவடியை நினைத்த மாத்திரத்தில்
தஞ்சமென்று அடைய
தலைநகரில் இருந்து விரைந்து சென்றீகளோ!

அன்னாரின் மரணச் செய்திகேட்டு தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபந் தெரிவித்தவர்களுக்கும் நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் பல்வேறு இடங்களில் இருந்து வந்து அமரரின் இறுதிச்சடங்கில் பங்குபற்றிப் பலவித உதவி புரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
மக்கள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள். சகோதரர்கள்.
உறவினர்கள்.

*82/35, செட்டித்தெரு,*
*நல்லூர்.*

(33465) (24-11-18)

# போர் எதனையும் தீர்த்து வைக்காது! நிலைமையைச் சிக்கலாக்கவே உதவும்

**கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் டட்லி சேன நாயக்க ஞாபகார்த்த அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்டிருந்த ஒரு கூட்டத்தில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரும், இலங்கை நிர்வாக சேவையின் மூத்த (முன்னாள்) அதிகாரியுமான பிரட்மன் வீரக்கோன் நிகழ்த்திய அமரர் டட்லி சேனநாயக்க நிலையப் பேருரையின் தொகுப்பு இது.**

மீண்டும் நாம் அமைதிக்கும் போருக்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருக்கின்றோம். எமது தலைவர்கள் எடுக்கும் முடிவுகள் மிக அகன்ற விளைவுகளை ஏற்படுத்துபவையாக அமைந்துவிடமுடியும். நாம் எல்லோருக்குமே மிக நெருங்கிய அக்கறைக்குரிய விடயமாக வேறு எதுவுமே இப்போது இல்லையென்றே சொல்லவேண்டும்.

நாம் அனைவருமே போரின் கோரத்தையும், அங்கலாய்ப்பையும் அனுபவித்திருக்கின்றோம். அதேசமயம், கடந்த இரண்டரை ஆண்டுகாலம் நாடு முழுவதிலும் வியாபித்து நிலைகொண்டிருக்கும் போர் ஓய்வின் மகிழ்ச்சியினை - ஒருசில மீறல் சம்பவங்களைத்தவிர - அனுபவித்துவருகின்றோம்.

இந்த நிலைமையைத் தொடர்ந்து நிலைநாட்டிக்கொள்வதையும் அதனை முன்நகர்த்தி நிலையான அமைதியை நோக்கிச் செல்வதையும்விட இன்று நாட்டுக்கு அவசியமானது வேறொன்றுமிருக்கமுடியாது.

அமைதியை ஏற்படுத்துவதைவிட யுத்தம் செய்வது மிக எளிதான காரியம் என்று பலரும் சொல்லி இருக்கின்றார்கள்.

அமைதி என்பது ஒரு இலட்சியம். அதனைத் தளர்ந்துபோகாமல் உறுதியுடனும் துணிச்சலுடனும் தீர்மானத்தோடும் கண்டிப்போடும் அடைய முயலவேண்டும்.

கோழை மனம் படைத்தவர்களால் இது சாத்தியமில்லை. இத்னை அடிக்கடி நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது. ஏனென்றால், அமைதியை ஏற்படுத்துபவர்கள் நான் குறிப்பிட்ட மேற்படி குணங்களுக்கு மாறானவர்களாகவே இருக்கிறார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுவந்துள்ளது.

கோழையாக, தீர்மானம் எடுக்க முடியாதவராக, எப்பொழுதும் விட்டுக்கொடுப்பவராக, அச்சம் கொண்டவராக இருக்கிறார் என்றெல்லாம் இவர்மீது குறைகூறப்பட்டுவந்துள்ளது.

**வெளிப்படாத விடயம்**

வரலாற்றின் பெரிய போர்களில் வெற்றிபெற்றவர்கள்தான் வீரர்களாகப் போற்றப்படுகின்றார்கள். யுத்தங்களில் காதல் காவியங்கள், வீரகாவியங்கள் பிறந்ததுமுண்டு. வீரகாவியங்கள் மட்டுமல்ல உள்ளங்களை உறையவைக்கும் நரம்புகளை பிடிக்க வைக்கும் தியாக வரலாறுகளையும் உருவாக்கியதுண்டு. இவை படங்களாக, நாவல்களாகவும் வெளிவந்துள்ளன.

ஆனால், எது வெளிப்படுவதில்லையென்றால போர்வெற்றிகளுக்கும், வெற்றிப் பவனிகளுக்கும் பின்னால் இருக்கும் துன்பங்கள், மரணங்கள், இழப்புகள், லட்சக்கணக்கான - பெரும்பாலும் சிவிலியன் மக்களின் - ஏழை மக்களின் குமுறல்கள்.

கெட்ட செய்திகள் எப்பொழுதும்

## போர்ஓய்வு முடிவுக்கு வந்துவிடுமா?

நல்ல செய்திகளாவதில்லை. அதனால், எவருக்கும் அவை தெரியவருவதில்லை - அதனால், அதைப்பற்றி கவலைப்படுவாருமில்லை. இது கவலைக்குரியது.

இலங்கை கடந்த சுமார் 50 ஆண்டு காலமாக போரின் எதிர்மறையான விளைவுகளையே அனுபவித்துவந்துள்ளது. சிலர் சிறு வெற்றிகளைக் கண்டு கொண்டாடியிருக்கலாம் அவை குறுகிய மகிழ்ச்சியே.

பொதுமக்களைப் பொறுத்தவரை போர் என்பது இழப்புக்களையே குறிக்கும்.

போரில் நேரடியாக ஈடுபட்டிருப்பவர்களைப் பார்த்தால் இதைவிட மோசமான நிலைமையே காணப்படுகிறது. ஆயிரக்கணக்கானவர்கள் நிரந்தரமாக அங்கவீனர்களாக்கப்பட்டு விடுகிறார்கள்; இறந்துபோகிறார்கள். அண்மைக்கால புள்ளிவிவரங்களின் படி படைத்தரப்பில் மாத்திரம் 21 ஆயிரம் பேர் மரணமாகி அல்லது காணாமற்போயிருக்கிறார்கள். இது கடந்த 1983ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதென உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டதன பின்னர் 20 ஆண்டுகளுக்குரிய புள்ளி விவரமாகும். இதில் பொலீஸ் தரப்பில் இறந்தவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்பது வெளிப்படை.

அதேசமயம் - மற்றத்தரப்பில் அவர்களும் இலங்கையர்கள் தாம். சிலமாதங்களுக்கு முன் விடுதலைப் புலிகள் விடுத்த ஓர் அறிவித்தலின்படி தங்கள் தரப்பில் சுமார் 18ஆயிரம்பேர் இருக்கிறார்கள் என்று தெரிவித்திருந்தார்கள். இது ஒரு வேளை குறைத்து மதிப்பிட்டதாகவும் இருக்கலாம். பொதுமக்கள் தரப்பில் செய்திகளில் இவர்கள் இடையில் மாட்டிக்கொண்டவர்கள் என்றே குறிக்கப்படுகிறார்கள்.

பொதுவாக உள்நாட்டு யுத்தங்களின்போது ஏற்படும் மரணங்களால் கொல்லப்படும் பொதுமக்கள் போரிடுபவர்களின் எண்ணிக்கையில் பெரும்பாலும் இரண்டுமடங்காகவே இருப்பதுண்டு. இந்த புள்ளிவிவரங்களுக்கப்பால் உடைந்துபோன குடும்பங்கள், அகதிகளான மக்கள், வாழும் வயதிழந்த நிலைமை, எதிர்காலம் பற்றிய ஏக்கங்கள் நீடிக்கின்றன.

அவசரகால நிலைமை, வீதித் தடைகள், இராணுவமயமாக்கல், குற்றச் செயல்கள், பொருள்களின் விலைகள் அதிகரித்தல், சேவைகளின் கட்டண உயர்வு, அரச வளங்களின் தவறான பங்கீடு இவையாவும் போரினால் ஏற்படும் விளைவுகள் என்று ஒரே சொல்லில் கூறிவிடலாம். இதுதான், இலங்கையில் இன்று எமக்கு அமைதியின் முக்கியத்துவத்தை உணர்த்திநிற்கின்றது. இதை சிலர் நினைப்பதுபோல் எங்கோ ஒளித்து வைத்துவிடமுடியாது. கற்பனை செய்யமுடியாத அளவுக்கு எம் எல்லோரையும் இது பாதிக்கின்றது.

**மக்களின் தீர்க்கமான முடிவு**

எனவேதான், இந்த நாட்டு மக்கள் பல சந்தர்ப்பங்களில் எடுக்கப்பட்ட பொதுக்கருத்துக்கணிப்புகளின் போது அமைதிக்காக நாட்டின் முக்கிய பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாணும்படி தீர்ப்பளித்திருக்கிறார்கள். இன்று பொதுமக்கள் முன் எப்போதையும்விட ஒரு சிலரைத் தவிர-(இவர்களைத் திருத்தவே முடியாது)-நாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினையை பலாத்காரத்தால்" தீர்த்துக் கொள்ள முடியாது என்பதில் தீக்கமான கருத்து கொண்டிருக்கிறார்கள்.

உயர்தர இராணுவத்தளபாடங்கள், ஆயுதங்கள் மூலம் மட்டும் இன்றைய பிரச்சினைக்குத் தீர்வுகண்டுவிட முடியாது என்பதற்கு செச்சினிய, பொஸ்னிய, பலஸ்தீனிய ஏன் ஈராக்கிய நிலைமைகள் யாவும் உதாரணங்களாகக் காணப்படுகின்றன. முன்னொருகாலத்தில் போரின்மூலம் அமைதி ஏற்பட்டிருக்கலாம். ஆனால், 21ஆம் நூற்றாண்டில் அது சாத்தியமில்லை.

அரசியல் ரீதியில் அமைதியை நாடுவதென்பது கடும் சவால் நிலைமைகளை எதிர்கொள்வதாகவே இருந்துள்ளது. உச்சநிலையிலிருந்து தீர்மானம் எடுப்பவர்களின் வாழ்க்கை நிலை சுலபமாக இருந்ததில்லை. தென பகுதியில் எவ்வளவுக்கு விவாதங்களும், ஆலோசனைகளும் இடம் பெற்றாலும் இறுதி முடிவை எடுபபவர் அரசுத்தலைவராக இருந்துள்ளார். மிகுந்த சங்கடங்களுக்கிடையில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அவரே பொறுப்பேற்பவராய் இருக்கின்றார்.

அவ்வாறு எடுக்கப்படும் தீர்மானங்கள் எப்பொழுதுமே எதிர்தரப்பினரின் ஆதரவினைப் பெறுவதாக அமைந்துவிடுவதில்லை. அதன் தகுதிபற்றி கேள்வி எழுப்புவார்கள், அதிலுள்ள குறைகளைத் தூக்கிப்பிடிப்பார்கள் - எவ்வாறாயினும் அரசின் செயல்பாட்டை முறியடிக்க எல்லாவற்றையும் செய்வார்கள்.

இவ்வாறான எதிர்ப்பு உருவாவதற்கு ஏற்கனவே தாங்கள் பதவியிலிருந்தபோது முன்னெடுத்த தீர்வுகளுக்கு இவர்கள் ஆதரவளிக்கவில்லையென்ற எண்ணமே பெரும்பாலும் இம்மாதிரி எதிர்ப்புக்களுக்குக் காரணமாகின்றன.

அரசியல் தன்மையான ஞாபகங்கள் நீடித்து நிலைப்பவையாகும். வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் விரைவில் மறந்துபோவதில்லை. இதனால் ஏற்படும் மிக மோசமான நிலைமை என்னவென்றால், அரசுக்கு உதவக்கூடிய நிலையிலுள்ள மற்றத்தரப்பு - சிலசமயம் 2/3 பெரும்பான்மையுடன் அரசமைப்பை மாற்றக்கூடிய நிலையில் இருந்தாலும் கையைக்கட்டிக்கொண்டு ஒதுங்கி நிற்கிறது அல்லது பின்னணியிலிருந்து தாக்கத் தொடங்கிவிடுகின்றது. இறுதியில் தோல்விதான் முடிவு.

இன்னொரு அம்சம் என்னவென்றால், அரசுக்கட்சிக்குள்ளேயே குத்துவெட்டுக்கள் நடைபெறுவது, தலைவர் நிலையில் இருப்பவர் தனித்துப் போவது, பங்காளிகள் பிரிந்து போவது, அமைச்சரவையில் இருக்கும் முக்கியமானவர்களே எதிர்ப்புக் காட்டுவது. உ+ம் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை பிரேமதாஸ எதிர்த்தமை இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டை ஜே.வி.பி. எதிர்ப்பது.

இன்னொரு அம்சம், பிரச்சினையைத் தீர்ப்பதற்கான இலகுவழியாக போரைத்தொடர்வதற்கான அழுத்தம் அதிகரித்துவருவதாகும்.

இதற்குப் பொருத்தமாகத் தெரிவிக்கப்படும் காரணங்கள், அவர்கள் ஆயுதம் வாங்குகிறார்கள், முகாம்களை அமைக்கிறார்கள், கப்பல் கணக்கில் ஆயுதம் கொண்டுவருகிறார்கள் என்பதாகும். சமீபகாலத்தில் 11 கப்பல்களில் ஆயுதம் கொண்டுவரப்பட்டுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவித்திருந்தன. எப்பொழுது, எங்கே, எவ்வாறு அவர்கள் என்ன கொண்டுவந்தார்கள் என்ற விவரங்கள் தரப்படவேயில்லை. இது போன்ற தகவல்களுக்காக நாங்கள் ஏங்குகிறோம். இவைகளைத் தடுக்க கடற்படை என்ன நடவடிக்கை எடுத்தது என்பது தெரியாது.

இன்றும் நாம் பெரும்பான்மையினா காலங்கடக்குமுன் அவர்களைத் தகர்த்தெறிந்துவிடுவோம் என்றெல்லாம் நெருக்குதல்கள்.

இராணுவத்தின் நிலை: நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், எங்களிடம் விடுங்கள் - ஆனால், எமக்கு அதிக ஆள்கள் தேவை. நாசகாரிகள், விமானங்கள், பீரங்கிப்படகுகள் இன்னும்பல.

தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கும் போர் ஓய்வு முடிவுக்கு வந்துவிடும் போலிருக்கின்றது.

பல்வேறு முறைகளில் ஓரளவு வெற்றியுடன் தொடர்ந்தும் விடாமல் செயற்பட்டுக்கொண்டிருந்த நமது தலைவர்கள் தீர்வுக்கு மிக இலகுவான வழியென்று கூறப்பட்ட போரைக் கைவிட்டுவிட்டு இறுதியாக ஏன் அமைதிமுயற்சியில் இறங்கியுள்ளார்கள் என்பது நாம் எல்லோரும் கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வியாகும் இன்று.

நான் என்ன நினைக்கிறேன் என்றால், எமது சரித்திரம் அவர்களுக்கு பாடம் படிப்பித்திருக்கிறது. சட்டத்துறை, அரசமைப்பு, இராணுவம் என்று பல்வேறு மட்டத்திலான நிபுணர்களினதும் ஆலோசனைகளையெல்லாம் கேட்டறிந்ததன் பின்னர் அவர்கள் படித்துள்ள பாடம் பிரச்சினைக்கான தீர்வுக்கு போரைத்தெரிவுசெய்வதென்பது பொருத்தமற்ற முடிவு என்பதே.

போர் எதனையும் தீர்க்கமாட்டாது, அது பிரச்சினையை மேலும் சிக்கலடையவே செய்யும்.

(ப)

---

# பன்னிரண்டு வயதில் கந்தபுராணத்துக்கு பயன்சொன்ன "பொடியர்" பண்டிதமணி ஆனார்



"எத்துணைக் காலந்திருப்பித் திருப்பிப் படிக்கினும் கேட்பினும், எத்துணையுந் தெவிட்டாது தித்தித்த முதூறும் அதியற்புத அதுமதுரந் திவ்விய வாக்கிய கந்தபுராணம்"

கந்தபுராணத்துக்கு அழகியதொரு வரைவிலக்கணத்தை மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார் நல்லை நகர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள்.

இனிமையும் பெருமையும் கொண்ட கந்தபுராணத்தை யாவரும் படித்து இன்புறத்தக்க வகையில் வசன நடையில் எழுதி வெளியிடும் பணியில் ஈடுபட்டவர் நாவலர் அவர்கள். குறித்த கந்தபுராண வசன நூலை 1981 இல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் சபையினர் மறுபதிப்புச் செய்தனர்.

இந்நாலுக்குப் பண்டிதமணி அவர்கள் எழுதிய அணிந்துரையில்-

"கந்தபுராணம் கம்பராமாயணத்துக்கு ஒரு நூற்றாண்டு முந்தியது. சுப்பிரமணியக் கடவுளின் திருவருள் கைவந்த கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் அருளியது. திருமுறை வரிசையில் போற்றும் தகைமையது.

கந்தபுராணத்துக்குப் பிறப்பிடம் கந்தசுவாமியின் திருவருள் பெருகும் காஞ்சிமாநகரமேயாயினும் அதனைப் பிள்ளைமைப் பருவத்திலிருந்தே பேணுகிற வகையிற் பேணி வளர்த்தெடுக்கும் தவவிசேடம் படைத்தது ஈழம்; சிறப்பாக யாழ்ப்பாணம்.

**ஆசிரியமணி**
**அ.பஞ்சாட்சரம்**

ஈழத்தில் கோயில்கள் தோறும் சுவாமி சந்நிதியில், சந்நிதி விரோதமின்றி மிக்க பயபக்தியுடன் புராண படனம் நடத்தும் முறை வேறு எங்கும் காணாதது"- என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**யாழ்ப்பாணத்தில் கந்தபுராணம்**

பரிசாகப் பெற்ற மணற்றியை (யாழ்ப்பாணம்) ஆளத் தொடங்கிய யாழ்பாடி பலரையும் குடியேற்றினான். அவ்வாறு குடியேறியவர்களில் ஒருவரே கச்சிக்கணேசையர் அவர்கள். கந்தபுராண ஆசிரியரான கச்சியப்ப சிவாச்சாரியாரும் கச்சிக்கணேசையர் அவர்களும் ஒன்றாகப் படித்தவர்களாகலாம். கந்தபுராண அரங்கேற்றத்தில் பங்குபற்றியுமிருப்பர். கணேசையர் ஊடாகக் கந்தபுராணமும் யாழ்ப்பாணத்தில் குடியேறியது.

**பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களின் 105 ஆவது பிறந்ததினம் இன்றாகும். அவரது நினைவுநாள் இன்று முற்பகல் யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறுகிறது. விழாவில் பண்டிதமணி எழுதிய "கந்தபுராண கலாசாரம்" நூலின் மறுபதிப்பு வெளியிடப்பட உள்ளது.**

பிரசித்தி வாய்ந்த யாழ்ப்பாணம் அரியாலை சித்திவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படனத்தைக் கச்சிக்கணேசையர் முதன்முதலாக ஆரம்பித்து வைத்தார் என்பது வரலாறு.

யாழ்ப்பாணத்தில் வாழ்கின்றவர்களில் பெரும்பாலானவர்கள் சைவர்கள். சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டவர்கள் சைவர்கள். அவர்கள் வழிபாடு செய்யும் இடங்கள் சிவாலயங்கள், சைவர்களின் மூலாதாரமான ஆலயம் திருச்சிற்றம்பலம். சிதம்பரம். சிவாலயங்களில் பூசை வழிபாடுகளை மேற்கொள்பவர்கள் சிவாச்சாரியார்கள் என்பதே சான்றோர் கருத்து. சைவ அபிவிருத்தியின் பொருட்டு சைவசபைகள், மன்றங்கள் ஏற்படலாயின. யாழ்ப்பாணத்தில் தோன்றிய சைவ சபைகளில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை மிகமிகப் பழமையானது.

சைவர்கள், சிவாச்சாரியார்கள சங்கங்கள் சபைகளைச் சேர்ந்தவர்கள் கந்தபுராண படன அபிவிருத்திக்குக் காலாக இருந்தார்கள். அரியாலைச் சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆரம்பமான கந்தபுராணப் படனம் ஈழத்தில் - விசேடமாக யாழ்ப்பாணத்தில் உள்ள சிவாலயங்களிலும் பரவத் தொடங்கியது. சுப்பிரமணிய சுவாமி கோயில்களில் கந்தபுராணப் படனத்துக்குத் தனி இடம் இருந்தது.

1872இல் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் இடம்பெற்ற கந்தபுராண படனத்தில் நாவலர் பெருமான் அவர்களுக்கும் வித்துவசிரோமணி அவர்களுக்கும் கோயிலார் விசேட இடம் அளித்தார்கள். சூரபன்மன் வதைப் படலத்தில் வரும் பாடல்களை வித்துவ சிரோமணி அவர்கள் நன்றாக வாசிக்க, நாவலர் பெருமான் அவர்கள் பயன் (உரை) சொன்ன அந்த இனிய காட்சியை "நாவலரும் புராண படனமும்" என்ற கட்டுரையில் மிகவும் சிலாகித்து எழுதியுள்ளார் பண்டிதமணி

(10ஆம் பக்கம் பார்க்க)

யாழ். மண்ணில் மாபெரும்

# நடன சங்கமம்



இலங்கையின் தேசிய நடனமான 'கண்டிய நடனம்' யாழ். மண்ணில் , உலகப் புகழ்வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் நடத்தப்படவுள்ளது.

மிகவும் பிரமாண்டமான முறையில், யாழ். மக்கள் என்றுமே கண்டிராத வகையில் அதிக பெண் நடனக் கலைஞர்களைக் கொண்டதாக இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந் நடன நிகழ்ச்சியில் 20 வகையான நடனங்களுக்கு தனித்தனியே தமிழில் பூரண விளக்கமளிக்கப்பட்டு நடன சங்கமம் நடைபெறும். அத்துடன், யாழ். ஆசிரியர்கள், மாணவர்களின் விருப்பத்தில் தென்னிந்தியாவின் கலாசேத்ரா நடனக்கலைஞர்கள் யாழ். மண்ணில் நடத்திய பரதநாட்டிய நிகழ்வும் வீடியோப் படக்காட்சிமூலம் 10அடித் திரையில் காண்பிக்கப்படும்.

**இந்த அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாமல்**
**கண்டுகளியுங்கள்!**

**இடம் : யாழ். வீரசிங்கம் மண்டபம்**
**காலம் : இன்று (2004-06-27) ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : பி.ப. 1.00 மணி**

**அனுமதிக் கட்டணம் - 200/-**
**பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் - 100/-**

**அனுமதிச் சீட்டுக்களை யாழ். வீரசிங்கம் மண்டப வாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.**

**-ஏற்பாட்டாளர்கள்.**

(சி-35837) (16-18)


# பன்னிரண்டு...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள்.

நமது நாட்டில் நாவலர் பெருமான் வழியில் கந்தபுராண படனம், திருவாதவூரடிகள் புராணம் ஆரம்பமாகின. புராண படனம் நடைபெறும் ஆலயங்களில் மக்கள் திரளுவார்கள். சைவாசார சீலர்களான பெரியவர்கள், கல்விமான்கள், வாசிக்கும் பொருட்டும் பயன் சொல்லும்பொருட்டும் கூடுவார்கள். பயன் சொல்பவர்கள், வாசிப்பவர்களுக்கு விசேட மரியாதைகள் இருக்கும். இவ்வாறான புராண படனங்கள் மூலம் மக்கள் சமய உண்மைகளை நன்கு அறிய வாய்ப்பு ஏற்பட்டது; இசையும் வளர்ந்தது.

### பண்டிதமணியின் பயன்

பௌராணிகர் நிறைந்த பிரதேசம் தென்மராட்சி தனங்களப்பு. அப்பிரதேசத்தில் ஒருகிராமம். அங்கு எழுந்தருளியிருக்கும் பிள்ளையாரைக் "காரைத்தூ விநாயகர் என்று அழைப்பர். தனங்களப்பு காரைத்தூ விநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படனம் நீண்ட காலமாக நடந்து வருகிறது. அந்த ஆலயத்தில் பன்னிரண்டு வயதிலேயே கணபதிப்பிள்ளை (பண்டிதமணி) சிறப்பாகப் பயன் சொன்னதாகக் கச்சாய் புலவர் சின்னையா அவர்கள் 09.08.1969இல் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்

"வழக்கப்படி காப்புச் செய்யுள்கள் மூன்றும் நானே சொன்னேன். படிப்பு நடந்தது (சூரபன்மன் வதைப் படலம்) அப்பொழுது அந்த ஆலய எல்லைக்குள் ஆக நான்கு பேர்கள் மாத்திரந்தான் மனிதர்கள் இருந்தார்கள். ஒன்று நான், மற்றவர் வாசிப்பவர். அடுத்தவர் கோயில் முகாமையாளர் இன்னுமொருவர் அவர் மெல்லிய சிவலைப் பொடியர் படிப்புக் கேட்கிற கட்சியைச் சேர்ந்தவர். அந்தச் சிவலைப் பொடியர் ஒருவருந்தான் நான் கருத்துச் சொல்வதை மிகக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்.

"அப்பொழுது எனக்கு வயது பதின்னான்கு. வாசித்தவருக்கு வயது பதினைந்து - புராணப்படிப்புக் கேட்ட பொடியருக்குப் பன்னிரண்டு தானிருக்கும். சிதம்பரப்பிள்ளை 'இனி நீர் வந்து கருத்துச் சொல்லும். பொடியர் வாசிக்கட்டும்' என்றேன்.

"இல்லை நான் வாசிக்கிறேன் பொடியன் பயன் சொல்லட்டும் என்றார். நான் எழும்பினேன். பொடியர் விரைவாக வந்து நானிருந்த இடத்தில் இருந்தார்.

"பாட்டிலே சொற்களுக்குக் கருதத் தெரியாமையால் அவைகளை விட்டும், இல்லாத கருத்தைச் சொல்லியும் சரிக்கட்டுகிற பயன்காரர்களை எனக்குந் தெரியும். பொடியரிடத்தில் அந்தப் பண்பு துளிகூட இல்லை. சரியாகப் பயன் நடந்தது.

இற்றைக்கு அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் தனங்களப்பு விநாயகர் ஆலயத்தில் சந்தித்த அந்த மெல்லிய சிவலைப் பொடியர்தான் இன்று பண்டிதமணியாக விளங்குகின்றார்." - என்கின்றார் கச்சாய்ப்புலவர் சி.சின்னையா அவர்கள். இளமைப் பருவத்தில் இருந்த இயற்கை எய்தும் வரை யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராண கலாசாரமே என்பதை நிலைநாட்ட உழைத்தபெருமை பண்டிதமணி அவர்களையே சாரும்.

பண்டிதமணி அவர்களது கந்தபுராணம் பற்றிய சிந்தனைகள் நூல் உருவம் பெற்றுள்ளன. 1959இல் கந்தபுராண கலாசாரம் என்ற நூலும், 1960இல் கந்தபுராண போதனை என்ற நூலும் வெளிவந்தன.

ஆறு காண்டங்களைக் கொண்டது கந்தபுராணம். தக்ஷ காண்டத்துக்குப் பண்டிதமணி அவர்கள் எழுதிய உரையை நூல் வடிவம் பெறச் செய்த பேராதனைப் பல்கலைக்கழக இந்து மாணவர் மன்றம், 25.01.1967 புதனன்று கோலாகலமாக அங்கு வெளியீடு செய்தது.

கந்தபுராணம் தக்ஷகாண்டம் உரை நூல் வெளியீட்டுவிழா சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பெருவிழாவாக நடைபெற்றது. பண்டிதமணி அவர்கள் இலக்கிய கலாநிதியாதற்கான கால்கோள்விழாவாகவும் இவ்விழா அமைந்தது எனலாம்.

★

# மிதிவெடி அபாயக்கல்வி வாரம்

## ஜூன் 21 தொடக்கம் ஜூன் 27 வரை

### மிதிவெடி மற்றும் வெடிக்காத வெடிபொருள்களினால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு

உடல் அங்கங்களைப் பாதிக்கக் கூடிய விபத்துக்கள் மறக்கமுடியாத மனப்பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்ற ஓர் அனுபவமாக அனைவருக்கும் மாறிவிடுகின்றது. இப்படிப்பட்ட விபத்துக்களின் விளைவாகப் பழைய தொழிலைத் தொடரமுடியாத நிலை, கல்வி கற்கும் சிறுவர்களாயின் கல்வியைத் தொடர்வதில் உள்ள பிரச்சினைகள், போக்குவரத்தில் உள்ள பிரச்சினைகள், பாரபட்சமாக நடத்தப்படும் நிலை, மருத்துவ ஏனைய செலவீனங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளும் தடைகளும் உருவாகின்றன. வாழ்க்கையானது சவால்கள் நிறைந்ததாக மாறிவிடுகின்றது.

இப்படிப்பட்ட வாழ்க்கையையே மாற்றி அமைக்கக் கூடிய விபத்துக்களால் ஏற்பட்ட பாதிப்புக்கள், விளைவுகள் பற்றி பாதிக்கப்பட்டவர்களும் அவர்களது குடும்பங்களும் கவலைப்பட்டுக் கொண்டு இருக்கலாம். ஆனால், அண்மைக் காலமாக யாழ். குடாநாட்டில் இவ்வகையான பாதிப்பிற்கு உள்ளானோரின் புனர்வாழ்வு தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. அரசசார் நிறுவனங்களும் பல உள்நாட்டு வெளிநாட்டு அரசசார்பற்ற நிறுவனங்களும் உடல் பதிப்பிற்கு உட்பட்டோருக்கு (கை, கால் இழப்பு அல்லது வேறு வகையான இழப்பு) அதிலும் குறிப்பாக மிதிவெடி, வெடிபொருள்களினால் பாதிப்புற்றோருக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்தவகையில் மிதிவெடியால் பாதிப்பிற்கு உட்பட்ட ஒரு நபர் அல்லது அவரது குடும்பம் பின்வரும் உதவிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

1. உடல் ரீதியான இழப்புக்களுக்கான மருத்துவ ஏனைய உதவிகள்.
2. உளரீதியான தாக்கங்களுக்குத் தேவையான உளவளத் துணை.
3. பொருளாதார ரீதியான இழப்புக்களை ஈடுசெய்யக் கடன் அடிப்படையிலான நிதி உதவி.

போன்ற உதவிகளை இப்புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளமுடியும்.

மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருள்களினால் அங்க அல்லது வேறு உடல் ரீதியான இழப்புக்களுக்கு உட்பட்டவர்கள் உடற்பயிற்சி, செயற்கைக் கால் பொருத்துதல், சக்கர நாற்காலி, கவையுள்ள கொம்பு (Crutches) வழங்குதல் போன்ற சேவைகள், உதவிகளை ஜெய்ப்பூர் செய்ற்கைக் கால் தொழிலகம் (Jaipur Foot) வழங்குகின்றது. அத்துடன், எந்தத் தொழில்நுட்ப உபகரணம் உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்கின்றதோ அதை நீங்களாகவே தெரிவுசெய்யக்கூடிய வசதியையும் வழங்குகின்றது.

ஒவ்வொரு மனிதரும் விபத்தைச் சந்தித்த பின் பல விளைவுகளை எதிர்கொள்கின்றனர். அதாவது, தனக்கு ஏற்பட்ட இயலாமை, தன்னைச் சார்ந்தோர் எதிர்கொள்ளும் இழப்பு, பாதிப்பினையும் உணர்ந்து மிக அதிக அளவிலான உளத்தாக்கத்திற்கு உள்ளாகின்றனர். உளத்தாக்கத்தில் இருந்து விடுபட்டு இயல்பு வாழ்க்கையை வாழ உளவளத்துணையைக் குடும்பப் புனர்வாழ்வு நிலையம் (FRC) வழங்கி வருகின்றது.

சிறுவர்கள் மிதிவெடி மற்றும் வெடிக்காத பொருள்களினால் பாதிப்பிற்கு உட்பட்டுப் பாடசாலைக்குத் திரும்பும்பொழுது பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் நம்பிக்கையின் இல்லம், வாழ்வகம் என்பன பார்வைக் குறைபாடு, பேச்சுக் குறைபாடு, உடற் பாதிப்பு உள்ள சிறுவர்களுக்கு ஆதரவும், உதவியும் வழங்கி வருகின்றன.

மேலும், சுயதொழில் வாய்ப்பிற்கான கடன் உதவிகளை ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கம் (AROD) வழங்கி வருகின்றது. அத்துடன், அரசாங்கம் ஒரு தொகைப் பணத்தினை நன்கொடையாக வழங்கி உதவுகின்றது.

மிதிவெடி மற்றும் வெடிபொருள்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் ஒரு நபர் அல்லது அவரது குடும்பம் விபத்தைச் சந்தித்ததில் இருந்து அந்நபரை அல்லது அவரது குடும்பத்தை மீண்டும் சமூகத்தில் பழைய நிலைக்குக் கொண்டுவரும் வரையான சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கியதாகும். இப்புனர்வாழ்வு நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ள உதவி வழங்கும் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மட்டுமன்றி பாதிப்பிற்கு உள்ளானவர்களின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகமிக அவசியமாகின்றது.

(சி357611)(29)

## District Mine Action Office,Jaffna

## மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம்,யாழ்ப்பாணம்

# சொந்த வீட்டில் வாழ்வது போன்ற உணர்வுடன் கைதடி முதியோர் இல்லத்தின் மூத்தோர்

**சொந்த வீட்டில் முதியவர்கள் எவ்வாறு பாதுகாப்புடனும், பராமரிப்புடனும் இருக்கிறார்களோ அதேவசதிகள் கைதடி முதியோர் இல்லத்தில் அவர்களுக்குக் கிடைக் கின்றன. அவர்கள் மிகுந்த சந்தோஷத்துடன் தமது இறுதிக் காலத்தை அங்கு கழிக்கின்றார்கள். அவர்களுக்கான தேவைகள் உரிய நேரத்தில் நிறைவு செய்யப்படுவதைக் காணமுடிந்தது.**

**அதேவேளை - முதியோர் இல்லத்தில் பணியாளர்களும் அலுவலர்களும் மிகுந்த கரிசனையுடன் முதியோரைப் பராமரித்து வருவதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.**

**இந்த இல்லத்தின் பொறுப்பாளராகவிருந்து சேவை புரிந்து வரும் கே.வி.சிவனேசன் இல்லத்தின் தற்போதைய நிலைமை, இல்லத்திற்கான தேவைகள் குறித்து அறிவதற்காக அங்கு சென்ற உதயன் செய்தியாளரிடம் தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.**




யுத்தத்தால் சேதமடைந்து மீண்டும் புனரமைக்கப்படாத நிலையில் உள்ள கட்டடம்...

நேரில் சென்றதில் சேகரித்தவை

கே.வி.சிவநேசனின் செவ்வி வருமாறு:-

*கேள்வி:-* இன்றைய கால கட்டத்தில் முதியோர் இல்லங்களின் செயற்பாடுகள் எவ்வாறு உள்ளன?

*பதில்:-* உலகளாவிய ரீதியில் முதியோரின் எண்ணிக்கை தற்போது பல மடங்காக அதிகரித்து வருகின்றது. இதனால் வளர்ந்து வரும் நாடுகளில் முதியோர்களுக்கான விசேட நடவடிக்கைகளை அரசுகள் எடுத்து வருகின்றன.



மதிய போசனம் நடைபெறுகிறது...

முதியோர்களுக்கென தனியே ஒரு கிளினிக் எதுவும் இங்கு இல்லை. ஆனால் மேலை நாடுகளில் அவை உள்ளன. தற்போது முதியோர் இல்லங்களுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

*கேள்வி:-* எமது நாட்டில் முதியோர் இல்லங்களின் பராமரிப்பு எவ்வாறு உள்ளது?

*பதில்:-* முதியோர்களை முதியோர் இல்லங்களில் சேர்ப்பது வெட்கப்பட



முதியோர் துயிலும் பகுதி...

வேண்டிய விடயமல்ல. அவர்களை வீட்டில் உள்ளோர் பராமரிப்பதை விடதாம் இங்கு மிகவும் அவதானமாகவும், கரிசனையுடனும் பராமரிக்கின்றோம். இத்தகைய பராமரிப்பே மிகவும் அவசியமானதாகும்.

1947 இல் சேர். ஐவே ஜெனிங் தலைமையிலான ஆணைக்குழு ஒன்று முதியோரின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வதற்கு அமைக்கப்பட்டது. சமூக சேவைத் திணைக்களம் அமைக்கப்படுவதற்கும் இந்த ஆணைக் குழுவே அடிகோலியது.

அரச முதியோர் இல்லங்களாக முதன் முதலில் மூன்று முதியோர் இல்லங்களே அமைக்கப்பட்டன. அநுராதபுரம், கைதடி, மீரிகம ஆகிய இடங்களில் அவை நிறுவப்பட்டன.

கைதடி முதியோர் இல்லம் 1954 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இவ்வருடம் அது தனது 50ஆவது ஆண்டைப பூர்த்தி செய்தது. அன்று முதல் இன்று வரை அது முதியோர்களுக்கான தனது பணியை மிகவும் சிறப்பாகவும் தனித்துவமாகவும் தொடர்ந்து வருகின்றது. இலங்கையில் உள்ள மற்றைய முதியோர் இல்லங்களை விட கைதடி முதியோர் இல்லம் சிறந்த பராமரிப்பு முறையைக் கொண்டு இயங்கி வருகின்றது. இதனால் திறமையான செயற்பாட்டுக்கான விருது கடந்த ஆண்டு சமூக சேவை அமைச்சினால் எமது இல்லத்திற்கு வழங்கப்பட்டது.

*கேள்வி:-* தற்போது எத்தனை முதியோர்கள் இந்த இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

*பதில்:-* மொத்தம் 201 பேர் உள்ளனர். இவர்களில் 91பேர் பெண்கள், 110 பேர் ஆண்கள்.

*கேள்வி:-* எந்தெந்த இடங்களைச் சேர்ந்த முதியோர்கள் இங்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

*பதில்:-* பெரும்பாலும் யாழ். குடாநாட்டைச் சேர்ந்தவர்களே இங்கு உள்ளனர். எனினும், காலி, கண்டி, வவுனியா, கிளிநொச்சி போன்ற இடங்களில் இருந்தும் முதியவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

*கேள்வி:-* கைதடி முதியோர் இல்லத்தைப் பற்றி.....

*பதில்:-* வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரேயொரு அரச முதியோர் இல்லம் கைதடி முதியோர் இல்லமே. 15ஏக்கர் காணியில் இந்த முதியோர் இல்லம் அமைந்துள்ளது. பெண்களுக்கான 2 விடுதிகளும், ஆண்களுக்கான 3 விடுதிகளும் இப்போது உள்ளன. பெண்களுக்கான 3 ஆவது புதிய விடுதியொன்று தற்போது 'நீப்' திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது.

இது அடுத்த மாதம் 5 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளது.

இங்கு தினமும் ஒரு டாக்டர் 2 மணிநேரம் கடமையில் இருப்பார். 4 தாதிகள் நிரந்தரமாகவே இங்கு பணியாற்றுகின்றனர். மொத்தமாக 38 பணியாளர்கள் இங்கு பணியாற்றுகிறார்கள். வயோதிபர் இல்லப் பராமரிப்புக்கென மாதாந்தம் 2 லட்சம் ரூபா வரை செலவாகிறது.

*கேள்வி:-* ஒரு முதியவரை இல்லத்தில் அனுமதிப்பதற்கான நடைமுறைகள் என்ன?

*பதில்:-* 60 வயதிற்குட்பட்டவர்களையே பெரும்பாலும் இங்கு அனுமதிக்கின்றோம். அனுமதிக்கப்படவுள்ள முதியவர் எந்தக் கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்தவரோ அந்தக்கிராம அலுவலரினால் சிபாரிசு செய்யப்பட்டு பின்னர் பிரதேச செயலகத்தில் உள்ள சமூகசேவை உத்தியோகத்தரினால் பரிசீலிக்கப்பட்டு பிரதேச செயலரினால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவர்களை நாம் இங்கு ஏற்றுக் கொள்வோம்.

*கேள்வி:-* இங்குள்ள முதியவர்களின் பொழுது போக்குகள் பற்றி...

*பதில்:-* தினமும் மாலை வேளையில் 4 மணி முதல் 5 மணிவரை தியானத்தில் முதியவர்கள் ஈடுபடுவார்கள். பின்னர் அவர்கள் புத்தகங்களை வாசிப்பர்.

அடுத்த மாதம் முதல் இவர்களுக்கு கயிறு திரித்தல், உடைதயாரித்தல், பன்னவேலை ஆகிய பயிற்சிகளை வழங்குவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம்.

*கேள்வி:-* முதியோர் இல்லத்துக்கான மருத்துவ உதவிகள் எவ்வாறு உள்ளன?

*பதில்:-* மாதத்தில் ஒரு முறை டாக்டர் திருமதி கணேசமூர்த்தி இங்கு வந்து சேவை அடிப்படையில் கடமையாற்றுகிறார். அத்துடன், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள், சித்த மருத்துவத் துறை மாணவர்கள் மருத்துவ ரீதியான உதவிகளைச் செய்து வருகின்றனர்.

*கேள்வி:-* வயோதிபர் இல்லத்துக்கான நிதி ஒதுக்கீடுகள் கிடைப்பதில் பிரச்சினை ஏதாவது உள்ளதா?

*பதில்:-* அப்படி ஒன்றும் இல்லை. எமக்கான நிதி ஒதுக்கீடுகள் எல்லாம் உரிய வேளையில் கிடைக்கின்றன. பணியாளர்களுக்கான சம்பளமும் எதுவித பிரச்சினையும் இல்லாமல் கிடைக்கின்றது. தற்போது எமக்கு குறைபாடுகள் என்று எதுவுமில்லை. நாம் முழுமையான திருப்தியுடன் இயங்குகின்றோம்.

## உறவினருக்கு அறிவித்தும் அவர்கள் வராத நிலையில் மரணிப்போர் பூதவுடல்கள் அரச செலவில் தகனம்

**- தேவா -**

*கேள்வி:-* இங்கு உள்ள முதியவர் ஒருவர் மரணமானால் என்ன செய்வீர்கள்?

*பதில்:-* அவருக்கு உறவினர்கள் யாரும் இருந்தால் அவர்களுக்கு உடனடியாக அறிவிப்போம். அப்படி இறந்தவின் உடலை அவர்கள் பொறுப்பேற்காவிட்டால் நாம் அரச செலவில் அதனை உரிய சமயு முறைப்படி இறுதிக் கிரியைகளை நடத்தி பூதவுடலை தகனம்/நல்லடக்கம் செய்வோம். பெரும்பாலும் இறப்பவர்களின் உறவினர்கள் இங்கு இருந்தும் கூட அவர்கள் சடலத்தைப்பொறுப்பேற்காத நிலைமையே உள்ளது.



*கேள்வி:-* எவ்வகையான முதியவர்கள் இங்கு கூடுதலாக உள்ளனர்?

*பதில்:-* பிள்ளைகள் இல்லாதவர்களும், திருமணமாகாதவர்களுமே பெரும்பான்மையாக இங்கு உள்ளனர். இவர்களில் அநேகர் மிகுந்த திடகாத்திரத்துடன் உள்ளனர். இங்கு தங்கியுள்ளவர்களில் 21 பேர் இறந்த பின்னர் தமது உடலை மருத்துவ பீடத்திற்குக் கையளிக்க முன் வந்துள்ளனர்.

*கேள்வி:-* முதியோர் இல்லத்தில் தற்போது நிலவும் ஏதாவது குறைபாடுகள் பற்றி....


*பதில்:-* குறைபாடென எதுவுமில்லை. முதியோர் இல்லத்தில் யுத்தத்தினால் சேதமடைந்த மூன்று விடுதிகள் மட்டும் இதுவரை திருத்தப்படாமல் உள்ளன. அந்த விடுதிகளைப் புனரமைப்பதற்கென முன்னர் ஒப்பந்தம் செய்து கொண்ட நிறுவனத்துடன் சில பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இதனால் அந்தப்புனரமைப்புப் பணிகள் தற்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அந்தக் கட்டடங்களும் முழுமையாகப் புனரமைக்கப்பட்டுப் பயன்படுத்தக் கூடிய நிலை ஏற்படும்போது நாம் இன்னும் அதிக எண்ணிக்கையான முதியவர்களை இங்கு அனுமதிக்கமுடியும் என்றார் அவர். ✪



புதிதாக அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான விடுதி...

# 51 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## அமரர் கந்தையா தருமலிங்கம்

(ஓய்வுபெற்ற முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கக்கிளை)

மலர்வு
11
௨
04
௨
1937



உதிர்வு
08
௨
05
௨
2004

*ஆதரிக்க ஆயிரம் உறவு உண்டு – ஆனால்*
*'அப்பா' என அழைக்க நீங்கள் இல்லையே!*
*அப்பா! உங்கள் உடல் எங்களை விட்டுச்சென்றாலும்*
*உங்கள் நினைவுகள் எங்களைவிட்டு அகலாது!*
*சீரும் சிறப்புடனும் எங்களை வாழவைத்த*
*எங்கள் அன்புத் தெய்வமே!*
*எங்கள் இதயம் எல்லாம் நிறைந்து நிற்கும்*
*உங்கள் நினைவுகளை*
*எங்கள் உயிர் உள்ளவரை நாம் மறவோம்.*

எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*புவனேஸ்வரி அம்மன் கோவிலடி,*
*உடுப்பிட்டி.*

உங்கள் பிரிவால் என்றும் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

## நுளம்பு பெருகக் காரணமான அதிபருக்கு அபராதம்

பாடசாலைச் சூழலைத் துப்புரவாக வைத்திருக்காததால் நுளம்புகள் பெருகுவதற்குக் காரணமாக இருந்தார் என்ற குற்றசசாட்டின் பேரில் பாடசாலை அதிபர் ஒருவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது.

பதுளை சுசமயவர்த்தன மகா வித்தியாலய அதிபரிடமே இவ்வாறு ஆயிரத்து 500 ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.

பாடசாலைச் சுற்றுப்புறத்தைத் துப்புரவாக வைத்திருக்கவில்லை என கொழும்பு மாநகரசபை இவர் மீது குற்றஞ்சாட்டி வழக்குத் தொடர்ந்தது. இந்த வழக்கிலேயே மாலிகாந்த நீதிவான் பிரியந்த சில்வா அதிபருக்கு அபராதம் விதித்தார். (ஓ-ரி)


### விற்பனைக்கு

இல. 15/8, ஓட்டுமடம், செபஸ்ரியார் வீதியில் 5பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும் அமைந்த மாடிவீடு விற்பனைக்குண்டு. (33461)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**த.கனகரத்தினம்**
இல.234/6 செபஸ்ரியார் வீதி,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

### விற்பனையாளர் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல இரும்புக்கடை ஒன்றிற்கு அனுபவமுள்ள விற்பனையாளர் தேவை.

தொடர்பு:
விளம்பர இல. 2311
மே/பா உதயன். (33455)

### மணப்பெண் அலங்காரம்

மணப்பெண் அலங்காரம், பேசியல், தலை அலங்காரம், திருமணம் மற்றும் சகலவகையான கேக், புகைப்படம், வீடியோப்படம் பிடித்தல் ஆகியவை சிறந்த முறையில் செய்துதரப்படும்.

தொடர்பு: **தனா**
T.P.: 0777 316453 (33474)

# MICROPEER
**Information Technology Soloutions**

இறக்குமதி செய்யப்பட்ட **COMPAQ**
கணனிகள் மிகக் குறைந்த விலையில்

| | | |
|---|---|---|
| C 600MHz | PIII 733MHz | PIII 866MHz |
| 15" COMPAQ Color Monitor | 15" COMPAQ Color Monitor | 15" COMPAQ Color Monitor |
| Desktop ATX Casing | ATX Tower Casing | ATX Tower Casing |
| 128 RAM | 128 RAM | 256 RAM |
| 10 GB HDD | 10 GB HDD | 20 GB HDD |
| NIC | NIC | NIC |
| Sound Card | Sound Card | Sound Card |
| CDROM | CDROM | CDROM,CD Writer |
| KB and Scroll Mouse | KB and Scroll Mouse | KB and Scroll Mouse |
| 15995/= | 27750/= | 36750/= |

☞ மொத்தக் கொள்வனவிற்குக் கழிவு உண்டு

தொலைபேசி இல: 011 2361858, 011 2361878, 0777531350

60 A, உருத்திரா மாவத்தை, வெள்ளவத்தை, கொழும்பு-06

Email: admin@micropeer.lk (தமிழ்ச் சங்கத்திற்கு அருகாமையில்) www.micropeer.lk

# 30,000 கண்ணிகளை அகற்றிய 'ஹலோரஸ்ட்' நிறுவனம்;

# அதன் மீதான நாசவேலையின் நோக்கம், பின்னணி என்ன?

## அதிர்ச்சி தரும் சம்பவம் என்கிறார் பொறுப்பதிகாரி

"எமது நிறுவனம் மீது நடத்தப் பட்டுள்ள தாக்குதலில் ஓரிருவர் சம் பந்தப்படவில்லை. 20 பேர் கொண்ட குழு சம்பந்தப்பட்டுள்ளது. நன்கு திட் டமிடப்பட்டு இத்தாக்குதல் மேற்கொள ளப்பட்டுள்ளது."

'ஹலோ ரஸ்ட்' நிறுவனத்தின் செயற்பாட்டுக்குப் பொறுப்பான திட்ட மிடல் முகாமையாளர் வலோன் கும்னோவா (VALON KUMNOVA) இப்படித் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதி உதவியுடன் 'ஹலோ ரஸ்ட்' பிரிட்டிஷ நிறுவனம் குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமானப் பணியை மேற்கொள்ள 2002 ஜூன் மாதம் யாழ்ப்பாணத்தில் காலடி வைத்தது.

கண்ணி அகற்றும் பணியில் முத லில் கண்ணி இருக்கும் இடங்களை மதிப்பீடு செய்து, வரைபடங்களைத் தயாரித்து சுமார் பத்துப் பேருடன் தனது பணியை ஆரம்பித்த இந்நிறு வனம், காலக்கிரமத்தில் தனது வேலைகளை விஸ்தரித்து வந்தது.

கனரக வாகனங்கள் பெரும் எண்ணிக்கையில் கொண்டு வரப் பட்டன. ஆளணியும் அதிகரிக்கப் பட்டது. நான்கு வெளிநாட்டவர்கள் உட்பட 272 பேரைக் கொண்டபெரும நிறுவனமாக இப்போது மாறியுள்ளது.

### 30 ஆயிரம் கண்ணிகளை அகற்றிய நிறுவனம்

குடாநாட்டில் பல பிரதேசங் களிலும் மக்களின் உயிருக்கு அச் சுறுத்தலாகப் புதைக்கப்பட்டிருந்த கண்ணிகளில் சுமார் 30 ஆயிரம் கண்ணிகளை இந்நிறுவனம் அகற் றிச் செயலிழக்கச் செய்துள்ளது.



மேலும் தனது பணிகளை விரி வாக்கி 2006 ஆம் ஆண்டில் குடா நாட்டைக் கண்ணிவெடியற்ற பிரதேச மாக்கும் இலக்குடன் இந்நிறுவனம் செயற்பட்டு வருகிறது.

கடந்த வியாழக்கிழமை இந்த நிறுவனத்தின் - நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள - வாகனத் தரிப்பிடம் மீது தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது.

கறுப்புத்துணியால் முகங்களை மூடிக்கட்டி இனம்காண முடியாத 20 பேர் கொண்ட குழு ஒன்றினால் இந்த அடாவடித்தனமான தாக்குதல் நடத் தப்பட்டிருக்கிறது.

தாக்குதலுக்கான காரணம் என்ன என்பதற்கு அப்பால், குடாநாட்டில் மனிதாபிமானப் பணியில் ஈடுபட்ட நிறுவனம் தாக்கப்பட்டுள்ளது. மனிதா பிமானப் பணிகள் என்ற போர் வையில் வெளிநாடுகள் வழங்கும் நிதிகளில் பெரும் பங்கு அந்தப் பணி களை மேற்கொள்ளும் நிறுவனங் களின் மேலதிகச் செலவீனங்களுக்குச் சென்றபோதும், ஓரளவாவது மனிதா பிமானப் பணிகள் நடக்கின்றன என்று திருப்திப்படலாம்.

குடாநாட்டில் இயங்கும் மனிதா பிமான அமைப்பு மீது தொடுக்கப் பட்ட இந்த நாசவேலையின் விளை வுகள் எப்படியிருக்கப்போகின்றன என்று குடாநாட்டு மக்கள் கலக்கம் அடைந்துள்ளனர். தமது உயிருக்கும் உடலுக்கும் பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஒரு நிறு வனத்தின் மீதான தாக்குதல் வேண் டத்தகாத நோக்குடன் செய்யப்பட்டதா என்ற மன அதிருப்தியும் மக்களிடம் தொனிக்கிறது.

**துருவியன்**

கடந்த வியாழக்கிழமை நடை பெற்ற தாக்குதல் சம்பவத்தில் இருந்து இன்னமும் விடுபடாத நிலையில் சோகமும், அதிர்ச்சியும் கலந்தநிலையில் காணப்பட்ட அந்த நிறுவனத்தின் திட்டமிடல் முகாமை யாளர் வலோன் கும்னோ வாவைச் சந்தித்தோம்.

### திட்ட முகாமையாளர் கருத்து

"கடந்த இரண்டு வருடங்களாகக கண்ணிவெடி அகற்றும் மனிதா பிமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது செயற்பாடு கள் குறித்து எந்தவித முறைப்பாடு களும் கிடைக்கவில்லை. எந்தப்பிரி வினராலும் எந்தவித அச்சுறுத்தலும் விடுக்கப்படவில்லை. இந்நிலையில், இந்தச்சம்பவம் அதிர்ச்சியைத் தரு கின்றது. இந்தத் தாக்குதல் ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான காரணமும் தெரியவில்லை - என்றா தாழ்ந்த குரலில்.

இந்தப் படுமோசமான தாக்குதல் ஓரிருவரால் மேற்கொள்ளப்படவில்லை. நன்கு திட்டமிடப்பட்டு 20 பேர் கொண்ட குழுவால் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

இதனால் மூன்று 'மிற்சுபிசி' ஹண்டர்களும், ஓர் அம்புலன்ஸும் சேதமாக்கப்பட்டுள்ளன.

ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி ஐம்பது லட்சம் ரூபா என மதிப்பிடப் பட்டுள்ளது - என்றார் அவர்.

இந்தச்சம்பவத்தின் பின்னணி




என்னவாக இருக்கும் என அறியும் நோக்குடன் அவரிடம் ஒரு வினா வைத் தொடுத்தபோது -

"நாங்கள் பொலீஸார் அல்லர். ஸ்ரீலங்காப் பொலீஸாரிடமும் விடு தலைப் புலிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளோம். அவர்கள்தான் இதைப் பற்றி விசாரித்து பின்னணி யைக் கண்டுபிடிக்கவேண்டும்" என்றார் அவர்.

இந்தச் சம்பவம் காரணமாக வெளிநாடுகளிலிருந்துவரும் மனி தாபிமான உதவிகள் கிடைப்பதில் தடங்கல் ஏதாவது ஏற்பட வாய்ப்பு உண்டா எனக் கேட்டதற்கு - உட னடியாக அதுபற்றி எதனையும் கூறத்தக்க நிலை இப்போது இல்லை என்றார்.

இத்தகைய சம்பவங்களை யாழ்ப் பாண மக்கள் ஒருபோதும் விரும்ப மாட்டார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். மனிதாபிமானப் பணிகள் தொடரவேண்டும் என்பதுதான் அவர்க ளின் விருப்பம் என்பதனை நான் அறிவேன் - என்றார் வலோன் கும் னோவா

### பின்னணி என்ன?

இந்தச் சம்பவத்தின் பின்னணி யில், உள்ள சூத்திரதாரிகளைக் கண்டுபிடிக்கப் பொலீஸாரும், விடுத லைப் புலிகளும் தனித்தனியே முனைப் புடன் விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.

இந்த நாசவேலைக்கு தனிப் பட்ட ரீதியிலான உள்பிணக்குகள் ஏதும் உந்துதலாக இருந்தனவா? வெளியார் எவரின் உதவியுடனும் செய்யப்பட்டதா? வெளியார் எவராலும் திட்டமிட்டுச் செய்யப்பட்டதா? என்பன போன்ற பல வகையான நடப்பனவச சாதக, பாதகங்களை விடுதலைப் புலிகளும், பொலீஸாரும் தத்தமது மட்டத்தில் மிக நுணுக்கமாக ஆராய்ந்து வருகின்றனர் எனத்தெரிய வருகின்றது. ★

# தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது சங்கம நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது சங்கம நிகழ்வு நேற்றுக்காலை மானிப்பாய் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப பேரவையின் செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் இடம்பெற்ற இச்சங்கம நிகழ்வில் பொதுச்சுடரினை தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மாவீரர் களான கபிலன் மற்றும் கபிலா ஆகியோர் களின் பெற்றோர்களான திரு.திருமதி மார்க்கண்டு மற்றும் யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப் பாளர் ஆகியோரும்-

ஈகச்சுடரினை தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமை நேசன், வடமராட்சிக் கோட்ட எழுச்சிப் பேரவைச் செயலர் திருமதி இந்திரா விநாயகமூர்த்தி மற்றும் தென்மராட்சிக் கோட்ட எழுச்சிப் பேரவைச்செயலாளர் சந்திரமோகன் ஆகியோரும் ஏற்றிவைத் தனர்.

தேசிய எழுச்சிப் பேரவையின் ஆலோசகர் சி.சிவமகாராசா, யாழ். நல்லூர் கோட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவஞானசேகரன், கோப் பாய்க் கோட்டச் செயலாளர் சிவ கடாட்சம் மற்றும் சங்கானைக் கோட் டச் செயலாளர் ஆகியோர் மாவீரர் களின் திருவுருவப் படங்களுக்கு மலர் மாலை அணிவித்தனர்.

வரவேற்புரையை வலி.தென் மேற்கு தேசியஎழுச்சிப் பேரவைச் செயலாளர் சிவகுமாரும், சிறப்புரை களை தமிழீழ துணைஅரசியற் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழ எழுச்சிப்பேரவைப் பொறுப்பாளர் உமை நேசன் ஆகியோரும் நிகழ்த்தினர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயலாளரும், தேசிய எழுச் சிப் பேரவையின் ஊடகப்பேச்சாள ருமான ப.கனகலிங்கம் மற்றும் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிபேர வையின் மாவட்ட, கோட்ட, பிரதேச மற்றும் ஊரகப் பிரிவுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஒ-5-86-185)





தேசிய எழுச்சிப் பேரவையின் மூன்றாவது சங்கம நிகழ்வில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் உமைநேசன், அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஆகியோர் அகவணக்கம் செலுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும், மாவீரரின் பெற்றோர்களான திரு.திருமதி மார்க்கண்டு தம்பதியினர் பொதுச்சுடர் ஏற்றுவதையும், வடமராட்சிக் கோட்ட எழுச்சிப்பேரவைச் செயலாளர் திருமதி இந்திரா விநாயகமூர்த்தி ஈகச்சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: வசந்தன்)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சிவத்திரு. கனக.**
**பாலசுப்பிரமணிய ஐயா**
(பிரபல முத்துச்சப்பற அமைப்பாளர்,
அச்சுவேலி, பத்தமேனி,
தீர்த்தாங்குளப்பதி)

**திதி:** இன்று (27.06.2004)
பூர்வபக்க தசமி

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்.

மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*தீர்த்தாங்குளப்பதி,*
*பத்தமேனி,*
*அச்சுவேலி.* (33520)(37)

## கலந்துரையாடல்

'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆதரவுடன் மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஆரம்பக் கல்வி கணித பாடத்திற்கான உபகரணங்களை வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கலலூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் கத்தரிக்கோல், அடிமட்டம், கடதாசி வெட்டும் கத்தி ஆகியவற்றுடன் கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளின் அதிபர்கள், ஆரம்பக் கல்விப்பகுதித் தலைவர்கள் மற் றும் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்களைக் கேட்டுள்ளார். (10-117)

# கண்ணீர் அஞ்சலி



அமரர் **கந்தையா றஞ்சித்**
(ஆசிரியர். யா/புனித பத்திரிசியார் கல்லூரி)

பிறப்பு 02.08.1953 — மறைவு 20.06.2004

எண்ணிரண்டு ஆண்டுகளாய் எம் குடும்பப்
பொருளியல் பேராசான்
கண்ணிரண்டாய் மாணவரைக் கண்ணியமாய்
வழிநடத்தும் பகுதித் தலைவன்
ஆசிரியப் பண்பதனைச் சிரமேற்ற கடமை வீரா
றஞ்சித்தே! பத்திரிசிய
காசினியே கலங்குதையா உம் பிரிவால்
தவிக்கின்றோம் நாம் தனித்தனியாய் உதிரிப்பூக்கள்
அளித்தோம் எம் அஞ்சலியாய் கண்ணீர்ப்பூக்கள்!

அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.

(33517)(34-16-33)

# மரண அறிவித்தல்



**கந்தையா றஞ்சித்**
(B.A.(Hons)Dip-in-Ed., *ஆசிரியர் யா/புனித பத்திரிசியார் கல்லூரி)*

22(46), பலாலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா றஞ்சித் அவர்கள் 20.06.2004 (ஞாயிற்றுக்கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - சிவயோகம் ஆகியோரின் மூத்த மகனும் றஞ்சிதமலரின் (கனடா) அன்புக் கணவரும் றஸ்மியின் (கனடா) பாசமிகு தந்தையும் பவளராணி, றஜனி (கனடா), றஜந்தன் (பிரான்ஸ்), றஞ்சினி (லண்டன்), ராகினி (சமுர்த்தி முகாமையாளர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), றஞ்சன் (கனடா), றசிகன் ( பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம், காலஞ்சென்ற கதாகரன், ஜெயந்தன் (லண்டன்), காலஞ்சென்ற யோகராசா (கிராமசேவையாளர்), வனஜா (பிரான்ஸ்), சுஜீவா, ஜெயசாந்தி (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் சுதானந்தன், ஜெயாநந்தன், சத்தியா, நித்தியா, மயூரானந்தன், திவியாநந்தன், சிந்தூரி (கனடா), ஜெசேன் (லண்டன்), ஜெசிதா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வைதிகா (பிரான்ஸ்), றெசாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும் டிலுக்சனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு அவரது (59), பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின்னர் 10.30 மணிக்கு யா/புனித பத்திரிசியார் கல்லூரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் வில்லூன்றி மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
க.சிவயோகம்(தாய்),
யோ.இராகினி (சகோதரி).

*59,பருத்தித்துறை வீதி,*
*யாழ்ப்பாணம்.* (சி-33509)(37-16-33)


# கலாலயா

பயிற்சியகம்
பதிவு இல-16020
யாழ்ப்பாணம்.

## மனைப்பொருளியலும் கைத்திறனும் பயிற்சிகள்

3 மாத கால
- ★ கேக்ஐஸிங்
- ★ மனையியல்
- ★ கூந்தல் அலங்காரம்
- ★ FABRIC PAINTING வகுப்புக்கள்

இத்துடன் இரு நாள்களுக்கான அடிப்படை FACIAL அழகுக்கலை வகுப்புக்கள்
6 மாதகால
★ உடை தைத்தல், மலர்கள் செய்தல், கைப்பணி வகுப்புக்கள்.

கிழமை நாள்கள் மற்றும் சனி, ஞாயிறு
புதிய பிரிவுகளுக்கு மாணவிகள் அனுமதிக்கப்படவுள்ளனர்.

***மேலும் விவரங்களை*** வியாழன், வெள்ளி தவிர்ந்த ஏனைய நாள்களில் பி.ப. 1.00 மணி வரை அறிந்து கொள்ளலாம்.

(சி35847)37) - பதிவாளர்.

# பழைய நினைவுடன் புதிய அறிமுகம்!

## வடபகுதி மக்களின் மனம் நிறை நாயகன்

உறுதியான உழைப்பு
நீடித்த வாழ்வு
பயணத்தில் மகிழ்ச்சி

# ஏசியா

இதுவே ஏசியாவின் தனிச்சிறப்பு



ஏசியா
மீண்டும்
தெருவெங்கும்
வலம்
வருகின்றான்

சிறப்புச்சலுகை
புதிய சைக்கிள்
புட்டு, கரியல்,
ஸ்ராண்ட்.........

யப்பான் – இந்தியா கூட்டுருவாக்கத்தில்
விளைந்தஏசியா சைக்கிள்களை
சிறப்புக்கழிவு விலையில்
நீங்களும் பெற்றுப் பயன்பெறுங்கள்.

ISO 2001-4000 & ISO 12001
தரச்சான்றிதழ் பெற்ற
சைக்கிள்கள் இப்போது உங்கள் கையில்

## யாழ்.மண்ணில் உங்கள் தேவைகளுக்கு :

வடபகுதியில்
அறிமுகப்படுத்துவோர்:
ஏசியா இன்டஸ்ரீஸ்
**ASIA INDUSTRIES**
ISO - 2001 - 4000 &
ISO 12001 CERTIFIED
13/3 Mathura Road,
Faridabad - 142004,
Haryana india.

(C/35546)

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
50, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் T.P. 021 222 2988

வெங்கடேஸ்வரா ஸ்ரோர்ஸ்
79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2905

ஈஸ்வரன் ரேடர்ஸ்
69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P. 021 222 2813

சுப்பிரமணியம் அன் கோ
காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

முருகன் களஞ்சியம்
167, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P 6968

அற்லஸ் இன்ரநைஷனல் (PVT) .LTD
77, கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம். T.P 021 222 2557



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



# ஐரோப்பியக் கிண்ணப் போட்டியின்
# அரையிறுதி ஆட்ட வாய்ப்பை இழந்து பரிதாபமாக வெளியேறிய இங்கிலாந்து

லண்டன்,ஜூன் 27

ஐரோப்பியக் கிண்ணக் காற்பந்துப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் விளையாட போர்த்துக்கல் அணி தகுதி பெற்றுள்ளது.

சொந்த மண்ணில் உள்ளூர் ரசிகர்களின் பலத்துடன் களமிறங்கியது போர்த்துக்கல் அணி. இங்கிலாந்து அணி பெக்காம், மைக்கேல் ஓவன், வெய்ன் ரூனே என ஏகப்பட்ட நட்சத்திரங்களுடன் களம் புகுந்தது. ஆட்டம் தொடங்கிய 32ஆவது நிமிடத்திலேயே போர்த்துக்கலுக்கு அதிர்ச்சி கொடுத்தார் ஓவன். பெனால்டி ஏரியாவில் வைத்து போர்த்துக்கலின் கோஸ்டின்கா பந்தை தலையால் தட்ட, அது சக வீரருக்குச் செல்லாமல் நேராக ஓவனுக்கு வந்தது. இந்த அருமையான வாய்ப்பை விடுவாரா ஓவன். அப்படியே திரும்பியவர், பந்தை கோல் போஸ்டிற்குள் அடிக்க இங்கிலாந்தின் முதல் கோல் விழுந்தது. இது 60 சர்வதேச போட்டிகளில் விளையாடிய ஓவன் அடித்த 26ஆவது கோல்.

3ஆவது நிமிடத்திலேயே முன்னிலை பெற்று முதல் பாதியில் இங்கிலாந்து முழுமையாக ஆதிக்கம் செலுத்தியது. பெரும்பாலான நேரம் இந்த அணியின் வீரர்கள் வசமே பந்து இருந்தது. இங்கிலாந்தின் தற்காப்பு வீரர்களைக் கடந்து செல்ல முடியாமல் போர்த்துக்கல் தவித்துப் போனது. 27ஆவது நிமிடத்தில் ரூனேவுக்கு கணுக்காலில் காயம் ஏற்பட்டதால் இவருக்குப் பதிலாக பேரியஸ் வேசல் களமிறக்கப்பட்டார். ரூனே வெளியேறியது போர்த்துக்கலுக்கு சாதகமாக அமைந்தது. ஆனாலும், இவர்களது விடாமுயற்சிக்குப் பலன் தான் கிட்டவில்லை. குறிப்பாக கப்டன் பிகோ அடித்த பந்து பலமுறை கோல்போஸ்டை விட்டு விலகிச் சென்றதைக் காணமுடிந்தது.

இதையடுத்து இரண்டாவது பாதியில் பிகோவுக்குப் பதிலாக போஸ்டிகா களமிறங்கினார். அடுத்து மிகியுலுக்கு பதில் ரூயி கோஸ்டா களமிறக்கப்பட்டார். இந்த இரட்டை மாற்றும் எதிர்பார்த்த பலனைத்தந்தது. இங்கிலாந்தின லாம்பார்ட் பந்தைத் தவறுதலாக பாஸ் செய்ய, அதைப் பெற்ற சிமாவோ அப்படியே போஸ்டிகாவுக்கு அனுப்பினார். இதை தலையால் முட்டி போஸ்டிக்கோ கோல் ஆக்க ஆட்டம் சமநிலையை எட்டியது.



90ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் மைக்கேல் ஓவன் தலையால் தட்டிய பந்து போஸ்ட்டில் பட்டு திரும்பியது. இதை சக வீரரான கேம்பல் மீண்டும் தலையால் முட்டி கோல் போஸ்ட்டுக்குள் அனுப்பினார். ஆனால, இங்கிலாந்தின் ஜான் டெர்ரி போர்த்துக்கல் கீப்பர் ரிக்கார்டாவை தவறுதலாக தடுத்ததாகக் கூறி நடுவர் உர்ஸ் மெயர் கோல் இல்லை என்று அறிவித்தார். இதற்கு இங்கிலாந்து தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு சர்ச்சை எழுந்தது. ஆனாலும், இந்த வாய்ப்புப் பறிபோனமை; இங்கிலாந்துக்குப் பேரிடியாக அமைந்தது.

நிர்ணயிக்கப்பட்ட 90 நிமிடங்கள் முடிந்த நிலையில் இரு அணிகளும் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்ததால் கூடுதல் நேரம் வழங்கப்பட்டது. இதில் 110ஆவது நிமிடத்தில் இங்கிலாந்தின் பில் நெவிலை ஏமாற்றி ஒரு அற்புதமான கோலை அடித்தார் போர்த்துக்கலின் கோஸ்டா. அப்போது போர்த்துக்கல் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. ஆனால், கோர்ணக்கோல் வாய்ப்பு மூலம் இங்கிலாந்தின் லாம்பார்ட் 115ஆவது நிமிடத்தில் கோல் அடித்துப் பதிலடி கொடுக்கப்போட்டி மீண்டும் 2:2 என்ற கணக்கில் சம நிலைக்கு வந்தது.

இதன்காரணமாக ரைபிரேக்கர் மூலம் முடிவு நிர்ணயிக்கப்பட்டது. இதில் இங்கிலாந்து மோசமாகத் துவக்கியது. முதல் வாய்ப்பையே கப்டன் பெக்காம் கோல் போஸ்ட்டுக்கு மேலே தூக்கி அடித்து வீணாக்கினார். ஆனால், மூன்றாவது வாய்ப்பைப் போர்த்துக்கலின் ரூயி கோஸ்டா 'மிஸ்' செய்ய இங்கிலாந்துக்கு நம்பிக்கை பிறந்தது. இந்த 5வாய்ப்பின் முடிவில் இரு அணிகளும் தலா ஒரு வாய்ப்பை மிஸ் செய்ய ஆட்டம் மீண்டும் 4-4 என்ற கோல் கணக்கில் சமநிலையை எட்டியது. இறுதியாக 'சடன்டெத்' முறை கொண்டு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதில் ஒருவாய்ப்பு மட்டுமே வழங்கப்படும்.

இதில் இங்கிலாந்தின் வேசல் மிகவும் தாழ்வாக இடதுபுறமாக அடித்த கோலை போர்த்துக்கல் கீப்பர் ரிக்கார்டோ அபாரமாகத்தடுத்தார். பின்னர் இரண்டாவது வாய்ப்பில் இவரே கோல் அடித்து அணியை அரையிறுதிக்கு அழைத்துச்சென்றார். 5-6என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்த இங்கிலாந்து தொடரில் இருந்து வெளியேறியது.(10)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம,ஜூன்27

அமரர் இரத்தினசாமி ஞாபகார்த்த சுழல் கேடயத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள கால் இறுதி ஆட்டங்கள் வருமாறு:-

★ காலை 8.30 மணி-ஸ்பேஸ் வி.க. எதிர் கலைமகள் வி.க.

★ முற்பகல் 11.30 மணி - திறீஸ்ரார் வி.க. எதிர் இமையாணன் மத்தி.வி.க.

★ பிற்பகல் 3.30 மணி - பருத்தித்துறை ஐக்கிய வி.க எதிர் டயமன்ஸ் வி.க. (10-190)

★ ★ ★

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் கே.சி.சி.சி. வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:-

★ காலை 8.30 மணி - ஸ்ரான்லி வி.க. எதிர் கே.சி.சி.சி. வி.க.

★ பிற்பகல் 1.30 மணி - சென்றலைட்ஸ் வி.க. எதிர் பல்கலைக்கழக அணி. (10-190)

## சுற்றுப்போட்டிகள்

கோப்பாய்,ஜூன்27

கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கலாசாரக்கழகம் தமிழீழ விளையாட்டுத் துறையின் ஆதரவுடன் யாழ். மாவட்ட ரீதியில் கிரிக்கெட், கரபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் ஆகிய சுற்றுப் போட்டிகளை நடத்தவுள்ளது. (10-72)

# விளையாட்டு

# சத்தியசாயி வித்தியாலய சிறுவர் விளையாட்டுவிழா

யாழ்ப்பாணம்,ஜூன்27

மானிப்பாய் சோதிவேம்படியிலுள்ள சத்தியசாயி வித்தியாலயத்தின் 2ஆம் ஆண்டு சிறுவர் விளையாட்டு விழா நேற்று சனிக்கிழமை சாயி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.



சத்திய சாயி சேவா நிலையங்களின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ஆர்.வசந்தசேனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சத்திய சாயி நிலையத்தின் கொடியினை தாய்லாந்து பாங்கொக் சத்திய சாயி பல்கலைக்கழகத்தின் இயக்குநரும், விஞ்ஞானியும் தாய்லாந்து அரசின் முன்னாள் அமைச்சருமான டாக்டர் ஆர்ற்ஓவ்ஜும் சாயும், சத்தியசாயி சேவா நிலையத்தின் கொடியினை சாயி இணைப்புக்குழுத்தலைவர் எம். வன்னியசேகரனும் ஏற்றிவைத்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்கள் சத்தியசாயி வித்தியாலய முன்றிலில் இருந்து பாடசாலை சிறுவர்களின் 'பாண்ட்' அணி வகுப்பு மரியாதையுடன் மைதானத்திற்கு அழைத்துவரப்பட்டனர் அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இச்சிறுவர்களின் விளையாட்டுக்கள் ஏனைய சிறுவர்களின் விளையாட்டுக்கள் போலல்லாது முற்றுமுழுதாக ஆன்மீக சிந்தனைகளை வெளிப்படுத்துவனவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் பாங்கொக் சத்திய சாயி பல்கலைக்கழக விரிவுரையாளர் லொரேயின் பரோஸ் அம்மையார், ஆஸ்திரேலிய சத்தியசாயி நிறுவன இயக்குநர் டாக்டர் பால்டால், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் உட்படப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். (10-5-72)

# அமெரிக்க உள்ளூர் கிரிக்கெட்டில் ஸ்ருவர்ட், கடிக் விளையாடுவரா?

இங்கிலாந்து அணியின முன்னாள் வீரர்களான அலெக்ஸ்ருவர்ட், ஆன்டி கடிக் ஆகிய இருவருக்கும் அமெரிக்க உள்ளூர் அணியில் ஆடுவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக வந்த செய்தியை இருவரும் மறுத்துள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெற்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட வீரர்கள் வெளிநாட்டில் உள்ள அணிகளோடு விளையாடுவது வழக்கம். இந்தமுறையில் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் விக்கெட்கீப்பருமான அலெக்ஸ் ருவர்ட், ஆன்டி கடிக் இருவரும் அமெக்க உள்ளூர் அணிகளில் பங்கேற்கும் கிரிகெட் லீக் போட்டிகளை நடத்த அமெரிக்கா விரும்புகிறது. இதில்தான் இவர்கள் பங்கேற்பதாக அமெரிக்கப் பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இந்தத் தகவலை இருவருமே மறுத்துள்ளனர். அமெரிக்க லீக் தொடர் ஜூலை 2இல் தொடங்குகிறது. முதல். போட்டியில் நியூயோர்க் அணி புளோரிடா அணியை எதிர்த்து ஆடவுள்ளது. (10)

## ஜெய்ப்பூர் நிறுவனத்தின் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்27

யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் நிறுவனத்தின் 17ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி வலுவிழந்தோருக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

முச்சக்கர வண்டி ஓட்டம், சைக்கிள் ஓட்டம் மற்றும் தடகள விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ள விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (10-190)

# தொடக்க ஆட்டக்காரர் யுவராஜே என்பதில் எந்த மாற்றமும் இல்லை

"டெஸ்ட் போட்டிகள் ஒக்ரோபரில் தான் ஆரம்பமாகவுள்ளன. அதற்குள் தொடக்க ஆட்டக்காரர் சர்ச்சையை ஏன் கிளப்புகிறார்கள் எனத் தெரியவில்லை" என்று கேள்வி எழுப்பியுள்ளார் இந்திய அணியின் தலைவர் கங்குலி.



இந்தியக் கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் யார் தொடக்க ஆட்டக்காரர் என்பதில் குழப்பம் நீடிக்கின்றது. 'வீரேந்தர் சேவாக்குடன் இணைந்து யுவராஜ் சிங் ஆட்டத்தைத் தொடங்குவார்' என்று சவ்ரவ் கங்குலி அறிவித்தார். இதற்கு சேவாக், சச்சின் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

"தொடக்க ஆட்டக்காரராக ஆகாஷ் சோப்ரா தான் தொடரவேண்டும்" என்று கருத்துத் தெரிவித்தனர். அவர்கள் இருவரும், கல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கங்குலியிடம் இது பற்றிக் கேட்டபோது அவர் கூறியதாவது:-

டெஸ்ட் போட்டிகள் ஒக்ரோபர் மாதம் தான் தொடங்குகின்றன. அதற்குள் தொடக்க ஆட்டக்காரர் பிரச்சினையை இப்போதே ஏன் தொடங்குகிறார்கள் என்று தெரியவில்லை. நடுவரிசை வீரராக யுவராஜ் சிறப்பாக விளையாடுகிறார் தொடக்க ஆட்டக்காரராகவும் அவர் முத்திரை பதிப்பார். தொடக்க ஆட்டக்காரராக இறங்கத் தயாராகுமாறு யுவராஜிடம் நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். அதில் குழப்பமே இல்லை. அதற்காக ஆகாஷ் சோப்ராவையும் புறக்கணிக்கப் போவதில்லை. அவரது இடம்பற்றித் தேர்வுக்குழுவினர் முடிவெடுப்பார்கள்.

பாகிஸ்தானை அவர்கள் சொந்த மணணில் வைத்தே வென்றமையால், அடுத்துவரும் ஆசியக் கிண்ணத் தொடரை வென்றே தீரவேண்டிய நெருக்கடியுடன் களமிறங்குகிறோம். பாகிஸ்தான் தொடருக்குப் பிறகு நாம் எந்தப் போட்டியிலும் விளையாடவில்லை என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். போட்டி ஊதியம் சமீபத்தில் குறைக்கப்பட்டதாக வெளியான அறிவிப்பால், வீரர்கள் யாரும் வருத்தப்படவில்லை. காரணம், மொத்தமாக எங்களுக்குக் கிடைக்கும் ஊதியம் எந்தவிதத்திலும் இதனால் குறையாது - இவ்வாறு கங்குலி தெரிவித்துள்ளார். (10)



புதுடில்லியில் சிறுவர்களுக்கான கிரிக்கெட் பயிற்சிமுகாம் ஒன்று நடந்தது. சச்சின் டெண்டுல்கர் இதில் கலந்துகொண்டு சிறுவன் ஒருவனுக்கு துடுப்பாட்டம் பற்றிச் சொல்லிக்கொடுப்பதைப் படத்தில் காணலாம்.



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

27.06.2004

HAPPY BIRTHDAY

யாழ்ப்பாணம், கண்டுக்குளியைச் சேர்ந்த
திருதிருமதி கிருபானந்தன் - கவிதா
தம்பதிகளின் செல்வப் புதல்வன்

## விபுஷன்

இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை தனது பிறந்தநாளை தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, தாத்தாமார், பூட்டி, பெரியப்பா, பெரியம்மா சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், அண்ணா, அக்கா, மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் நல்லூர்க் கந்தனின் அருள்பெற்று பல்கலையும் கற்றுப் பெருவாழ்வு வாழ வாழ்த்துகின்றனர்.

22/6, விதானையார் வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்:
S.கஜரூபன் (ரூபன்) - (சித்தப்பா)

(33540)(34)

# கண்ணீரில் காணிக்கை

தாயின் மடியில்
1981
04
28



இறைவன் அடியில்
2004
06
23

## நடராஜா தயாளன் (சூரன்)

அன்பின் திருவுருவாய் அறிவின் ஒளிவிளக்காய் பண்பின் சிகரமாய்
சவால்களுக்கு சரித்திர நாயகனாய் எமக்கெல்லாம்
நல்வழிகாட்டிய அன்பின் நண்பனே கனவுகள் நிறைந்த
பூ வே சூரா! நீ வாடமுன் உதிர்ந்ததேன்? இன்றும்
நீ எம்மைவிட்டுப் பிரியாமலே எம்கண்முன் நிற்கின்றாய்
உன் நினைவுகளை எங்கள் நெஞ்சம் மறக்குமா
நீ இவ்வுலகைவிட்டு மறைந்தாலும் எங்களுக்குள்ளே
நீங்காத அலையாய் வாழ்ந்துகொண்டிருக்கின்றாய்.

*உனது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

துயரம் நிறைந்த நினைவுகளுடன்:
N.ரமேஸ், K.பிரபா,
T.பிரபா, K.சித்து.

K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.
(33537)(24-12-17-37)

# மரண அறிவித்தல்கள்



## ஞானமூர்த்தி ஐயாத்தம்பி

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானமூர்த்தி ஐயாத்தம்பி 22.06.2004 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளிமுத்து அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ரட்ணசிங்கம், ஆச்சிமுத்து, பொன்னுத்துரை ஆகியோரின் சகோதரரும் புவனேஸ்வரி, யோகேஸ்வரி (ஆசிரியை, வீரசிங்கம் மகாவித்தியாலயம்), செல்வராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் வைரமுத்து (நீர்ப்பாசனத் திணைக்களம்), ஞானேஸ்வரன் (கிராமசேவையாளர் - பூநகரி), சுப்புலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் குமாரசுவாமி, ஏகாம்பரம் ஆகியோரின் சகோதரரும் புஸ்பலதா (லண்டன்), புஸ்பராசன் (லண்டன்), புஸ்பரஜனி, புஸ்பகாந்தன், அனோஜா, வானுஜா, மதுரங்கன், நிரோசா, நிவேதன், நிருசன் ஆகியோரின் அன்புப் பேரனும் பிரிதா, யதுன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.06.2004 ஞாயிறு காலை 10.00 மணியளவில அவரின் இல்லத்திலிருந்து பூதவுடல் எடுத்துச்செல்லப்பட்டு, வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மீசாலை வடக்கு,*
*கொடிகாமம்.* (33476)(37-12-17)

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.



## குமாரசாமி கலைச்செல்வி (கீதா)

ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கலைச்செல்வி (கீதா) 25.06.2004 வெள்ளிக்கிழமை அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் குமாரசாமி விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மகளும் விஜயகுமாரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பார்வதி ஆகியோரின் பேர்த்தியும் திருப்பதி (மணி), காலஞ்சென்றவரான மகேஸ்வரி (மனோர்ன்) மற்றும் சிவகாம்பிகை (மல்லிகா), யோகேஸ்வரி (யோகம்), ராணி ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்றவர்களான தியாகராஜா (தியாகு), கருணாநிதி மற்றும் அம்பிகாநிதி (வவா), சோதிலிங்கம் (ராசன்), சிவா நிதி (சின்ராசன்) ஆகியோரின் மருமகளும் கனகலிங்கம், தர்மலிங்கம், சோதி ஆகியோரின் பெறாமகளும் அன்னலட்சுமி, சறோ, மணி ஆகியோரின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

*41/11, ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.* (33352)(42-12-17-37)

தகவல்:
கு.விஜயகுமார் (சகோதரன்-விஜயன்).

# தென்மராட்சி வலயத்தில் செயலமர்வுகள்

தென்மராட்சி,ஜுன்27

தென்மராட்சிக் கல்விவலயப் பாடசாலைகளில் நடனம், சங்கீதம், சித்திரம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான இரண்டாம் தவணைக்கான செயலமர்வுகள் அடுத்தமாதம் 2 ஆம், 17ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ளன.

இரண்டாம் திகதி வரணி ஆசிரிய நிலையத்தில் நடனம், சங்கீதம், சித்திரம் ஆகிய பாடங்களுக்கான செயலமர்வுகளும் -

17ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞானபாட செயலமர்வும் நடைபெறுமென வலயக கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

கற்பிக்கும் வகுப்பிற்குரிய ஆசிரியர் கைநூல், பாடத்திட்டம், பாடநூல் ஆகியவற்றை ஆசிரியர்கள் கொண்டு வரவேண்டும் என்றும் - அறிவுறுத்தப் பட்டுள்ளது.

(எ-117)

## மடாலயத்துக்கு சமையற்காரர்கள் தேவை

1. ஆண் பாலார் விரும்பத்தக்கது.
2. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.
3. வயது எல்லை 35-50 வரை.
4. சாப்பாடு தங்குமிட வசதி இலவசம்.

**தொடர்புகளுக்கு:**
ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையம்,
சிவன்கோவிலடி காரைநகர்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00மணிதொடக்கம் 5 மணிவரை.

ந.சிவபரன் (தலைவர்) (33546)

## விற்பனைக்கு

இலக்கம் 65, கச்சேரி நல்லூர் வதியில் 2¼ பரப்புக்காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:-
113, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021-222-6240
(33544)(37)

## தேவை

வானில் சென்று பொருள்களை விற்பதற்கு உதவியாளர் தேவை.
தொடர்பு:
**சிவா பிறதேர்ஸ்,**
246, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:021-222 5497
(33518)


நாகம்ஸ் சுன்னாகம்
சூரியா, மாதவன், மீராஜஸ்மின், ஈசா நடித்த



தினசரி: 11.00, 3.00,
(C/35739) (12)

ராஜா யாழ்ப்பாணம்
விஜய், த்திரிசா, பிரகாஸ்ராஜ் நடித்த




காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(C/34517) (12)

லக்சுமி இணுவில்
அஜித், சிநேகா, ரகுவரன், வையாபுரி, கருணாஸ் நடித்த




தினசரி: 11.00, 3.00, 7.00 புதிய நேரம்
விசேட காட்சியாக வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 9.30 இற்கும் (33466) (40)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம், ஜோதிகா வழிவேல் நடித்த



காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 பு.நே.
வெள்ளி, சனி, ஞாயிறு
EXPOGURE (இரவு 8.45)
(C-35653)(12)


# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும்
பெருமதிப்புக்குமுரிய
பொருளியல் ஆசிரியர்

## கந்தையா றஞ்சித்

அவர்கள் 20.06.2004 ஞாயிற்றுக்கிழமை மறைந்ததையிட்டு நாம் மிகவும் துயரமடைகின்றோம்.

அன்னாரது பிரிவினால் ஆறாத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்தித்து, எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

A/L 2005 வணிகப்பிரிவு மாணவர்கள்,
புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(33545)(37-12-17)

# மரண அறிவித்தல்கள்

## நடராஜா தயாளன் (சூரன்)

(தயாளன் - தனுஷியா கூல்பார், யாழ்ப்பாணம்)



கரம்பொன் கிழக்கு, ஆஸ்பத்திரி வீதி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் இல.16,கில்னர் லேன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா தயாளன் (சூரன்) அவர்கள் 23.06.2004 புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் தர்மபூவதி தம்பதிகளின் பாசமிகு கனிஷ்ட புதல்வனும் தயாபரன் (பிரான்ஸ்), தயானந்தன், காலஞ்சென்ற தயாநிதி மற்றும் தயாளினி, தயாரூபன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் தர்சினியின் அன்பு மைத்துனரும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, கில்னர் லேன்,*
*கஸ்தூரியார் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (33530)(24-37-12-17)

தகவல்:
திருமதி தர்மபூபதி நடராஜா (தாய்).

## நாகலிங்கம் தம்பித்துரை

(ஓய்வுபெற்ற மேற்பார்வை உத்தியோகத்தர், துறைமுக அதிகாரசபை, கொழும்பு)



உடுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் கொம்பனித் தெரு, வக்சோல் வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தம்பித்துரை அவர்கள் 22.06.2004 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அமிர்தம் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரரும் காலஞ்சென்ற இரத்தினசிங்கம் - அன்னலட்சுமி தம்பதிகளின் மருமகனும் விக்கினேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீபாஸ்கரன் (நோர்வே), மஞ்சுளா (கொழும்பு), மைதிலி (கனடா), மலர்விழி (நோர்வே), பகீரதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினரூபி, திருமாறன், வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமனாரும் நரேந், யோகான், சஞ்சயன், பவித்திரா, நிதர்சன், ரஜினி, வினோஜன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் சீவரட்ணம், செல்வரத்தினம், இராசலட்சுமி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சகுந்தலாதேவி, காலஞ்சென்றவர்களான லோகேஸ்வரன், குலேந்திரராசா மற்றும் சாந்தினி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் கோண்டாவில் கிழக்கு, நாகநாதன் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காகக் கோண்டாவில் கிழக்கு கட்டை ஆலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகநாதன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.* (33534)(24-12-17-37)

தகவல்:
திருமதி விக்கினேஸ்வரி (மனைவி).
பிள்ளைகள்.

## இராசையா ஸ்ரீராமச்சந்திரன் (சந்திரன்)

(முன்னாள் தாதிய உத்தியோகத்தர், சாவகச்சேரி வைத்தியசாலை)



நுணாவில் மேற்கு வீரபத்திரர் வீதியைப் பிறப்பிடமாகவும் தற்போது டென்மார்க்கை வதிவிடமாகவும் கொண்ட இராசையா ஸ்ரீராமச்சந்திரன் (சந்திரன்) 25.06.2004 வெள்ளிக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பாப்பிள்ளை இராசையா (ஓய்வுபெற்ற பிஸ்கால், சாவகச்சேரி நீதிமன்றம்) மற்றும் இராசையா - மனோன்மணி தம்பதியினரின் அன்பு மகனும் சுதாமணியின் அன்புக் கணவரும் ஸ்ரீஸ்கந்தராசா (டென்மார்க்), ஸ்ரீரங்கநாயகி (இலங்கை) ஆகியோரின் சகோதரனும் சுப்பிரமணியம் - தங்கம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற அகிலன் மற்றும் தெய்வீகன், மஞ்சரி, சஞ்சீவன் (டென்மார்க்) ஆகியோரின் அருமைத் தந்தையும் விஜிதா, சுஜீவன் ஆகியோரின் மாமனாரும் அருந்தா, அகில் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் வீதி,*
*நுணாவில் மேற்கு,*
*நுணாவில்.* (33538)(24-12-17-37)

T.P.: 0776502514,
077 6292684

தகவல்:
ஸ்ரீரங்கநாயகி (சகோதரி).

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



எமது குடும்பத் தலைவர்
**அமரர் மருதர் பாலசிங்கம்**
**தோற்றம்: 2.11.1919**
**மறைவு: 28.05.2004**

அன்போடும் பண்போடும் வாழ்ந்த உங்களின ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற வீட்டுக்கிருந்திய, ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகளில் கலந்து கொள்வதோடு மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு எமது உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக் கின்றோம்.

வேலணை மேற்கு.
6 ஆம் வட்டாரம்.
வேலணை. (33550)(40)

துயரில் வாடும்:
அன்பு மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம:

## 21 ஆம் நாள் மோட்சதீப கிரியா நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

தோற்றம்
01
02
1919



மறைவு
07
06
2004

### அமரர் துரையப்பாப்பத்தர் பஞ்சரெத்தினகோபால்

(அம்பிஹா ஜுவெல்ஸ். கன்னாதிட்டி)

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய்
புனிதமாய் வாழ்ந்து காளி அம்பாள் கழலடி சேர்ந்த
ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மோட்ச தீப நிகழ்வும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையும் இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந நிகழ்வில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் மற்றும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித் தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*12/42,கன்னாதிட்டி ஒழுங்கை*
*யாழ்ப்பாணம்.* (33547)(43-16-17)

**- குடும்பத்தினர்.**

## முதலாவது வருட நினைவஞ்சலி

பிறப்பு
18
11
1919



இறப்பு
09
07
2003

### அமரர் கந்தையா செல்லத்துரை

ஓராண்டும் ஆயிற்றோ உங்களை நாம் பிரிந்து
தீராத வேதனையால் தினந்தினம் வாடுகின்றோம்
ஆறாத கண்ணீர் அருவியெனப் பாய்கின்றதே நாம்
மாறாத துன்பத்தால் மனங்கலங்கித் தவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

33/11 இராமநாதன் வீதி.
கலட்டி. யாழ்ப்பாணம்.
T.P. 0777 494901 (33548)(4016-17)

-குடும்பத்தினர்.

## முதலாம் வருட இதய அஞ்சலி

அன்னை
மடியில்
28
02
1933



ஆண்டவன்
அடியில்
19
06
2003

அமரர்
### கந்தையா சிவராசா (சின்னக்கிளி)

*(ஓய்வு பெற்ற பரிசாரகர், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை)*

நல்லிதயமொன்று நடுவீதியில் சாய்ந்து
ஆண்டு ஒன்று ஆனதையா! நம்மவர்கள் விழிநீர் சொரிந்து
அஞ்சலிக்கின்றோம் நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு
எங்கள் உள்ளங்களிலிருந்து மறையவே மறையாது
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி அன்னரத்தினம்,
பாசமிகுந்த பிள்ளைகள்,
மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

*கட்டுவன் மேற்கு,*
*தெல்லிப்பழை.*
(சி35852)(37-40-16-17)


## கூ.சங்க பணியாளர்கள் சிரமதானம்

யாழ்ப்பாணம்,ஜுன்27

கரும்புலிகள் நினைவு தினத்தை முன்னிட்டு வலி.கிழக்கு வடபகுதி பலநோக்குக கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் நேற்று அச்சுவேலி அரசினர் மருத்துவமனையின் உள் பகுதியில் சிரமதானப் பணியை மேற்கொண்டனர்.

இந்த சிரமதானத்தில் அப்பகுதி கிராம அலுவலர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)

## பஸ் டிப்போ இடம்மாற்றம்

வடமராட்சி,ஜுன்27

பருத்தித்துறை நகர அபிவிருத்தி கருதி பருத்தித்துறை மருதடியில் உள்ள வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ விரைவில் புலோலி ஆனைவிழுந்தான் பகுதிக்கு மாற்றப்படவுள்ளது.

ஆனைவிழுந்தான் பகுதிக்கு டிப்போவை மாற்றுவதற்கு வசதியாக பருத்தித்துறை உதவிப் பிரதேச செயலாளர் எஸ்.வசந்தகுமார் இதற்கென குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இக்குழுவின் ஆலோசகராக எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளார் (ஐ-173)

## சமயச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம்,ஜுன்27

துன்னாலை ஸ்ரீவல்லிபுர் ஆழ்வார் ஆலயத்தில் இன்று முற்பகல் 11 மணிக்கு 'கீதாசாரம்'என்ற பொருளில் கலாபூஷணம் டாக்டர் இரா.சிவஅன்பு சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எ)

## பொதுக்கூட்டம் பிற்போடல்

இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருந்த யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தால் எதிர்வரும் 11ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என அதிபர் வி.மாணிக்கம் அறிவித்துள்ளார். (10-ரி)

## யாழ்ப்பாணக் கல்லூரி பரிசளிப்பு விழா

நல்லூர்,ஜுன்27

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு கல்லூரி அதிபர் நோயல் ஏ.விமலேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவுக்கு தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண. கலாநிதி எஸ்.ஜெபநேசன் திருமதி விமலா ஜெபநேசன் ஆகியோர் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வர். (எ-173)

## மத்திய கல்லூரியில் சேமிப்புக் கருமபீடம்

யாழ்ப்பாணம்,ஜுன்.27

மக்கள் வங்கியின் யாழ்.பல்கலைக்கழகக் கிளையினரால் யாழ். மத்திய கல்லூரியில் 'மாணவர் மலர்ச்சி' என்ற பெயரிலான புதிய சேமிப்புக் கருமபீடம் ஒன்று நாளை திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவிருக்கிறது.

நாளை முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி நிகழ்வில் பிரதமவிருந்தினராக மக்கள் வங்கியின் வட வலய விசேட நிறைவேற்று அதிகாரி எஸ்.இளம்பிறைநாதன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் கே.இராசதுரை கலந்து கொள்வார். (4)

## சிங்கள மாணவருக்கு தமிழ்த்தினப் போட்டி

கொழும்பு,ஜுன்27

சிங்கள மாணவருக்கான தமிழ்த்தினப் போட்டிகளை நடத்துவதற்குத் தென்மாகாணக் கல்வித் திணைக்களத தமிழ்மொழிப் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வாசிப்பு, சொல்வதெழுதல் ஆகிய போட்டிகள் 6,7ஆம் தரங்களுக்கு ஒரு பிரிவாகவும் 8,9ஆம் தரங்களுக்கு ஒரு பிரிவாகவும் சிங்கள மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளை நடத்துவதற்கு மூன்று மாவட்டங்களிலுமுள்ள சிங்களப் பாடசாலைகளை சேர்ந்த 11 வலயங்களுக்கும் தமிழ்மொழிமூல இணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வலயக் கல்விப் பணிப்பாளர்களின் தலைமையிலேயே இதற்கான ஏற்பாடுகள் நடைபெறும்(ஒரி)

# எழுதுநர் சேவையின் அதிசிறப்பு அலுவலர் 5 பேருக்கு இடமாற்றம்

தென்மராட்சி,ஜுன்27

வடக்கு - கிழக்கு மாகாணத் திணைக்களங்களில் கடமையாற்றும் பொது எழுதுநர் சேவையைச் சேர்ந்த அதிசிறப்பு உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றப் பட்டியல் மாகாணப் பொது நிர்வாக உள்ளூராட்சிக் கூட்டுறவு அமைச்சின் செயலாளரினால் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றங்கள் கடந்த 15ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வருகின்றபோதிலும், அடுத்தமாதம் முதலாம் திகதிக்கு முன்னர் புதிய இடங்களில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபையில் கடமையாற்றும் எஸ். பசுபதி பருத்தித்துறை பிரதேச சபைக்கும் கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையாற்றும் வீ. குகேந்திரன், கரைச்சிப் பிரதேச சபைக்கும் -

பருத்தித்துறை நகரசபையில் கடமையாற்றும் ஏ.மேரி யோசப் வடமராட்சி தெற்கு, மேற்குப் பிரதேச சபைக்கும் வலிகாமம் வடக்குப் பிரதேசசபையில் கடமையாற்றும் பீ. வைரமுத்து நல்லூர்ப் பிரதேச சபைக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை - சாவகச்சேரி நகர சபை செயலாளர் மு.செ.சரவணபவ செப்ரெம்பர் முதலாம் திகதி தொடக்கம் வவுனியா நகர சபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (எ-31-117)


ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

## மீதிகளை உறுதிப்படுத்தல் 30.04.2003

**கிளி/மாவட்டத்தில் இயங்கிய கிளி/ஊர்சாவற்றுறை ப.நோ.கூ.சங்கமும், ஊர்காவற்றுறை ப.நோ.கூ சங்கமும் இணை[illegible]ட்டு முன்பு உள்ளதுபோல் ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் எ[illegible] [illegible]ல் இயங்கி வருகின்றது. இதன் நிதியாண்டு 30.04.2003 ஆகும்.**

**மேற்படி சங்கத்தின் கணக்காய்வு நடைபெற்று வருவதினால் 30.04.2003 சங்கங்களுடன் தொடர்புடையவர்கள் (கிராமிய வங்கி உட்பட) வருமதி சென்மத இருப்பின் மீதிகள் இருப்பின் அவற்றினை 05.07.2004 ஆம திகதிக்கு முன்பு உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

பொது முகாமையாளர்,
ஊர்.ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை. (C/25842)(40-16-17)


# மரண அறிவித்தல்கள்


### திருமத மீனாட்சி கந்தையா

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இணுவில் மஞ்சத்தடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி கந்தையா நேற்று (26.06.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் விஜயநாதனின் அன்புத் தாயாரும் நிர்மலாதேவியின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சத்தடி தெற்கு,
இணுவில். (33549)(35-16-17-40)

தகவல்:
க.விஜயநாதன் (மகன்)

### திருமதி அந்தோனி அனந்தாசி (திரேசி)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் சங்கமித்த மாவத்தை, கொழும்பு-13ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி அந்தோனி அனந்தாசி(திரேசி) 22.06.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அலேஸ்-மரியை தம்பதியரின் அன்புப் புதல்வியும காலஞ்சென்ற அந்தோனியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை மற்றும் பூரணம், காலஞ்சென்ற தாவீது மற்றும் சின்னப்பிள்ளை, சந்தியோகு, சூசானம் ஆகியோரின் சகோதரியும் சில்வேஸ்ராவின் (மலர்) அன்புத் தாயாரும் யோசேப்புவின் (ஊசோன்) அன்பு மாமியாரும பாக்கியலீலா (பிரான்ஸ்), சாஸ்குயின்ரன் (இத்தாலி), சுசிலாமேரி (இத்தாலி), ஜெம்மா (இத்தாலி), கிறேஸ்மேரி (இத்தாலி), பற்றிமா (இத்தாலி), போல் (இத்தாலி), செல்வராசா (பிரான்ஸ்), ராஜேஸ்வரி(இத்தாலி), காலஞ்சென்ற திருஞானபொக்ஸன் (இத்தாலி), செல்வநாயகம் (இத்தாலி), பேர்னூண்டோ (இத்தாலி), ரவி (இத்தாலி), சுசிகலா(கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ரியூட் நிஷாந்தன், வினிற்ரா(பிரான்ஸ்), கனிஸ்ரன்(பிரான்ஸ்), றூபினி (பிரான்ஸ்), றூபனா (பிரான்ஸ்), றொபினா(இத்தாலி), றமினா(இத்தாலி), பிரதா (இத்தாலி), சறோனி (இத்தாலி), வதனா(இத்தாலி), எமல்சன் (ஜேர்மனி), எல்சி (பிரான்ஸ்), நிக்ஸன்(இத்தாலி), நெல்சன்(இத்தாலி, ஜென்சி (இத்தாலி), சேந்தன் (இத்தாலி), யக்ளின் (இத்தாலி), சுயந்தன் (இத்தாலி), ஜெஸ்மின்ஜெகன் (இத்தாலி), குமார் (இத்தாலி) ஆகியோரின் பூட்டியும் றோசானியின் கொப்பாட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று(27.06.2004)ஞாயிற்றுக்கிழமை காலை 10மணியளவில் நாரந்தனை தெற்கிலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித இராயப்பர் சின்னப்பர் சேமக்காலையில் நல் லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

நாரந்தனை தெற்கு,
ஊர்காவற்றுறை. (33535)(35-16-17-40)

தகவல்:
குடும்பத்தினர்

### யோசேவ் சிங்கராஜா



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேவ் சிங்கராஜா நேற்று (26.06.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேவ் - அன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற அன்னபாக்கியத்தின் அன்புக் கணவரும் அமிர்தராணி, மல்லிகாராணி (சுவிஸ்), யோகராஜா(லண்டன்) அகியோரின் பாசமிகு தந்தையும் அல்பேட், சில்வெஸ்ரர், காலஞ்சென்ற மரியதாஸ் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பரஞ்சோதி, பாலச்சந்திரன், தர்மசோதி ஆகியோரின் மாமனாரும் கிஷோதினி, விஜிதரன், சயந்தன், நிசாந்தன் ரிசானி ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

*கல்லூரி வீதி,*
*இளவாலை.* (33551)(38-16-17-40)

தகவல்:
க.பரஞ்சோதி (மருமகன்)



## பண்டத்தரிப்பு, பிரான்பற்று, பெரியவளவு ஆலம்பதி

# திருவருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய

## நூதன பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ திருக்குடத் திருமஞ்சன

# மகா கும்பாபிஷேகம் — 27.06.2004







உண்மை அறிவு இன்பமே உருவாகி பாலில் நெய்யாகக் கலந்துறையும் இறைவன் உயிர்கள் தன்னை மனதால் சிந்தித்து, வாக்கால் வாழ்த்தி, காயத்தால் வணங்கி வழிபடுதற்பொருட்டு எண்ணற்ற திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள் நிலையங்களே ஆலயங்கள் எனப்படும். ஸ்ரீ விராட புருஷனது இடைநாடி ஸ்தானமென்று சாந்தோக்கிய உபநிடதத்திலும், சிவபூமி, ஸ்வர்ணபூமி, அனுக்கிரகஸ்தலம் எனச் சமய குரவர்களாலும் பாடித் துதித்த அருட்பெரும் தலங்களைத் தன்னகத்தே கொண்டு மிளிரும் தர்ம துவீபமாம் இலங்கையின் வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாணத்தின் அணித்தாய் சிறப்புற்று விளங்கும் பிரான்பற்று என்றழைக்கப்படும் திவ்விய பதியிலே எழுந்தருளியுள்ள முத்துமாரி அம்மனுக்கும், விநாயகப் பெருமானுக்கும், ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் சுந்தர விமான ஸ்தூபிகளுக்கும் நிகழும் தாரண வருஷம் ஆனி மாதம் 13ஆம் நாள் இன்று (27.06.2004) ஞாயிற்றுக்கிழமை சித்திரை நட்சத்திரமும் தசமி திதியும் சித்தயோகமும் சிங்க லக்கினமும் கூடிய பகல் 10.01 மணிமுதல் 11.31 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் மெய்யடியார்கள் ஆசார சீலர்களாய் மகாகும்பாபிஷேகப் பெருவிழாவிலும் அதற்கு முன், பின் நடைபெறும் கிரியா காலங்களிலும் பக்தி நெறியுடன் பங்குகொண்டு தரிசித்து முத்து மாரியம்மன் திருவருளால் எல்லாச் செல்வங்களும் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டுகின்றோம்.



## அருளாசி

அன்புள்ளவர்களுக்கு!

பண்டத்தரிப்பு, பிரான்பற்று, பெரியவளவு பிரதேசத்தில் எழுந்தருளியிருந்து அருளாட்சிபுரியும் முத்துமாரி அம்பாளுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றோம். ஓர் ஆலயத்தில் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறுவது மஹாகும்பாபிஷேகம். இதைச் செய்விப்பதும், செய்வதும் நற்காரியமாகும். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு இறைவனுடைய அருள் நமக்கு வேண்டும். அவ்வருளைப் பெறுவதற்கே நம் மதத்தில் ஆலயங்களை அமைத்துள்ளனர். இவ்வாலயத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் மனித நேயத்துடன் வாழ வழியமைக்கின்றன. இதனை உணர்த்துமுகமாக இடம்பெறும் கும்பாபிஷேகத்தில் அனைத்து அடியார்களும் வழிபாடு செய்து அனைத்துக்கும் தாயாக விளங்கும் முத்துமாரியன்னையை வணங்கி அருள் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக. இக்கும்பாபிஷேகத்தைச் செய்யும் சிவாச்சாரியார்களுக்கும் ஆலய அறங்காவலர்களுக்கும் பண்டத்தரிப்பு வாழ் சைவத்தமிழ் மக்களுக்கும் எமது ஆசிகள் உரித்தாகுக.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஆதீன குருமுதல்வர்,
இரண்டாவது குருமஹாசந்நிதானம்,
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்**
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.

## அம்மன் அருள்சுரக்க சைவமும் தமிழும் வாழ்க

ஈழத்தின் மணிமுடியாய் வடபால் இயங்கும் யாழ்ப்பாணப் பேரூராம் பிரான்பற்று பெரியவளவு ஆலம்பதி ஸ்ரீமுத்துமாரி அம்மன் துணை கொண்டுவாழும் அனைவரையும் சிறந்த பண்பாளராக்கும் சாதனங்களுள் ஆலயம் ஒன்றுதான் தலைசிறந்து விளங்குகின்றது எனக்கூறின் சாலப்பொருந்தும். அதனாலன்றோ 'கோயிலில்லாவூரில் குடியிருக்க வேண்டாம்' என நம்முன்னோர் அருளிச் செய்தது என்றுமே பொய்த்ததில்லை. பிரான்பற்றுத் தென்திசையில் பெரியவளவு ஆலம்பதி என்னும் திருத்தலத்தில் கோயில் கொண்டருளி மிகப்புராதன காலந்தொடக்கம் அடியார்களுக்கு அருள் ஒளிபரப்பி அருளும் ஸ்ரீமுத்துமாரியம்பாளுக்கு எம் ஊர்மக்களால் புதுப்பொலிவுடன் சித்திரக்கட்டடப் புதுக்கோயில் அமைத்து 27.06.2004இல் பிரதிஷ்ட மகாகும்பாபிஷேகம் நடத்த அடியார்கள் முடிவுசெய்து இருப்பதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

இச்சிறப்பு மிகுந்த இத்தலத்தில் அடியார்களாகிய நாம் வணங்கித்துதிப்பதோடு மட்டும் நில்லாது சைவத்தை வளர்த்து சமயத்தை நிலைப்படுத்த வேண்டும். புறச்சடங்குகளால் மாத்திரம் எதுவும் நிலைகொள்ளாது உள்ளத்தூய்மையினாலும் ஆத்மசுத்தத்துடனும் அடியார்களாகிய நாம் வழிபாடு செய்து வந்தால் முத்துமாரி அம்மனின் திருவருள் நிலைக்கப்பெற்று என்றுமே எம்மைவிட்டகலா சித்தமாகின்றது. எனவே, தேவியின் சகல கடாட்சப் பெறுபேறுகளும் சர்வ சித்திகளும் எல்லோருக்கும் கிடைக்கப்பெறுவதாகுக என வேண்டிப் பெருமாட்டியின் பாதாரவிந்தங்களைப் பணிந்து பாடி வாழ்த்தி வணங்குகின்றேன்.

தர்மகர்த்தா செ.இரத்தினம்
பெரியவளவு ஆலம்பதி முத்துமாரி ஆலயம்,
பிரான்பற்று.

## ஆலயப் பிரதம குருவின் ஆசியுரை

அழகும் பொலிவும் மிளிரும் பிரான்பற்று ஆலம்பதி அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாளும் ஏனைய பரிவார மூர்த்திகளின் நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெறுவதையிட்டு நாம் மகிழ்வுடைகின்றோம். கும்பாபிஷேக கைங்கரியத்தின் மூலம் அமைதியும் சாந்தியும் ஏற்பட்டு எல்லோரும் சுபீட்சமாக வாழ முத்துமாரி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

லோகா சமஸ்த்தா சுகினோபவந்து
சாந்தி சாந்தி சாந்தி

கும்பாபிஷேக குருமணி
**சிவஸ்ரீ குமார பிரபாகர குருக்கள்**
முத்துமாரி அம்பாள் ஆலய ஸ்தானிகக் குரு.

மலர் அமைப்பு:
வலி.தென்மேற்கு
செய்தியாளர்.

## இனிதே இலங்கும் இமையோன் துணையாள் பாதம் பணிவோம்

அம்மனைத் தொழுவோருக்கு அனதுயரழிந்து பேரின்பம் பொங்கிடுமே என்றவாறு சக்தி சிவனென இருதன்மையாய் இருத்தலாலன்றோ உலகம் முழுவதும் ஆண், பெண்ணென இருவகையாயும் நெருப்பும் சூடும்போலப் பிரிவிலாக்குணங் கொண்டவளை,

"பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரத்தவளே கறை கண்டனுக்கு மூத்தவளேயென்றும்
மூவாமுகுந்தனுக்குகிளையவளே" என்று அடியார்கள் துதிபாடும் அன்னையாம் பிரான்பற்று பெரியவளவு ஆலம்பதி ஸ்ரீமுத்துமாரி கருணாமூர்த்தியாகக் காட்சிதருபவள். எங்கும் நிறைந்து இன்ப அருள் சுரக்கும் எமதன்னைக்கு இன்றைய தினம் மகாகும்பாபிஷேகப் பெருவிழா இனிது நடைபெறுகின்றது.

பண்டுதொட்டிருந்த பழைய ஆலயம் நீக்கப்பெற்று அதே நிலையத்தில் புதிதாகவும் புதுமையாகவும் சிற்பக்கலை நவக்கம்பொலியச் சீராகக் கருப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம், ஸ்தம்ப மண்டபம், தரிசன மண்டபம் அமையப் பேரழகுடன் உருவாக்கப்பட்ட இவ்வம்பாள் ஆலயத்தில் மூலஸ்தான மூர்த்திக்குப் பரிவார மூர்த்திகளாகி கணேசர், சுப்பிரமணியர், வைரவர், தண்டேஸ்வரி என்ற தெய்வங்களுக்கும் பிரதிஸ்டை செய்து குடமுழுக்காட்ட அம்மன் துணைகொண்டு முடிவுசெய்திருப்பது அடியார்களுக்கொரு வரப்பிரசாதமேயாகும். அதனாலன்றோ "ஆசிகொண்டாடிடும் அம்பிகையே பேர்கூத்தனின் மங்கையே ஆளும் உன்பொற்கரம் நீட்டியே அருள்காட்டிடுவாய் அன்னையே செங்கை கூப்பியே துதித்திடும் அன்பரைக் காக்கவே இங்கு களனியாலம்பதி வளர்ந்திட்ட முத்துமாரியே எங்கள் குல தெய்வமே அடியார்க்கருளுகவே" என வரலாறு பாடி மகிழும் பக்தர்களுக்கும் அடியார்களுக்கும் திருப்பணியிலீடுபட்ட திருத்தொண்டர்களுக்கும் சகல சிறப்பும் பெற்று வாழ உலக மாதாவாகிய ஸ்ரீமுத்துமாரியம்மனின் பாதம் பணிந்து வழுதி வாழ்த்துவோமாக.

**கலைமணி க.தெய்வேந்திரம்**
அகில இலங்கைச் சமாதான நீதிவான்,
முன்னாள் நேரக்கணக்காளர், இலங்கைப் போக்குவரத்துச் சபை.

(35843) (24-16-18)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## ஆதிஷா ஆட் அண்ட் டிசைன்ஸ்

### குறுகிய கால பயிற்சிநெறி

**Saree works** (சாறிகள், ஆடைகளில் அலங்காரம்)
**Pottery works** (மட்பாண்ட பொருள்களில் வர்ண அலங்காரங்கள் செய்தல்)

அழகிய மட்பாண்ட பொருள்கள் வழங்கப்படும்

**பயிற்சிக் காலம் 10 நாள்கள்**

தொடர்பு: 90, சட்டநாதர் வீதி, நல்லூர்.
T.P: 222 6043

## விழியின் மீது விழிப்பாயிருங்கள்

★ சிறிய எழுத்துக்கள் எழுதப் படிக்கச் சிரமப்படுகின்றீர்களா?
★ ஒருவிதமான தலைவலியினால் அவதிப்படுகின்றீர்களா?
அப்படியாயின் நிச்சயம் கண்குறைபாடுதான் காரணம்
(பாடசாலை மாணவருக்கு விசேட சலுகை உண்டு)
எம்மிடம் வாருங்கள்! இலவச கண் பரிசோதனைகளும், ஆலோசனைகளும் வழங்கப்படும். அத்துடன்
★ முகப் பொலிவிற்கேற்ப சங்குப் பற்களைக் கட்டிக்கொள்ளவும்
★ மிதப்புப் பற்களுக்குக் கிளிப் போட்டுக் கொள்ளவும்.

இன்றே விஜயம் செய்யுங்கள்

**எரிக் கணேஷ்**

மூக்குக் கண்ணாடியகமும் பல்கட்டுமிடமும்
546, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ☎ 222 - 2486

80,K.K.S. வீதி, சுன்னாகம். ← கிளைகள் → 91,K.K.S. வீதி, கொக்குவில்.
(சி-35853)(29-12-17)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்வி உருவாக்கத்திற்கு துணைநின்ற எமது அன்புக்குரிய நல் ஆசான்
**அமரர் K.றஞ்சித்** B.A. (HONS) Dip. in Edu.
அவர்களுக்கு எமது இதய அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.
இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்வி கற்ற மாணவர்கள்,
யாழ்.புனித மரியன்னை பேராலயம்.
(33558)(38-29-12-17)

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 02 - 08 - 1953



விண்ணில் 20 - 06 - 2004

**அமரா கந்தையா ரஞ்சித்**
B.A.(Hons) (V.lankara) Dip.in Edu.
[ஆசிரியர் புனித பத்திரிசியார் கல்லூரி]

கல்விதனில் கண்ணியனாய்
பழகுவதில் நற்பண்பினாய்
எம்முடனே சேர்ந்த - எம்மை
ஊக்குவித்த உத்தமனே - உமக்கு
கடுகதியில் வந்த காலன்
எம்மை கலக்கமுறச் செய்தானே!
உறங்குகின்றீர் நீர் இன்று
கலங்குகின்றோம் நாம் இன்று

துயரத்தில் வாடுகின்ற பெற்றவர்களுக்கும் உடன்பிறந்த சகோதரர்களுக்கும், உறவினர்க்கும் வேர் இழந்த பத்திரிசிய குடும்பத்திற்கு பகிர்கின்றோம் ஆறுதலை!

A/L 2004 பிரிவு மாணவர்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
(33556)(40-29-12-17)

## சான்றிதழ் வழங்கல்

திருகோணமலை,ஜூன்27

திருகோணமலை விபுலானந்த கல்லூரியில் ஆறுமாத காலம் கணனிப் பயிற்சிப் பெற்றோருக்கான சான்றிதழ்கள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் போராளி சுகிர்தா தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்வநாயகம் பொன்னம்மா

(வருணன், அச்சுவேலி)

மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வருணன், அச்சுவேலியை வசிப்பிடமாகவும், புலோலியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரும் காலஞ்சென்ற சரவணமுத்து-வள்ளிப்பிள்ளை ஆகியோரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற நாகமணி, கதிராசிப்பிள்ளை ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்ற நாகமணி செல்வநாயகத்தின் அன்பு மனைவியுமான பொன்னம்மா நேற்று இறை பதமடைந்தார்.

அன்னார் சறோஜினிதேவி (ஓமான்), ஸ்ரீபவான்(கனடா), சாரதாதேவி (கனடா), ஜெயதேவி, சாந்தாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகராஜா (ஓமான்), வனிதா (கனடா), வரதராஜா (கனடா), கமலநாதன் (சுவிஸ், முன்னாள் தலைவர், அச்சுவேலி ப.நோ.கூ.சங்கம்), திருச்செல்வம் (பிரதம நூலகர் பருத்தித்துறை பிரதேசசபை, பத்திரிகையாளர்)ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற லண்டன் சற்குணராஜா, சதாயினிமலர் (கனடா), துஷ்யந்தி (கனடா), பிரசன்னா (கனடா), பவானந்தன் (கனடா), சுதர்சினி(ஜேர்மனி), வினோதினி (கனடா), சுகன்யா (கனடா), கிஷோகுமார் (லண்டன்), தர்சன் (கனடா), சுமங்களா, அருனா (பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை), சிவதேவன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), அபிரா (பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை), கிருஷா (பருத்தித்துறை மெ.பெ.உ.பாடசாலை), துவாரகன் (தென்புலோலி புற்றளை மகாவித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும்), கர்சினி (கனடா), கிஸ்சன் கனடா) கோபிகா (ஜேர்மனி), விஸ்ணுவர்தன்(ஜேர்மனி), விதுசியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

*நிருபர் வளவு,*
*புலோலி தெற்கு,*
*புலோலி*
T.P.0212263603
0777143022

தகவல்:-
ஏ.என்.எஸ்.திருச்செல்வம் (மருமகன்).
(C/35863)(35)

## தொலைபேசி இயக்குநர் தேவை

நல்லூரில் இயங்கும்
தொலைத் தொடர்பு நிலையத்துக்கு
கணனி அறிவுள்ள
பெண்பிள்ளை தேவை.
அண்மையிலுள்ளவர் விரும்பத்தக்கது.

**தொடர்பு:**
**விளம்பர இல. 2315**
**மே/பா உதயன்**
**யாழ்ப்பாணம்.**
(33532)(35)

## கண்ணீர் அஞ்சலி

எமது நண்பன் விஜயனின் அன்புச் சகோதரி
**செல்வி குமாரசாமி கலைச்செல்வி (கீதா)**
அவர்களின் அகால மரணத்தினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

-நல்லூர் நண்பர்கள்.
(33559)(38)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் சிரேஷ்ட பொருளியல் ஆசிரியர்
**கந்தையா றஞ்சித்** B.A. (Hons) Dip.in.Ed.
அவர்களின் திடீர் மறைவையிட்டு நாம் மனம் வருந்துகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
**Canadian Institute Of Information Technology**
**(C.I.I.T) St.Patricks College Jaffna.**
(33554)(38-29-17-12)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி முத்துக்குமாரு ஆச்சிக்குட்டி

கொக்கன், மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு , புகையிரத வீதியை (நந்தாவில் அம்மன் கோயிலுக்கு அருகில்) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துக்குமாரு ஆச்சிக்குட்டி 24.06.2004 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் முத்துக்குமாருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகளும் சின்னத்தங்கச்சி, காலஞ்சென்ற தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜெகநாதன் (சவூதி), ஜெகராணி (கனடா), இன்பராணி (ஜேர்மனி), ஜெயபவானி (ஜேர்மனி), புஸ்பராணி (ஜேர்மனி), ஜெயந்தி (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேச அலுவலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தாயாரும் மஞ்சுளா ஆய்வுகூட உத்தியோகத்தர் -யாழ்.போதனாவைத்தியசாலை) இந்திரநாதன் (கனடா), கிருஸ்ணமூர்த்தி (ஜேர்மனி), தர்மசேனன் (ஜேர்மனி), ரசிக்குமார் (ஜேர்மனி), லம்போதரன்(Cylinco Insurance Co.Ltd. - General) ஆகியோரின் மாமியாரும் பிரணவன் (கனடா), பிரஷாந்தி (கனடா), கிருஷாந்தி (ஜேர்மனி), நிமலினி (ஜேர்மனி), குகன் (ஜேர்மனி), தர்மிஷா (ஜேர்மனி), தர்மிஷன் (ஜேர்மனி), தர்மிரா (ஜேர்மனி), ரதுஷன் (ஜேர்மனி), மதுஷன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.06.2004) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு (புதிய நேரம்) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏறறுக்கொள்ளவும்.

*புகையிரத வீதி,*
*கொக்குவில் கிழக்கு.*
(33553)(29-12-17)

தகவல்:
முத்துக்குமாரு (கணவர்).

### குமாரவேலு தர்மலிங்கம்

**(முன்னாள் பிரபல வர்த்தகர், K.A வேலுப்பிள்ளை அன் சன்ஸ், பதுளை, ஸ்தாபகரும், பிரதம பங்காளரும், விநாயகர் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்)**



காரைநகர் வாரிவளவைப் பிறபபிடமாகவும், யாழ்ப்பாணம் சிவலிங்கப் புளியடியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் பிரபல வர்த்தகர், குமாரவேலு தர்மலிங்கம் 25.06.2004 வெள்ளிக்கிழமை இரவு இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரவேலு - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற K.A.வேலுப்பிள்ளை - மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ராஜரட்ணம் மற்றும் விஜயரட்ணம் (ரட்ணம் பார்மஸி, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும தையல்முத்து கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கலாசக்தியின் அன்பு மைத்துனரும் ஜெயலலிதா, விஜயலலிதா, சிவரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவகுமாரன் (இலங்கை வங்கி, உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), தயானந்தா உதவி அரச அதிபரும் பிரதேச செயலரும், முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு) ஆகியோரின அன்பு மாமனாரும் சிவதர்ஷினி, சிவரஞ்சினி, கோபிகாந்தன், சாம்பவி சுஜீவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.062004) ஞாயிற்றுக் கிழமை பி.ப. 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 3 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.115, ஒட்டுமடம் வீதி,*
*சிவலிங்கப் புளியடி,*
*யாழ்ப்பாணம்.*
(33524)(38-29-12-17)

தகவல்:
-குடும்பத்தினர்.

## நீங்கா நினைவுடன் கண்ணீரஞ்சலி

### அமரர் குமாரவேலு தர்மலிங்கம் (பிரபல வர்த்தகர்)

தோற்றம் 30 - 07 - 1934



மறைவு 25 - 06 - 2004

முன்னாள் K.A. வேலுப்பிள்ளை ஸ்ரோர்ஸ் பதுளை.
விநாயகர் ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம். (ஸ்தாபகரும், பிரதம பங்காளரும்)
கு.தர்மலிங்கம் காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

அவனியில் வாழ்ந்தது போதுமன்றோ ஆண்டவன் நினை அழைத்தனன்
மண்ணில் பிறந்து மாண்புடன் வாழ்ந்து - எம்மனங்களில் நிறைந்திருந்ததை மறக்க முடியவில்லை -ஐயா!
வியாபாரத்துறையில் வித்தகனாய் விளங்கி, பலதையும் பக்குவமாய் பயின்று, பாங்குடன் வாழ்ந்த நின்வழியில்,
மையல்கொண்டே நின்பாதைதனில் பின் தொடர்ந்த எவரும் தாழ்ந்தில்லை ஐயா!
மலையகத்தில் மலைபோல் நிமிர்ந்து நின்ற நின்துடிப்பும், துரிதமும், வீரமும் எங்கே ஐயா!
யாழ்.வந்தும் யாரெது விளம்பினும் மெய்ப்பொருள் காண்பது அறிவு ஏன ஆன்மீகத்தை தழுவிநின்ற நினைவு மெய்சிலிர்த்துப் பார்க்கிறோம் ஐயா!
வியாபாரத்துறையில் வான் உயந்து விளங்கிய தங்களுக்கு நிகர் தாங்களே! தம் தனி வழி கண்டு தரணியில் தம்மை
மானசீக குருவாகக் கொண்டு நாம் தலைநிமிர்ந்ததை பறைசாற்றி புகழ்ந்து நிற்கிறோம் ஐயா!
தந்தைக்கு தந்தைபோல், தாமிருந்ததை நினைக்கின்றோம். மனம் தாழவில்லை ஐயா!
ஆளுக்கொரு தேதிவைத்து ஆண்டவன் அழைப்பான் அப்படியொரு தேதியில் தம்மையும் அழைத்தாரோ!

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீ விக்கினேஸ்வரா ஸ்ரோர்ஸ் சாவகச்சேரி. (சி-35850)(29-12-17)
சுப்ப சூஸ் உரிமையாளர்கள், யாழ்ப்பாணம்.
றூபா பன்முக வர்த்தகம் யாழ்ப்பாணம்.

# பிக்குகளிடம் மன்னிப்பு கோரினார் மங்கள சமரவீர

நாடாளுமன்றத்தில் கடந்த 8 ஆம் திகதி அரசுத் தரப்பு எம்.பிக்கள், பௌத்த பிக்குவான நாடாளுமன்ற உறுப்பினருடன் பண்பற்ற முறையில் நடந்துகொண்டமைக்காக அரசு சார்பில் பகிரங்க மன்னிப்பைக் கோரியுள்ளார் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.

ஜாதிக ஹெல உறுமயவின் தலைமையகத்துக்கு நேற்று நண்பகல் சென்ற அமைச்சர், தாக்குதலுக்கு இலக்கான வண. அக்மீமன தயாரத்ன தேரர், வண. கொலன்னாவை சுமங்கள தேரர் உட்பட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தார்.

நாடாளுமன்ற அமர்வின்போது அரசுத்தரப்பு எம்.பிக்களால் பண்பாடு அற்ற முறையில் நடத்தப்பட்டமைக்காக மங்கள, பகிரங்க மன்னிப்பை அவர்களிடம் கோரினார்.

இந்தச் சம்பவத்துக்காக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தங்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்றும் -

அதன்பின்னரே அரசின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குவோம் என்றும் - ஜாதிக ஹெல உறுமய கேட்டிருந்தது. (ஐ)

## யுனிசெவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து தமது இயக்கத்துக்கு புதிதாக 120 சிறுவர்களை விடுதலைப் புலிகள் இணைத்துள்ளனர் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனவும் -

இணைத்துக் கொள்ளப்பட்டவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் 'யுனிசெவ்' அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3-6-13)

## 'ஹலோ ரஸ்ட்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு உட்படுத்தினார்கள். விசாரணைகளை அடுத்து நேற்று மாலை அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என யாழ். பொலீஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ஐ-3-7)

## கண்ணிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னிச்சை, புல்லுமலை, கோப்பாவெளி, கருவண்கேணி, ஏறாவூர் ஆகிய இடங்களைச் சேர்ந்த பத்துப் பாடசாலைகளின் மாணவர்கள் கலந்துகொண்டனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமான பேரணி ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலயத்தில் முடிவடைந்தது. (ஐ-3-6)

# புதிய இராணுவத் தளபதியாக சாந்த கொட்டேகொட

கொழும்பு,ஜூன்27

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட இலங்கை இராணுவத்தின் புதிய தளபதியாக எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி தொடக்கம் பதவியேற்கவுள்ளார்.

முப்படைத் தளபதியான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த நியமனத்தை அங்கீகரித்திருக்கிறார்.

தற்போதைய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவின் சேவைக் காலம் முடிவடைவதை அடுத்து இந்தப் புதிய நியமனம் செய்யப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட இலங்கை இராணுவத்தின் 17 ஆவது தளபதியாவார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களின்போது அரச தரப்புப் பிரதிநிதியாக இவர் கலந்துகொண்டார். (ஐ)

## அரசாங்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரவு 8.30 மணியளவில் தீ கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

அரச அச்சகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த - மாகாணசபைத் தேர்தலுக்கான - வாக்குச் சீட்டுக்களுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்றும் - அங்கிருந்த இரசாயனப் பொருள்கள் மட்டுமே எரிந்து நாசமாகின என்றும் - அச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3-13)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் மாணவர் பிரச்சினைக்கு தீர்வு காண இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வவுனியா அரச அதிபர் கே.கணேஷ், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மாணவர்களின் விடுதி, விளையாட்டு மைதானம் போன்றவற்றை அமைக்க இணக்கம் காணப்பட்டது. (ஐ-3-164)

# போருக்கான சூழல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள்தான் புலிகள் என்பதை நிரூபிக்கவேண்டும்.

விடுதலைப் போராட்டம் சிங்களப் பேரினவாதிகளின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதாக அமைந்துவிடக் கூடாது. சர்வதேசத்திடம் உதவிகளைப் பெற்று தன்னைப் பலப்படுத்தி மீண்டும் ஒரு யுத்தத்தை ஆரம்பிக்க அரசு தயாராகி வருகிறது.

கடற்கலங்கள், கொள்வனவு, வெளிநாடுகளில் படைப்பயிற்சிகள் என்பன இதையே தெளிவுபடுத்துகின்றன.

வடக்கு - கிழக்கில் தொடரும் புத்திஜீவிகள், பத்திரிகையாளர்களின் படுகொலைகள், போராளிகள் மீதான தாக்குதல்கள் என்பவற்றை எமது தலைவர் பொறுமையுடன் சகித்துக் கொண்டிருக்கிறார். காரணம் சமாதான சூழலை முறித்துவிடக்கூடாது என்பதற்காகவே.

பேரினவாதிகளின் எதிர்த் திட்டங்களை நாம் சிதைக்கவேண்டும். எம்மைப் பிரிக்க இடம்கொடுக்கக் கூடாது.

எந்த சூழ்நிலையையும் எதிர்கொள்ள எமது தலைவர் தயாராக உள்ளார். நீங்கள் அச்சப்படத் தேவையில்லை. விரைவில் எமது தாயகத்தை விடுதலைபெறச் செய்வோம். தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவை முக்கிய இடம் வகிக்கின்றது. தேசியத் தலைவரின் எதிர்பார்ப்புக்களை ஒவ்வொரு கிராமத்திலும் அடித்தளமிட்டு செயற்படுத்துகிறீர்கள். எமது இலட்சியம், கொள்கைகள் சமூக கட்டுமானங்களைச் சுமந்து செயலாற்றும் உங்கள் பணி நிறைவானது.

சூழலை மாசுபடுத்தும் செயல்களை அரசும் அரச படைகளும் திட்டமிட்டு செய்துகொண்டிருக்கின்றன. பல லட்சக்கணக்கான மக்கள் வாழும் இம்மாவட்டத்தில் பல்வேறு கலாசாரச் சீரழிவுகள், வளர்ந்து வரும் சமுதாயத்தைச் சிதைக்கும் செயற்பாடுகள் நடைபெறுகின்றன. இவ்வை எமது தேசத்தை அழிவுப் பாதைக்குள் இட்டுச் செல்கின்றது.

இவைகளை நீக்குவதற்கு விடுதலைப் புலிகள் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சமாதான காலத்தை சாதகமாக்கி, தேசக் கட்டுமானக் காப்புக் காலமாக இதை எண்ணி நீங்கள் மக்கள் மத்தியில் சேவையாற்ற வேண்டும்.

பேச்சுமூலம் ஒரு நிலையான தீர்வுகிட்டுமானால் அதைத் தேசக் கட்டுமானத்தை மேற்கொள்ளும் காலமாக மாற்ற இப்போதே திட்டமிட வேண்டும். இந்த நோக்கிலேயே பல துறைகளிலும் அடிப்படைக் கட்டுமானங்களை உருவாக்க தேசியத் தலைவர் தேசிய எழுச்சிப் பேரவையை உருவாக்கியுள்ளார்.

- இவ்வாறு தெரிவித்தார் தங்கன்.

நேற்றுக் காலை 10 மணியளவில் ஆரம்பமான நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை தேசிய அமைப்பாளர் உமைநேசன் ஈகச் சுடரினை ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை சண்டிலிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கிராம அலுவலர் ச.சிவகுமாரன் நிகழ்த்தினார்.

யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவநேசன், யாழ்.பல்கலைக்கழக வணிகவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம், விரிவுரையாளர் கலாநிதி எஸ். சிதம்பரநாதன், தேசிய எழுச்சிப் பேரவையின் தேசிய அமைப்பாளர் உமைநேசன் ஆகியோரும் உரையாற்றினர். (ஐ-30-185)


மொபைல் கம்பியூட்டர் சேர்விஸ்
0773024455
புதிய ஹார்ட்வெயர் & சொவ்ற்வெயர் உள்ளீடு செய்தலும், திருத்துதலும் உங்கள் வீட்டிற்கு வந்து செய்துதரப்படும்.
உங்கள் வீட்டு கம்பியூட்டரிலேயே Internet Call இணைப்பு நிமிடத்திற்கு 4/=
தமிழ் Office CDs நியாய விலையில்.
கொம்பியூட்டர் கல்வி (வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்)
Harware Class
M-S - Office 2002 XP
Basic Computer Principles & Windows XP
GRAPHICS COURSES
DESKTOP PUBLISHING
PRINTED TUTES
அத்துடன் அனைத்து வகையான TYPE SETTING குறைந்த கட்டணத்தில்
அழையுங்கள் - 077302445 PnV Mobile Services
(சி-35862)(30-12-17)



324, Palaly Road, Jaffna.
யாழ் நகரில் Microsoft Certified System Engineer
Microsoft நிறுவனத்தினால் வழங்கப்படும் சர்வதேச தர சான்றிதழ்
நீங்களும் குறுகிய காலத்தில் சர்வதேச தர கணனி விற்பன்னராகலாம்.
மேலும் விபரங்களிற்கு, MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by United Nation Development Project/Jaffna Rehabilitation & Resettlement Project



பொதி விநியோக சேவையில் வெற்றிகரமான TNT இரண்டுவருடப் பூர்த்தி
20% விசேட கழிவு
சர்வதேச கூரியர் சேவை, உள்நாட்டு கூரியர் சேவை, சர்வதேச தபால் சேவை போன்ற சேவைகளுக்கு 20% சிறப்புத் தள்ளுபடியினை (20% Special Discount) வழங்குகின்றோம் என்பதை பெருமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு எமது புதிய முகவரி:
TNT கூரியர் சேவை,
[illegible], ஸ்ரான்லி வீதி,
(யாழ். பெரிய தபால்கந்தோருக்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.
0777-270452, 0777-915824
நாங்கள் உங்கள் அன்பளிப்புப் பொருள்களை மட்டுமல்ல, அவற்றோடு உங்கள் அன்பினையும் எடுத்துச்சென்று சேர்க்கின்றோம் என்பதை மறந்துவிடாதீர்கள்!
இவ் விசேட சலுகை 2004 ஜூலை 19 வரை மட்டுமே!
இத்துடன் ரூபா 200/= பெறுமதியான VOUCHER உம் வழங்கப்படும். இதனை இரண்டு மாத காலத்துக்குள் சமர்ப்பிப்பவர்களுக்கு பொதிகளை அனுப்பும்போது கழிவு வழங்கப்படும். (சி-35769)(30-12-17)



மெகா
குறிப்பிட்ட அனுமதிகளே உள்ளதால் கணனி உயர்கல்விக்கான புலமைப்பரிசில் பெற்றவர்கள் உடன் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
ASIAN COMPUTERS
யாழ்ப்பாணம்-சுன்னாகம்-நெல்லியடி



IBMS
புதிய பிரிவு
ஆரம்பம்: 27-06-2004 10.00.a.m.

| COURSE | DURATION | FEES |
| --- | --- | --- |
| Diploma in Ms Office | 3 Months | 1800.00 |
| Diploma in Internet Technology | 3 Months | 3000.00 |
| Diploma in Hardware Engineering | 4 Months | 3750.00 |
| Diploma in Desk Top Publishing | 3 Months | 2400.00 |

"அனைவருக்கும் கணனிக்கல்வி" என்பதற்கமைய மிகக் குறைந்த கட்டணம் அதிநவீன வசதிகளுடன் கூடிய கற்பித்தல் முறைமை.
மேலதிக விவரங்களுக்கு:
தலைமை அலுவலகம் # 410,K.K.S Road, Jaffna.
கிளைகள் NMMV Road, Nelliady.
Chankaththanai, Chavakachcheri.
(சி-33497)



இப்பொழுது விற்பனையில்
கம்ப்யூட்டர் டுடே
மே, 2004, இதழ்
உடைகின்றன கணினிகளின் பாதுகாப்பு வளையங்கள்
- அதிர்ச்சிதரும் தகவல்கள்
Windows கணினிகளைக் கடித்துக் குதறுகிறது எமனமர்!
பயப்படாத... Sasser என்ன, Dabber என்ன.. யார் வந்தாலும் ஒரு கை பார்த்திடலாம்...
இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை
இன்னும் பல விடயங்களுடன்...
உங்கள் பிரதிக்கு முந்துங்கள் 'உதயன்' முகவர்களிடமும், புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
★ சந்தாதாரர்களுக்கு விலைக்கழிவு உண்டு.
★ முன்னைய வெளியீடுகளும் பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு: (சி-35850) (30-12-17)
விநியோகப்பகுதி,
'உதயன்' பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...
யாழ் பயணத்தின் போது ரோல்ஸ் றொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை அனுபவியுங்கள்!
யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: Tel: 011 2372952/3, Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com
இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.06.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சூரியகாந்தி

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

27-06-2004


**நேற்றுவரை மிதிவெடி விழிப்புணர்வு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு நிறைவடைந்திருக்கிறது. எங்கள் தாய் மண்ணில் லட்சக்கணக்கில் விதைக்கப்பட்டிருக்கின்ற இந்த புதைவெடிகள் ஏராளமான உயிர்களின் வாழ்வுகளை விழுங்கி தம்மை விட்டுக்கொண்டிருக்கின்றன. மன்னிக்கத்தெரியாத அந்த மறைபொருள்கள் தம்மைத் தீண்டும் எத்தனை உயிர்களின் உடல்களை உருக்குலைக்கக் காத்திருக்கின்றனவோ தெரியாது. இலங்கைத் தீவு இன்று தென்னாசியாவிலேயே அதிக மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள நாடாக மாறிவிட்டது. கண்ணிவெடிகளால் அதிகளவில் உயிர்கள் பலி கொள்ளப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை ஐந்தாவது இடத்தையும் பெற்றுவிட்டது. ஆனாலும் சர்வதேச மிதிவெடிகள் தடைச்சட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திட இன்னமும் அரசு தயாராக இல்லை. எனவே இந்தப் புதைவெடிகள் எழுதப்போகும் வதை வரலாறு தொடரத்தான் போகின்றது. மௌனமாய் மறைந்திருக்கும் இந்த மரணப் பொறிகள் தொடர்பான விழிப்புணர்வு எம்மிடம் இன்னும் பூரணம் பெறவில்லை. கடந்த வாரம் கூட சிலர் இந்த பொறிவெடிகளில் சிக்கியிருக்கிறார்கள். மண் சுமந்த இந்த வெடிகளால் இன்று புண்சுமந்திருக்கும் மேனியர்கள் சிலரை சமீபத்தில் சந்தித்தோம். அவர்கள் கூறும் கண்ணீர்க் கதைகளை உங்கள் விழிப்புணர்வுக்காக விரிக்கின்றோம் இங்கே.....**

# மண் சுமந்த வெடிகளால் புண் சுமந்த மேனிகள்...



அன்று மல்லிகாவுக்கு மிகவும் மகிழ்ச்சிகரமான நாளாகவே இருந்தது. 'சூரியகதிர்' நடவடிக்கைகள் ஓய்ந்த பிறகு அவளின் குடும்பத்தார் சொந்த ஊரில் மீண்டும் குடியமர்ந்துவிட்டார்கள். அவர்கள் மீளக்குடியமர்ந்து ஒன்றரை மாதங்கள் ஆகிவிட்ட போதிலும் மாமாவும் அவரின் குடும்பமும் அன்றுதான் தென்மராட்சியில் இருந்து திரும்பியிருந்தார்கள். எனவே மாமாவின் பிள்ளைகளோடு காலை முதல் ஒரே விளையாட்டுத் தான். நேரம் பிற்பகல் ஐந்து மணிக்கு மேலாகிவிட்டது. முன்வீட்டின் முற்றத்தில் எல்லாப் பிள்ளைகளும் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். மெல்ல பசி எடுக்க "அம்மாவிடம் ஒரு தேத்தண்ணி வாங்கிக் குடிப்பம்" என்ற எண்ணத்துடன் வீட்டுக்கு விரைகிறாள் 'அம்மா, அம்மா தேத்தண்ணி தாருங்கோ' என்று அவள் கேட்க பிள்ளை எல்லோரையும் போய் கூட்டி வா அம்மாவின் கட்டளை கிடைக்கிறது. துள்ளிப்பாய்ந்து சிட்டாகப்பறக்கிறாள் மல்லிகா. மல்லிகா சென்ற சில வினாடிகளில் 'டும்' என்ற வெடியோசை அந்தப் பகுதியை அதிர வைத்து ஓய்கிறது. அலறி அடித்துக்கொண்டு ஓடி வந்த உறவுகள் மல்லிகாவின் முன் வீட்டு முற்றத்தில் நிறைகிறார்கள். அங்கே எட்டுவயதேயான அந்தப்பிஞ்சுப் பறவை இரத்தத்தில் தோய்ந்து அவளின் ஒரு பாதம் மட்டும் காலில் இருந்து பிரிந்து சற்றுத் தள்ளி.....

இது கற்பனையல்ல; கதையுமல்ல; எட்டு வயதில் தன் சிறகொன்றைப் பறிகொடுத்த அந்தச் சிட்டு இன்னும் வாழ்கிறாள். நடையிழந்து போன அவள் கால்களுக்கு நம் அரசு கொடுத்த நட்டஈடு வெறும் ஏழாயிரம் ரூபா மட்டுமே. "இழந்து போன என் கால்களைப்பற்றி இப்பொழுது கவலைப்படுவதை விட்டுவிட்டேன். ஓர் ஆசிரியராக வர வேண்டும் என்பதே என் இலட்சியம். அதற்காக கஷ்டப்பட்டு படிக்கிறேன். எனது இந்த பொய்க்காலுடன் நடந்து தான் பள்ளிக்கூடத்திற்கும், ரியூசனுக்கும் போறனான். அம்மாதான் எனக்கு ஆறுதல்' என்கிறாள் அந்தப் பெண்.

"என் பிள்ளையின்ர வாழ்க்கையில் இப்படியொரு நாள் வந்திருக்கவே கூடாது" என்று தன்னைமீறி வருகின்ற கண்ணீரை அடக்கிக் கொண்டு வேதனையுடன் கூறினாள் மல்லிகாவின் தாயார்.

எட்டு வயதிலேயே இந்தப் பெண்ணின் காலைப் பறித்துவிட்ட காலன் இந்த புதைவெடிகளுக்கு மட்டும் ஐம்பது வருடங்கள் வாழ்வைக் கொடுத்திருக்கிறான். யுத்தம் ஓய்ந்தாலும் இவற்றின் சத்தம் ஓயப்போவதில்லை. இவற்றின் ஆயுள் முடியும் வரை உங்கள் கால்களைக் காவுகொள்ளக் காத்திருக்கும்.



இ.கருணாமூர்த்தி காலை மட்டுமே இழந்தேன் காலத்தை அல்ல....

தெல்லிப்பழை வறுத்தலை விளாணைச் சேர்ந்த 29 வயது இளைஞர் இளையவன் கருணாமூர்த்தி. இவர் 17 வயதில் தன இடது காலைப் பறிகொடுத்தவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கு அருகில் உள்ள தனது நண்பர் வீட்டிலிருந்து பொருள்களை ஏற்றிவரச் சென்றபோது மிதிவெடியில் சிக்கினார். பொருள்களை டிராக்டரில் ஏற்றி அனுப்பிவிட்டு டிராக்டர் வரும்வரை காத்திருந்த நேரத்தில் "மாங்காய் பிடுங்குவதற்காக அந்தக் காணியிலிருந்த மரத்தில் ஏறினேன். பறித்துக்கொண்டு திரும்பிய போது மரத்தின் அருகே புதைக்கப்பட்டிருந்த மிதிவெடியில் காலை வைத்துவிட்டேன்" என்றார் அவர். ஆசையாய் மாம்பழம் பறிக்கப் போனவர் தன் அருமைக் காலைப் பறிகொடுக்க நேர்ந்தது. காலை இழந்ததால் தன் கல்வியை இழந்தார். ஆனாலும் இவர் அயர்ந்து விடவில்லை. மோட்டார் சைக்கிள் திருத்தும் நிலையம் ஒன்றில் சேர்ந்து பயிற்சி பெற்றார். இன்று கைதடியில் சொந்தமான 'மெக்கானிக் ஷொப்' ஒன்றை நடத்துகிறார். காலை இழந்தாலும் இவர் காலத்தை இழக்கவில்லை. கால் போனபின் 'பிறேக் டான்ஸ்' ஆடப் பழகினேன். பல்வேறு களியாட்ட நிகழ்வுகளில கலந்துகொளளும்போது ஆடுவதை வாடிக்கையாகக் கொண்டிருக்கிறேன். எங்கள் சங்க உறுப்பினர்களிடையே நடத்தப்படும் சைக்கிள் ஓட்டப் போட்டிகளில் தொடர்ச்சியாக முதலிடத்தைப் பெற்றுவருகிறேன என்று பூரிப்புடன் கூறினார். திருமணமாகி நான்கே மாதங்களே ஆன இவரது மனைவி ஒரு பல்கலைக்கழக மாணவி. நெறிகெட்டுத் திசைமாறித் திரியும் நம் இளைஞர்களுக்கு மத்தியில் இந்த எளிமையான இளம் குடும்பம் உரும்பிராய்



ராசம்மாவும் பேர்த்தியும் வறுமையும் வெறுமையுமே மிச்சம்....

நலன்புரி நிலையத்தில் நலமாக வாழ்கிறது. இவர்களைப் பார்த்த போது ஊனம் உயர்வுக்குத் தடையல்ல என்பது உறுதியாய்த் தெரிந்தது.

அடுத்து நாம் சந்தித்தது 1999 ஆம் ஆண்டு குப்பிளானில் அமுக்கவெடியில் சிக்கி உயிரிழந்த தங்கவேல் என்பவரின் குடும்பத்தை. ஏற்கனவே நோய்க்கு தாயைப் பறிகொடுத்திருந்த தங்கவடிவேலின் பிள்ளைகள் நாலு பேரும் அவரை அமுக்க வெடிக்கு பறிகொடுத்தபோது கடைசிப் பிள்ளைக்கு ஒரு வயது. படையினர் வெட்டிய பின் கைவிட்டுச் சென்ற மரக்குற்றிகளை மாட்டு வண்டியில் ஏற்றிக் கொண்டு வந்தபோது வீதியோரம் புதைக்கப்பட்டிருந்த அமுக்க வெடியில் தங்கவடிவேலும் மேலும் நால்வரும் சிக்கினார்கள். அதில் அவருட்பட மூவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்கள். அநாதரவான அந்தக் குழந்தைகளுக்கு அடைக்கலமானவர் தங்கவடிவேலின் தாயார் ராசம்மா. இப்போது 82 வயதான அந்த மூதாட்டி அந்தக் குழந்தைகளை வளர்த்தெடுக்கப்பட்ட கஷ்டங்களை கூறியபோது நெஞ்சு நெகிழ்ந்தது.

'மூத்த பேரன் பதினைந்துவயது ஆனபோது படிப்பை நிறுத்திவிட்டு உழைக்கப்போய்விட்டான். எனக்கு ஏலாமப்போனதோட போர்த்தியும் படிப்ப விட்டுட்டா. இப்ப சமையல் எல்லாம் அவதான் என்றார் இராசம்மா.

அவர்களின் வீட்டுச்சூழலில் 4 மாடுகள் மதிவெடியில் சிக்கி இறந்துள்ளன. அயல் வீட்டுக்காரர் ஒருவர் முற்றத்தில் படங்குக் கட்டிலைப் போட்டு ஏறிப்படுத்தபோது கட்டிலின் காலில் வெடிவெடித்து அவர் படுகாயமடைந்தார்.

ராசம்மாவின் முன்வீட்டுக்காரர் 62 வயதான க.சரஸ்வதி, தங்கவடிவேலோடு அமுக்க வெடியில் சிக்கி இறந்தவர்களில் இவரது மகனும் ஒருவர். திருமணமாகி நான்கு மாதங்களேயான நிலையில் அவர் இறந்து போனார். "நாகர் கோயிலில் இருந்த தம்பி எங்களப்பார்க்க வந்த இடத்தில பம்பலாக மாட்டுவண்டியில் ஏறிப் போனவன் வரவேயில்ல என்று கண்ணீர் மல்கக் கூறினார் அந்தத் தாய்.

இன்று இலங்கையில் அதிகளவில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள மாவட்டமாக யாழ். மாவட்டமே உள்ளது. இங்கு ஏறத்தாள 2 லட்சம் வரையான மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்று தரவுகள் கூறுகின்றன. போரிடும் தரப்புக்களைச்சேர்ந்த ஆயுதப் படைகள் நிலைகொண்டுள்ள பிரதேசங்களை அண்டி அல்லது அவர்களால் கைவிடப்பட்ட நிலைகளை அண்டி இந்தப் பொறிவெடிகள் பெருமளவில் புதைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் 58 வீதமான நிலப்பரப்பு மிதிவெடி அபாயம் நிறைந்த பகுதியாகவே பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பது கவனத்துக்குரியது.

ஏழாலையைச் சேர்ந்த 29 வயது இளைஞரான தர்மலிங்கம் பிறேமசீலன் என்பவர் விறகு வெட்டுவதைத் தொழிலாகக் கொண்டவர். வலி. வடக்கு உயர் பாதுகாப்பு வலய முன்னரங்கப் பகுதிகளையண்டிய பிரதேசங்களில் சென்று விறகுகள்வெட்டி விற்று வந்தவர். வழமையாக விறகு வெட்டிக்கொண்டு வரும் பாதையலேயே சென்றார். "முதல் நாளும் அந்தப் பாதையில்தான் போய்வந்தேன். விறகை வெட்டிக்

## எச்சரிக்கும் அனுபவங்கள்

கொண்டு அந்த ஒற்றையடிப் பாதை வழியாக வந்தபோது மிதிவெடி வெடித்தது. மிதிவெடி வெடித்த இடத்திற்கு 30 மீற்றர் தொலைவில் ஒரு பிள்ளையார் கோயில் உள்ளது. அங்கு மக்கள் பெருமளவில் வந்து போவார்கள். எவருக்கும் வெடிவெடிக்கவில்லை. அந்த நம்பிக்கையில்தான் அந்தப் பாதையைப் பயன்படுத்தினேன். ஆனால், எனக்கு வெடித்துவிட்டது. இந்தச் சம்பவத்தின் பின் என்னால் கூலி வேலைகளுக்குக் கூட தொடர்ச்சியாகச் செல்ல முடிவதில்லை. வேலைக்கு அழைக்கப் பலரும் யோசிக்கிறார்கள். எனக்கு இரண்டு பிள்ளைகளுண்டு. என் மனைவிதான் எனக்கு ஆறுதல" என்று தன் மனச் சுமைகளைக் கொட்டினார் பிறேமசீலன்.


எழுத்துருவாக்கம், சந்திப்பு

ஆர்.மார்க் அன்ரனி


இப்படித்தான் சுவினைப் பகுதியில் ஒரு விறகுவெட்டும் தொழிலாளி சுமந்து வந்த விறகுக்கட்டை நிலத்தில் போட்டபோது அது மிதிவெடியில் வீழ்ந்து வெடி வெடித்தது. அதனோடு இணைக்கப்பட்டிருந்த கிளைமோரும் வெடித்ததால் அவர் உடல் சிதறிப் பலியானார்.

EXPLOSIVE NO EXCUSE (வெடிபொருள்கள் மன்னிப்பதில்லை) என்பது இப்போது பழமொழிபோலாகிவிட்டது. உண்மையில் அவற்றிற்கு நண்பன், எதிரி, நல்லவன், கெட்டவன், சிறுவர், பெரியோர், ஆண், பெண் என்ற பாகுபாடு தெரியாது. தீண்டினால் தீயாகும் இயல்புடையவை. இவற்றிற்கு பல நிறங்கள், பல வடிவங்கள், பல மாதிரிகள் உண்டு. அடையாளம் தெரியாத பொருள்களின் அருகில் கூடச் செல்லாதீர்கள்.



வ.செல்வராஜா. ம.பாலசுப்பிரமணியம் இரத்தத்தை கொடுத்து உணவை வாங்குகின்றோம்.

மீளக்குடியமர்வதற்காகத் தன் வீட்டைச் சுத்திகரித்தபோது மிதிவெடியில் சிக்கிய இளைஞர் ஒருவரை கட்டுவனில் கண்டு கதைத்தோம். கால் பறிபோனதோடு வெளிநாடு செல்லும் தன் கனவும் பறிபோனதாகக் கவலைப்பட்டார். என்றாலும் அவர் சோரவில்லை. கால்போனபின் தொழிநுட்பக் கல்லூரியில் சேர்ந்து இலத்திரனியல் கற்று, தற்போது தொலைக்காட்சி, வானொலி திருத்துநராகத் தொழில் புரிகின்றார். நாம் அவரைச் சந்திக்கும் போதும் ஒரு தொலைக்காட்சியைப் பழுது பார்த்துக்கொண்டிருந்தார். கடந்த வாரத்தில் மிதிவெடி வெடிப்பில் சிக்கி கண்கள், கால்கள் பாதிக்கப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் சிக்சை பெற்றுத்திரும்பிய அரியாலையைச்சேர்நத க.பாலசுபபிரமணியம், மயிலங்காட்டைச் சேர்ந்த வ.செல்வராசா ஆகிய இரு தொழிலாளர்களை சந்தித்தோம். அன்றாடம் கூலி வேலைகளுக்குச் சென்று வாழ்க்கையை நகர்த்தும் இவர்கள், சுன்னாகம் பகுதியில் படையினர் நிலை கொண்டிருந்து கைவிடப்பட்ட மண் அரண் அருகில் உள்ள காணியொன்றை துப்புரவு செய்யும் பணியிலிருந்தபோது வெடித்தாக்கத்திற்கு இலக்காகினர். 'பற்றைகளை அப்புறப்படுத்திக்கொண்டு செல்லும போது மரவேரொன்றை பிடித்து இழுத்தேன் அப்போது மிதிவெடி வெடித்தது. உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டன. முக்கியமாகிமாக கண்கள் பார்க்க முடியாத அளவுக்கு கூசுகின்றன' என்கின்றனர் அந்தத் தொழிலாளர்கள்.

இப்படி எத்தனை கதைகள் இங்கே. எங்கு வெடிகள் உள்ளன என்பது எவருக்கும் தெரியாது. இவைகள் புதைக்கப்பட்டதால் விதைக்கப்படாத நிலங்கள் ஏராளம். ஆனாலும் நீங்கள

(IV ஆம் பக்கம் பார்க்க)

# வீதியும் விதியும்

மு.சிவநேசன்

அனைவரும் அலாய்ப் பறக்கின்ற ஓர் அவசர யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இயங்குகின்ற படிகளில்கூட நிற்கப் பொறுமை இல்லாமல் ஏறிக்கொண்டிருப்பவர்களைக் காண முடிகிறது. லிப்டிற்குக் காத்து நிற்கப் பொறுமை கிடையாது தவிக்கிறவர்களைச் சந்திக்கிறோம். விமானங்களின் வேகம் போதவில்லை. மாட்டு வண்டியில் நிதானமாகப் பயணம் செய்த காலம் மலையேறிவிட்டது. வாகனங்களால் மனிதனின் மன வேகத்துக்கு ஈடு கொடுக்க இயலவில்லை.

நகர வீதிகள் வாகனங்கள் நகர இயலாதபடி நிரம்பி வழிகின்றன. கொழும்பு நகரில் பார்த்தால் புத்தம் புதிதாக ஜொலிக்கும் வாகனங்களில் பெரும்பாலானவை எங்காவது ஒரு பக்கத்திலாவது உரசுப்படாமல் இருப்பதில்லை. வாகனப் புழக்கம் நாளாந்தம் அதிகரிக்கும் அதே வேளை வீதிகள் விஸ்தரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் முடங்கிக் கிடக்கின்றன. காட்சியறைகளிலும் துறைமுக இறங்கு துறைகளிலும் பெரும் எண்ணிக்கையில் குவிகின்ற வாகனங்களெல்லாம் வீதிக்கு வந்துவிட்டால் இன்னும் நெருக்கடிகள் பலமடங்கு அதிகரிக்கும். மேலும் வாகன இறக்குமதிகள் தொடர்வது நிலைமைகளை மேலும் மோசமாக்கும்.

போதாதென்று வீதிகளின் இருமருங்கும் இடம் பிடிக்கும் பெட்டிக் கடைகள் போக்குவரத்தை இடையூறு செய்கின்றன. வீடுகள், கடைகளின் படிக்கட்டுகளும் வீதிக்கு வந்துவிடுகின்றன. வெறும் வீதி ஒழுங்கு விதிகள் அல்லது சட்டங்கள் மூலமாக மட்டும் மோசமடைந்து வரும் இத்தகைய நிலைமைகளைக் கட்டுப்படுத்த இயலாது. வீதியோரம் நிறுத்தப்படும் வாகனங்கள் வேறு இடநெருக்கடியை உண்டாக்குகின்றன.

நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள் பற்றி உலக நாடுகள் கவலை தெரிவிக்கின்றன. என்றாலும் ஆங்காங்கே நடைபெறும் இத்தகைய சம்பவங்கள் போர்முனைச் செய்திகளைப் போல பிரபல்யம் அடைவது இல்லை.



ஊடகங்களும் இவற்றிற்கு அதிகம் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால், அங்கொன்றும் இங்கொன்றுமாக இடம் பெறும் விபத்துக்களில் ஆண்டொன்றிற்கு உலகளாவிய ரீதியில் ஒன்றரை மில்லியன் வரையிலான மனித உயிர்கள் காவு கொள்ளப்படுகின்றன; ஐம்பது மில்லியன் வரையிலானோர் காயமடைகிறார்கள். அத்துடன், அனைத்து விபத்துக்கள் பற்றிய தகவல்களும் கணிப்பீட்டாளர்களைச் சென்றடைவதில்லை.




யுத்தம் யுத்தம் என்று உலக அமைப்புக்கள் பலவும் கத்துகின்றனவே – அந்த யுத்தம்கூட இவ்வளவுக்கு உயிர்களைக் காவுகொள்வது கிடையாது.

உலக சுகாதார நிறுவனம் வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் முயற்சியில் இம்முறை தீவிரமாகக் களத்தில் இறங்கியிருக்கிறது. இலங்கையில் மலேரியா ஒழிப்பு, டெங்கு ஒழிப்பு, எயிட்ஸ் ஒழிப்பு என்றெல்லாம் அதிகம் பேசப்படுகிறதே. இவையெல்லாம் ஆண்டு தோறும் எத்தனை உயிர்களைக் காவு கொள்கின்றன? அவற்றையெல்லாம்விட மோசமாகப் பலிவாங்கும் வீதி விபத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு சகல தரப்பினருக்கும் அவசியமல்லவா? அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற வீதிவிபத்துக்கள் பற்றிய கண்காட்சி பாராட்டத்தக்கது. விபத்து தவிர்ப்பு நடவடிக்கையில் இத்தகைய கண்காட்சிகள் முக்கிய பங்கு வகிக்க வல்லன. இரும்பை உருக்கியதுபோல விபத்தில் சிக்கிய வாகனங்களின் காட்சி மனதை உருக்கும்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில்தான் இவற்றில் 85 வீதமான விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்பதுவும் இலங்கையிலும் விபத்துக்களின் விகிதம் மிக மோசமாக அதிகரித்து வருகின்றது என்பதுவும் கவலை அளிக்கின்ற சமாச்சாரங்கள். உலக வாகனத் தொகையில் 15 வீதத்தை மட்டுமே கொண்டுள்ள ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களில்தான் உலகின் 45 வீதமான விபத்துக்கள் இடம் பெறுகின்றன.

விபத்துக்கள் நடைபெறும் இடங்களில் பாரபட்சமற்ற விசாரணைகளே மேலும் விபத்துக்களைத் தவிர்க்க உதவும். விபத்திற்கு உரிய சரியான காரணம் கண்டறியப்படுதல் அவசியம். விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான வீதிப் பாவனை பற்றிய அவதானம் வீதிக்கு வரும் சகலருக்கும் அவசியமானது. இது சாரதிகளுக்கு மட்டும் உரிய சமாச்சாரம் என்கின்ற தவறான கருத்து பலரிடமும் நிலவுவது தவறானது. தமது உயிரைத் தாமே பாதுகாக்க வேண்டிய பொறுப்பு வீதிக்கு வரும் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஏதாவது நடந்தபின் அடுத்தவரைக் குற்றம்சாட்டிக் கண்டமிச்சம் என்ன? இழப்புக்கள் அனைவருக்கும்தான் சொந்தம்.

மேலும், வீதிக்கு வராத பலரும்கூட மறைமுகமாக வீதிவிபத்துக்களுக்குக் களம் அமைக்கிறார்கள். குழந்தைகளையும் வளர்ப்புப் பிராணிகளையும் வீதிகளில் உலாவவும் விளையாடவும் விடுபவர்கள், வாகனங்களைச் சீரவரத் திருத்தம் செய்யாத அல்லது செய்தும் கடைசி நேரத்தில் ஆணி நட்டுக்களைச் சரிவரப் பொருத்தாத திருத்துநர்கள், சாரதிகளையும் வாகனங்களையும் ஓய்வு ஒளிச்சல் இன்றித் துரத்தித் துரத்தி வேலை வாங்கும் முதலாளிமார் மற்றும் முகாமையாளர்கள் போன்றவர்களே இத்தகைய வீதிக்கு வராத துரோகிகள் ஆகிறார்கள். விபத்துக்களில் இலங்கையைப் பொறுத்தவரை லைசென்ஸ் இல்லாத சாரதிகள் 10 வீதமான பொறுப்பை ஏற்கிறார்கள். மனிதத் தவறுகளால் ஏற்படும் விபத்துக்கள் எண்பது வீதமானவை. மீதம் வாகன சீரின்மையால் ஏற்படுகின்றன என அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. விபத்துக்களால் ஏற்படும் மேலதிக செலவீனம், வைத்திய வசதிகள், காவல் துறை, நீதித் துறை என்பவற்றை திண்டாட வைக்கின்றன. இதற்கென மட்டும் பத்து பில்லியன் ரூபாய் ஆண்டொன்றுக்குத் தேவைப்படுகிறது.

இந்தப் பணத்தை பட்ஜெட்டில் விதிக்கப்படும் வரிகள்மூலமாக மக்களே செலுத்தவேண்டியவர்கள் ஆகிறார்கள். எனவே, எங்கோ நடைபெறும் விபத்துக்கள் எம்மையும் பொருளாதாரரீதியில் பாதித்தே தீரும். வைத்தியசாலைக்குக் காயமடைந்து வரும் இருபது விகிதத்தினர் வீதிவிபத்துக்களில் சிக்கியவர்களே.

ஒரு குழந்தை குறுக்கே ஓடி வந்துவிட்டால் ஒரு வெறும் அப்பாவிச் சாரதிபாடு திண்டாட்டம்தான். குழந்தையில் பட்டாலும் குற்றம். குழந்தையைத் தவிர்க்கப்போய் பிறிதொரு பாரிய விபத்தில் சிக்கினாலும் சிக்கல். இதற்காக வாகனம் ஓட்டும் முழுத் தூரமும் குழந்தை குறுக்கே வருகிறதா என்று பார்த்துக்கொள்ளவா இயலும்?. தங்கள் குழந்தைகளைத் தவறாமல் கண்காணிப்பது அவரவர் கடமை.

விபத்து நடக்கும் இடத்தில் சாரதிக்குச் சாத்துப்படி; வாகனத்துக்குத் தீ வைப்பு போன்ற கண் மூடித்தனமான தண்டனைகளை வழங்கும் கும்பல்களின் செயல்கள் சமூகத்தில் ஒரு விழிப்புணர்வை நிச்சயம் ஏற்படுத்தப் போவதில்லை. விபத்து நடைபெறும் இடங்களில் கூடுபவர்கள் சற்று நிதானமாகச் செயற்பட்டு தகுந்த காரணங்களை வெளிக்கொணருவார்களானால் அது பெரும் சமூகப் பணியாகவே அமையும்.

ஆடு, மாடுகளை வீதியோரம் மேயக் கட்டுபவர்களும், அவிட்டு விடுபவர்களும், நாய்களைக் கட்டாக்காலியாகத் தெருவில் அலைய விடுகிறவர்களும் பெரும் விபத்துகளுக்குத் தூபமிடுகிறார்கள். நாய்களில் சிக்கும் மோட்டார் சைக்கிளோட்டிகளின் நிலைமை பரிதாபம்தான். நாய்க்குப் பார்க்க வேலையுமில்லை நடக்க நேரமுமில்லை என்பார்கள். ஏதோ பெரிய பிஸியான அலுவல் மாதிரி ஓடித்திரியும். அது சற்றும் எதிர்பாராத தருணத்தில் குறுக்கே புகுந்துவிடும்.

சில நாய்கள் வாகனங்களையும் சைக்கிளோட்டிகளையும் துரத்தித் துரத்தி குரைக்கும். வீதியோர வீட்டுக்காரர்கள் தமது நாய்களின் சாகசங்களை ரசித்துச் சிரிப்பார்கள். அடுத்தவர்களுக்கு உள்ள இடைஞ்சல்களையும், ஆபத்துக்களையும் அவர்கள் உணராரோ?

வீதி விதிமுறைகள் பாடசாலைப் பருவத்திலிருந்தே அழுத்தம் திருத்தமாகச் சிறார்களுக்கு ஊட்டப்பட வேண்டியவை. வீதியைக் கடப்பதுவும், வீதியோரமாக நடப்பதுவும் பள்ளிப் பருவத்தில் ஊட்டப்படவேண்டிய பாதசாரிகளுக்கான ஒழுக்கக் கோவைகள். மேலும் வீதிச் சமிக்ஞைகள் பற்றிய அறிவும் கல்வியின் பரீட்சைசார் நோக்கத்துக்காக மட்டுமன்றி வாழ்க்கைக்கான வழிகாட்டியாகவும் ஊட்டப்பட வேண்டியவை. இத்தகைய அடிப்படை அறிவினைப் பெற்ற சிறார்கள் தமது பெற்றோர் அல்லது சாரதிகள் தவறுகளைச் செய்ய அனுமதிக்க மாட்டார்கள் என்பதால் இத்தகைய விழிப்புணர்ச்சி உடனடிப் பயனைக் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மதுபோதையில் வாகனமோட்டும் சாரதிகளை இலக்கு இல்லாத தற்கொலைக் குண்டுதாரிகள் என்றே கருதலாம். இவர்களுக்கான தண்டப் பணத்தை அதிகரிப்பது மட்டும் எந்தவிதமான நன்மைகளையும் தருவதாக இல்லை. குறைந்தது இரண்டு வருடங்களுக்கு அத்தகையோரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வது பெருமளவில் விபத்து விகிதத்தைக் குறைக்கும். ஆனால், இத்தகைய நடவடிக்கையினால் சாரதிகளுக்கும் பலத்த தட்டுப்பாடு ஏற்படும் ஏதுநிலையும் உருவாகிவிடும்.

ஆபிரிக்கக் கிராமங்களில் அளவுக்கு அதிகமாக ஆள்களை ஏற்றும் நிலைமை பஸ்களில் சர்வ சாதாரணம். அவற்றில் இடம் கிடைக்காதவர்கள் நடந்துபோவதைத் தவிர்ப்பதற்காகத் திறந்த டிறக்குகளில் தொற்றிக்கொள்ள வேண்டியதுதான். அவற்றில் இருந்து தூக்கி வீசப்பட்டும் பலர் காயமடைகிறார்கள். இவற்றுக்கெல்லாம் பயந்தால் பிரயாணத்தைத் தவிர்க்க வேண்டிய இக்கட்டான நிலைமை.

விபத்துக்கள் மற்றும் வீதி ஒழுங்குகள் பற்றிய தகவல்களை உலக சுகாதார நிறுவனத்தின் http://www.who.int/world-health-day/2004/infomaterials/world_report/en என்ற இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பாதசாரிகளையும், சைக்கிளோட்டிகளையும், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளையும் பெருமளவில் கொண்டிருக்கும் நடுத்தர மற்றும் வறிய நாடுகளில்தான் வீதிகளில் உயிரிழப்புக்கள் அதிகம் என இந்த அறிக்கை தெரிவிக்கின்றது. இங்கு மக்கள் பொதுப் போக்குவரத்து வசதிகளை நம்பியிருப்பதும் ஆபத்தான நிலைமைகளுக்கு வழி கோலுகின்றது. மக்கள் வீதிகளைக் குறுக்கே கடப்பதற்கு மட்டுமன்றி வீதி நெடுகிலும் நடப்பதற்கும் பயன்படுத்துவது மேலை நாடுகளுக்கு வியப்பளிக்கிறது. எனினும், இவர்களுக்கான தனிப் பாதைகளை அமைத்துக் கொடுக்கும் வசதி வளர்முக நாடுகளிடம் கிடையாது.

வீதியோரம் நடப்பவர்களும் சைக்கிளோட்டிகளும் பின்னால் வரும் வாகனம் 'ஹோர்ண்' ஒலிக்கும்போது விலகிவிட்டு வாகனம் தாண்டியதும் மீண்டும் நடு வீதிக்கே வந்துவிடுகிறார்கள். அவர்களெல்லாம் ஏனோ அதற்குப் பின்னால் அடுத்த தொரு வாகனம் வரக்கூடிய சாத்தியம் இருப்பதை மறந்துபோய் விடுகிறார்கள். இதனால் எற்படும் விபத்துக்கள் பின்தங்கிய பிரதேசங்களில் மிக மிக அதிகம்.

## வேலைகொள்வோர்

வேலைகொள்வோர் தமது சாரதிகளுக்குத் தகுந்த ஓய்வையோ கால அவகாசங்களையோ வழங்காமையும் தமது அவசரங்களுக்காகச் சாரதிகளைத் தொடர்ந்து சிரமப்படுத்துதல் அல்லது அவதிப்படுத்துதலும் விபத்துக்களுக்கு வழிவகுக்கின்றது. வேலைகொள்வோர் போக்குவரத்து ஒழுங்குகளை முகாமை செய்யாமையும், வாகனங்கள் மற்றும் போக்குவரத்து விதிகள் போன்றவற்றைப் பற்றிய அறிவினைக் கொண்டிராமையும், தமது பணியாள்களாகிய சாரதிகள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பில் அக்கறை செலுத்தாமையும், அவர்களின் காலநிலை மற்றும் உச்ச நெருக்கடிவேளை பற்றிய கவலையின்மையும் முழுமூச்சான வியாபாரச் சிந்தனைகளும் பணியாளர்கள் விபத்துக்களில் சிக்க ஏதுவாகின்றன.

சாரதிகள் தமது சொந்த வாகனங்களைச் செலுத்துவதற்கும் வாடகை வாகனங்களை அல்லது வேலை கொள்வோரின் வாகனங்களைச் செலுத்துவதற்கும் இடையில் அவதானம் தொடர்பாகப் பாரிய வேறுபாடு காணப்படுகிறது. சொந்தமான மோட்டார் கார்களில் பயணிக்கும் பெருமளவு உரிமையாளர்களைக் கொண்டிருப்பதுதான் வசதியான நாடுகளில் வாகன எண்ணிக்கை அதிகமாக இருந்தும் விபத்துக்கள் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்றும கருதப்படுகிறது. தமது வாகனங்களில் கீறல் படாமல் அக்கறை செலுத்தும் சாரதிகளின் அக்கறையே பல விபத்துக்களைத் தவிர்த்து விடுகிறது.

சீனாவில் 55 மில்லியன் வாகனங்களும், தாய்லாந்தில் 18 மில்லியன் வாகனங்களும் பாவனையில் உள்ளன. இலங்கையில் அதிகரித்துவரும் வாகனங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவோ அல்லது சாரதிகளினதும் வீதிகளினதும் தரத்தை உயர்த்தவோ உருப்படியாக எதுவும் செய்யப்படவில்லை. *(வளரும்)*

# சமாதானம் சாகடிக்கப்படுவதை சர்வதேசம் தடுத்து நிறுத்துமா?

எரிகிற வீட்டில் பிடுங்கினது இலாபம் என்றோ தாய்முலை திருடியும் தான் வாழ்ந்தால் போதும் என்றோ கருதுகின்ற சில மோசடித்தனமான அதிகாரிகளையும் நிர்வாகிகளையும் சில முதலாளிகளையும் தவிர, போர் ஒன்று வெடித்தால் அதன் கொடூர விளைவுகள் எவ்வளவு பயங்கரமாக இருக்குமோ என்ற பீதி சகல பொதுமக்களையும் ஆட்கொண்டுவிட்டது.

ஏழைச்சிங்கள சமூகத்திலிருந்து அரச படைக்குச் சேர்ந்துள்ள சிப்பாய்களும் சரி, நீண்ட அரசியல், பொருளாதார சுசப்புணர்வுகளுடன் உள்ள தமிழ்ச் சமூகத்திலிருந்து விடுதலைப் போருக்காக இணைந்த இளைஞர், யுவதிகளும் சரி அரசியல் பேச்சுகளுக்கூடாக சமாதான முறையில் தீர்வுகளை எட்டுவதையே நிச்சயமாக விரும்புவர். சிப்பாய்களினதும் போராளிகளினதும் பெற்றோர் சமாதானத்துக்காகவே ஏங்கிப் பிரார்த்திக்கின்றனர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப் புலிகளுடன் மீளவும் ஆரம்பிக்க முனைந்த சமாதானப் பேச்சுவார்த்தைகள் பற்றிய பேச்சுக்கள் முறிந்து போயுள்ளன. இனப்பிரச்சினைக்கான இடைக்காலத் தீர்வுக்கும், நிரந்தரத் தீர்வுக்கும் முடிச்சுப்போட்ட படியேதான் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் நிலைப்பாடு ஒருபுறம், விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று ஏற்கமுடியாது என்றும் - விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான யோசனைகளை ஏற்கமுடியாது என்றும் -ஜே.வி.பி. வலியுறுத்துவது மறுபுறம் என மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் என்ற நம்பிக்கை தேய்ந்து குறுகிவிட்டது.

## கூடிமகிழ்ந்து குலாவுதல் மட்டும் போதுமா?

வரலாறு விளைவித்த நம்பிக்கையீனங்களிலிருந்தும் வரலாற்று ரீதியாக சமாதான முயற்சிகள், அரசியல் அணுகுமுறைகளின் தோல்விகள் என்பனவற்றிலிருந்தும் விலகி நிற்கமுடியாதபடி சமகாலத்தில் அரசியல், இராணுவக் குணாம்சங்களும் கதா பாத்திரங்களும் செயற்படுகின்றன. என்பதே மிகப்பெரிய துர்அதிர்ஷ்டம். சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான விட்டுக்கொடுப்புக்களும் பரஸ்பர புரிந்துணர்வுகளும், கட்டி வளர்க்கப்படவேண்டும் என்ற பிரக்ஞை, அரசியல் அதிகாரங்கள் பகிரப்படவேண்டும், உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையில் முன்வைக்கப்படாமல் அந்த

அந்த இனங்களைச் சேர்ந்த வெவ்வேறான தனிப்பட்ட பிரமுகர்களின் 'கூடி மகிழ்ந்து குலாவுதல்' என்ற அடிப்படை கொண்டதாக முன்வைக்கப்படுகின்றது.

## அர்ஜுனாவின் செல்லப்பிள்ளையின் சிறுபிள்ளைத்தனம்

அண்மையில் இலங்கையின் நட்சத்திரக் கிரிக்கெட் வீரரான முத்தையா முரளிதரன் அரசியல் பகுத்தறிவு இல்லாத கருத்து ஒன்றை முன்வைத்திருந்தார். இலங்கை கிரிக்கெட் அணியில் சிங்களவர்களுடன் தமிழ் மகனான தானும் இணைந்து ஒத்துழைத்து தேசத்தின் வெற்றிக்காக உழைக்கமுடியுமென்றால் ஏன் நாட்டில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒற்றுமையாக இருக்கமுடியாது என்று கேள்வி எழுப்பியுள்ளார் முரளி. முரளிக்கு போதிய தமிழ் மொழியாற்றல் இல்லை என்பதற்காகவோ அல்லது தற்பொழுது சிங்களத் தேசப்பற்று இயக்கத்தின் தீவிர செயற்பாட்டாளராகவுள்ள முன்னாள் கிரிக்கட் கப்டன் அர்ஜுனா ரணதுங்க அவர்களின் செல்லப்பிள்ளை என்பதற்காகவோ முத்தையா முரளிதரனின் கருத்துக்களை எவரும் நிராகரிக்க முனையவில்லை. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் உள்ள சகல தமிழ் ஊடகங்களும் 'வஞ்சகமற்ற' பாணியில் முரளியின் பிரக்ஞைக்கு முக்கியத்துவம் கொடுத்து செய்தி வெளியிட்டிருந்தன.



இவ்வாறாக சில தனிப்பட்ட பிரமுகர்களின் 'கூடி மகிழ்ந்து குலாவுதல்' என்ற போக்கில் கூறப்படும் ஒற்றுமை, சமாதானம் தொடர்பான 'சிறுபிள்ளைத்தனமான' கருத்துக்கள் எவ்வித நடைமுறைப் பலன்களையும் தரப்போவதில்லை.

## புரியாணியும் ஐஸ்கிறீமும்

அதேபோல கடந்த இரண்டு வருட போர் ஓய்வுக்குள் இடம்பெற்ற சமாதானப் பயணங்கள், சமாதான மாநாடுகள், ஒன்றுகூடல்கள் என்பனவும் விழலுக்கு இறைத்த நீராகவே உள்ளன. இவ்வாறான நிகழ்வுகளில் அரச சார்பற்ற நிறுவனங்கள், வேறு பொது அமைப்புக்கள் என்பன ஈடுபட்டுவருகின்றன. கூடிக்கதைத்து விட்டு புரியாணிச்சோறும் ஐஸ்கிறீமும் சாப்பிட்டு சில பத்திரங்கள் அடங்கிய கோவைகளுடன் அவரவர்பாட்டில் வீடு ஏகியமைதான் கண்ட மிச்சம். தெற்கின் சாதாரண சிங்கள சமூகத்தினர் மத்தியிலோ வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட, ஏழைத் தனமும் அகதிவாழ்வும் கொண்ட, தமிழ்ச் சமூகத்தினர் மத்தியிலோ சமாதானத்தின் தேவை, அதிகாரப்பகிர்வு, உரிமைகளை மதித்தல் என்பன தொடர்பான கருத்துக்கள் சென்று சேரவில்லை.

## சொகுசுத்தனங்களும் சுகபோகித்தனங்களும்

கடந்த இருபது வருட கொடூரப் போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள், குழந்தைகள் உட்பட அனைத்து அகதிமக்களும் இன்னமும் செய்வதறியாது திகைத்துப் போயுள்ளனர். 'உள்நாட்டுக்குள் இடம் பெயர்ந்தோர்', 'வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்தோர்' என்ற கௌரவமான சொற்றொடர்களுடன் உத்தியோகபூர்வ ஆவணங்கள் வலம்வருகின்றன. வாஷிங்ரன்,

**- டன்ஸ்ரன் லூயிஸ் -**

ரோக்கியோ, பிரஸல்ஸ் என சர்வதேசங்களினதும், நகரங்களிலிருந்து கொழும்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் என்று உள்நாட்டு நகரங்களிலும் கூட்டங்களும், மாநாடுகளும், கருத்தரங்குகளும் நடந்தேறுகின்றன. சொகுசுத்தனங்களோடும் சுகபோகித்தனங்களோடும் தத்தமது நாடுகள், பிராந்தியங்களின் தந்திரோபாய அரசியலுடனும் புவிசார் அரசியலுடனும் வர்த்தக வியாபார நோக்கங்களுடனும் முரண்பட்டுத் தீர்வு-முறைமைகளை முன்வைக்கும் சர்வதேசப் பிரதிநிதிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நன்மைகளுக்குரிய தீர்மானங்களையும் தீர்வுகளையும் காண்பதில் எள்ளளவும் வெற்றிபெறவில்லை.

உள்நாட்டில் அரசியல் இராணுவ ரீதியாக மேலும் மேலும் தீவிரப்பட்டு, துருவப்பட்டு நிற்கும் சக்திகளுக்கிடையில் சமரசத்தையும் தீர்வையும் கொண்டுவருவதில் அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் வெவ்வேறு சர்வதேச சக்திகள் வெவ்வேறு பண்புகளையும் கொள்கைகளையும் கடைப்பிடிக்கின்றன.

## தீவிர அரசியல் சக்திகளைத் தாண்டமுடியவில்லை

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பில் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான இடைக்கால ஏற்பாடுகளையாவது உருவாக்குவதில் தென்னிலங்கையின் தீவிர அரசியல் சக்திகளைத் தாண்டி, உதவுவதில் சர்வதேச சக்திகளான நோர்வே, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் என்பன எவ்வித உடனடி வெற்றிகளையும் ஈட்டவில்லை. தமிழ், சிங்கள சமூகங்களை ஒருமிக்கப் பட்டினிபோடும் யுக்திகளையே அவை கையாள முற்படுகின்றன. ஏற்கனவே, போரினால் கடும் அழிவுகளுக்கும் பாதிப்புக்களுக்குமுள்ளாகியுள்ள தமிழ்ச் சமூகம் தென்னிலங்கையின் சமாதான வெறுப்பாளர்களான தீவிர பௌத்த, சிங்கள அரசியல்வாதிகளின் குதர்க்கங்களால் தண்டிக்கப்படுவது நியாயமா என்பதை சம்பந்தப்பட்ட சர்வதேச சக்திகள்

(IV ஆம் பக்கம் பார்க்க)

# சேலை கட்டிய மாது... உட்பாவாடையுடன் ... கையது கொண்டு மெய்யது பொத்தி...

சங்கானை பிளாக் வீதியைச் சேர்ந்தவர் திரு.தங்கவேலாயுதம் என்பவர். 'ரயில் சிநேகிதம்' என்பது போல இவர் எனக்கு வைத்திய சிகிச்சைச்சாலை (கிளினிக்) சிநேகிதர். அப்படித்தான் எமது நட்பு ஆரம்பமானது. யாழ்போதனா வைத்தியசாலையில் எங்கள் 'கிளினிக்' நாள்கள் அப்பொழுதெல்லாம் ஒரே நாளில்தான் வந்து கொண்டிருந்தது. "கிளினிக்"கில் இவரைக் கண்டால் எனக்குப் 'பேரானந்தம்' இவர் ஒரு தகவல் களஞ்சியம். டாக்டரின் தரிசனம் கிடைக்கும் வரை இவரோடு கதைத்துப் பொழுது போக்கிக் கொண்டிருக்கலாம்.....

இந்த நண்பர் மற்றவர்களைவிட ஒரு வித்தியாசமான பேர் வழி அதனை அவரது "கிளினிக்" கொப்பியைப் பார்த்தாலே புரிந்து கொள்ளலாம். அநேகமாக எல்லோரும் நாற்பது பக்கக் கொப்பியைத்தான் இதற்காகப் பாவிப்பார்கள். இவரோதோ ஐந்து கட்டு 'மொனிற்றர்' கொப்பி... அது கூட விசேடமாக 'பைண்டு' செய்து முகப்பில் அச்சுப் பதித்தாற்போல பெயர் விவரங்கள் பொறிக்கப்பட்டிருக்கும்.

'கிளினிக்' என்ற 'ஏடு' (கிளினிக் கொப்பி) தொடங்கியவர்கள் யாராவது "நோய் குணமாகி விட்டது... இனி வைத்தியசாலைக்குப் போகவேண்டியதில்லை.... ஏடு தேவையில்லை..." என்று அதனை அப்பால் வைக்கமுடிகிறதா? அவர் சிவகதியடையும் வரை அவருக்கு அந்த ஏடும் வாழ்க்கைத்துணைதான்! தங்கவேலாயுதத்துக்கும் அந்த உண்மை தெரிந்ததால் போலும் அவர் தமது கொப்பியில் அவ்வளவு கவனம் செலுத்திவருகிறார். என்ன இருந்தாலும் அவருக்குத் 'தங்க'மூளைதான்!

அவர் தமது மோட்டார்சைக்கிள் சவாரியின்போது எதிர் கொண்ட ஒரு வேதனையான அனுபவத்தை ஒரு 'கிளினிக்'கின் போது சொன்னார். அச்சமயம் நான் இந்தப் பத்தியை எழுதத் தொடங்கவில்லை என்பதால் இப்பொழுது சொல்லுகிறேன்....

அன்று இவர் சித்தங்கேணிச் சந்தியில் திரும்பி சங்கானையை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அச்சமயம் இவரது மோட்டார் சைக்கிளை முந்திக்கொண்டு இன்னொரு மோட்டார் சைக்கிள் சென்றுகொண்டிருக்கிறது. அதிலே பயணித்தவர்கள் இரு வரும் பெண்கள். அதுவும் "சேலை கட்டிய மாதர்"கள் இவரை முந்திவிட்ட வெற்றிக்களிப்பில் சென்று கொண்டிருந்தவர்களை இவர் கவனித்தார்...

அவர்களது ஓட்டமும் காற்று அவர்களது சேலைகளில் செய்கின்ற லீலையும் இவரைக் கவலை கொள்ள வைத்தது. அந்தச் சைக்கிளை நிறுத்தச் சொல்ல வேண்டும். என்பதற்காக 'கோர்ண்' மூலமாகவும் வேறு வழிகளிலும் 'சைகை' காட்டியவாறு இவரும்




தமது சைக்கிளை வேகமாகச் செலுத்தினார்.

பின்வருவதை அவதானிக்கும் கண்ணாடியில் இதனைக் கவனித்த பெண்கள் 'இந்த நைன்ரியை முந்த விடுவதா' என்ற கௌரவப் பிரச்சினை மீதூர வாகனத்தை மேலும் விரைவாகச் செலுத்தினார்கள்... இவரும் தாம்...

ஏட்டிக்குப் போட்டியாக ஒன்றை ஒன்று முந்தும் (முயற்சியிலான) சைக்கிள் சவாரி சங்கானை வீதியில் நடந்து கொண்டிருந்தது. தமிழ்ப் பட உச்சக் கட்டக் காட்சி போல...

கடைசியில் அந்த வீதியின் மதவடிப் பகுதியில் அந்த விபத்து நடந்தே விட்டது. அதிலிருந்து அவர்களைத் தடுத்தாட்கொள்ளும் இவரது முயற்சியும் பயனற்றுப் போய்விட்டது. இவர் அஞ்சியது போலவே அந்தச் சைக்கிளில் பின்னால் அமர்ந்திருந்த பெண்ணின் சேலைத் தலைப்பு பின் சில்லுக்குள் அகப்பட்டு அவளையும் விழுத்தி விட்டு, முழுச்சேலையையுமே உள்வாங்கிக்கொண்டுவிட்டது.

'தலைக்கு வந்தது தலைப் பாகையோடு' என்பது போல நல்ல வேளையாக அந்த விபத்து சேலையோடு நின்று விட்டது. சில சிறு உரசல் காயங் கள் மட்டுமே....

பெண்கள் இரு வரும் விழி பிதுங்க இவரையே பரிதாபமாகப் பார்த்தவாறு நின்றனர்.

பின்னால் இருந்து வந்த பெண்ணோ உட் பாவா டையுடன் 'கையது கொண்டு மெய்யது பொத்தியவாறு...'

தங்கவேலாயுதம் அவர்களுக்குச்சொன்னார் 'இப்படி ஒரு ஆபத்து வரப்போகிறது என்றுதான் எச்சரிக்கை செய்தவாறு நான் உங்களைத் துரத்தி வந்தேன். நீங்கள் அதைப் புரிந்து கொள்ளாமல் நடந்து விட்டீர்கள்'

இவரே மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் அகப்பட்டுச் சிதைந்து போன சேலைத்துண்டுகளை அகற்றி சைக்கிளையும் சரி செய்து கொடுத்தார். நல்ல வேளையாக விபத்து நடந்த அயலில் இவருக்குத் தெரிந்த ஒரு குடும்பம் இருந்திருக்கிறது. அவர்களிடமிருந்து 'பாவாடை'க்காரிக்கு ஒரு பழைய சேலையும் வாங்கிக் கொடுத்து அவர்களை வழியனுப்பி வைத்திருக்கிறார்.

மற்றும் படி அவர்களை நோக்கி பெண்ணிலை வாதத்துக்கு எதிராக இவர் அங்கு சொற்பொழிவு எதுவும் நிகழ்த்தவில்லை.

'CHAIRMAN' என்ற ஆங்கிலச்சொல் பலவிடங்களில் நீக்கப்பட்டு 'CHAIR PERSON' என்ற சொல் வழக்குக்கு வந்து கொண்டிருக்கிறது. கேட்டால் முன்னதில் ஆணாதிக்கம் வெளிப்படுகிறது. ஆண்களுக்குப் பெண்கள் எந்தவிதத்திலும் சளைத்தவர்கள் அல்லர் என்ற கருத்து எனக்கும் உடன்பாடுதான். ஆனால், எல்லா விதத்திலும் முந்தவேண்டும் என்பதிலுமா...?

என்ன இருந்தாலும் மோட்டார் சைக்கிள் என்பது பாருங்கோ ஒரு நவீன துச்சாதனன் தான்!

அவனுக்குச் சேலையைக் கண்டால்......

அதனால் பெண் புரசுகள் அவதானமாக இருக்கவேண்டும்.

எல்லா இடங்களிலும் எந்த நேரத்திலும் அவர்களின் மானத்தைக் காக்கும் (ஆபத்) பரந்தாமனாக தங்கவேலாயுதங்கள் தோன்ற முடியாதல்லவா?

**- சண் அங்கிள் -**

# யார் இந்த 'டபிள் ஏஜென்ட்?'

அண்மையில் இந்திய
ஐ.பீ. அமைப்பினருக்குத் தண்ணீர் காட்டி - அவர்களது
கண்களில் மண்ணைத் தூவிவிட்டு - மர்மான முறையில் தனது
மனைவியுடன் அமெரிக்கா சென்றடைந்துள்ளார் இந்திய புலனாய்வுப்
பிரிவின் அதிகாரி ரவீந்திர சிங். அவரிடம் இந்தியாவின் அண்டை நாடுகள்
பற்றிய தகவல்கள் மற்றும் ஸ்ரீலங்காவில் விடுதலைப் புலிகளின்
செயற்பாடுகள் பற்றிய தகவல்கள் உள்ளனவாம்.
யார் இந்த ரவீந்திரசிங்?



**ஒரு** நாட்டின் இரகசியப புலனாய்வுச் சேவையில் பணிபுரியும் அதிகாரி ஒருவர் இன்னொரு நாட்டின் இரகசியப் புலனாய்வுப் பிரிவுக்கும் தகவல்களை வழங்கி வருவது பாரதூரமான செயலைப் போன்றே, சிலவேளைகளில் பயங்கரமானதாகவும் அமையக்கூடும். ஆனால், இத்தகைய நடைமுறைகள் புதியன அல்ல. உலகில் புலனாய்வுச் சேவைகள் ஆரம்பமான நாள் முதல் இவ்வாறு இடம்பெற்றுவந்துள்ளன.

ஒரு காலத்தில், அமெரிக்க இரகசியப் புலனாய்வுச் சேவைக்கு இரகசியமான தகவல்களை வழங்கி வந்த சோவியத் நாட்டின் கே.ஜீ.பீயின் ஒற்றர்கள் தொடர்பான கதைகளை நாம் நிறையவே செவிமடுத்துள்ளோம். இந்தியாவின் 'றோ' புலனாய்வுச் சேவைக்குத் தகவல்களை வழங்கியுள்ள பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. புலனாய்வுச் சேவையின் அதிகாரிகள் பற்றியும் ஐ.எஸ்.ஐ. நிறுவனத்துக்குத் தகவல்களை வழங்கியுள்ள 'றோ' அதிகாரிகளைப் பற்றியும் பல்வேறு சந்தர்ப்பங்களில் தகவல்கள் வெளிவந்துள்ளன.

என்றாலும், அவ்வாறு புலனாய்வுச் சேவையில் ஈடுபட்டுள்ள முக்கிய அதிகாரி ஒருவர் வேற்று நாட்டின் புலனாய்வுப் பிரிவொன்றுக்குத் தகவல்களை வழங்குவது என்பது எப்போதாவது ஒரு முறை அபூர்வமாக இடம்பெறக்கூடிய செயலாகவே இருக்கும்.

இந்தியாவின் 'றோ' (Research and analysis wing - raw) புலனாய்வுச் சேவையின் பிரதிச செயலாளராகப் பணியாற்றி வந்துள்ள ரவீந்திரசிங் பற்றி தற்போது கிடைத்துள்ள தகவல் கூட, அவ்வாறு எப்போதாவது ஒரு முறை அபூர்வமாக இடம்பெற்ற பாரதூரமான சம்பவமாகும்.

இவ்வாறு இரு தரப்பிற்கு தகவல்களை வழங்கிவரும் நபர்களை ஆங்கிலத்தில் 'டபிள் ஏஜென்ட்' என்று குறிப்பிடுவார்கள். அதேவேளை, தருணத்துக்கு ஏற்றவகையில் இருபக்கமும் சாயும் இத்தகையோர் பற்றி, அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும் நிறுவனங்கள் மோப்பம் பிடிக்காதிருக்கக் கூடும் எனக் கருத இயலாது. பெரும்பாலும் அந்த நிறுவனங்களுள் ஒன்று அல்லது இரண்டுமே இருபக்கமும் சாயக் கூடிய இவரது செயற்பாடுகள் குறித்து மோப்பம் பிடித்தே இருக்கும்.

ஒரு நிறுவனம் மாத்திரம் அதுபற்றித் தெரிந்து வைத்திருக்குமாயின் அது, அவர் பணிபுரியும் நிறுவனமாகவே இருக்கும். இரு நிறுவனங்களுமே இதுபற்றி அறிந்திருக்குமாயின், உண்மையில் அவர் தமது நிறுவனத்துக்காகவே செயற்படுகிறார் என்றே இரு நிறுவனங்களும் எண்ணிக் கொள்வதோடு, இவர் தொடர்பு வைத்துள்ள வேற்று நிறுவனத்துக்கு இவரது இரு பக்கமும் சாயும் தன்மைபற்றி தெரியாது போலும் என்றே இரு நிறுவனங்களும் தமக்குள் எண்ணியிருக்கும். அத்தகைய நிலைமையில் உண்மையில் தாம் யாருக்காகச் செயற்படுகிறோம் என்பதை அந்த இரு பக்கமும் சாயும் ஒற்றரே அறிவார்.

ரவீநதிரசிங் சுமார் 20 ஆண்டு காலம் 'றோ' புலனாய்வுச் சேவையில் பணியாற்றி இருந்தாலும் அமெரிக்காவின் மத்திய இரகசியப் புலனாய்வு நிறுவனத்துக்கே (சீ.ஐ.ஏ.) தமது உண்மையான சேவையை வழங்கியுள்ளார் என்பது தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

ரவீந்திரசிங், பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அமிர்தசரஸ் நகரில் வாழ்ந்து வருகிறார். சீக்கிய மதத்தவர் பெரிதும் போற்றிப் பாதுகாத்துவரும் தங்கக் கோயில் அமிர்தசரஸில் அமைந்துள்ளது.

1980களின் ஆரம்பத்தில் இந்தியப் பிரதமராக அப்போது இருந்த இந்திராகாந்தி சீக்கியத் தீவிரவாதிகளை அடக்க இந்திய இராணுவத்தை தங்கக் கோயிலுக்கு அனுப்பிவைத்தார். அந்த இராணுவப் பிரிவில் இந்த ரவீந்திரசிங் என்ற சீக்கியரும் இருந்தார்.

இந்தியப் பாதுகாப்புப் பிரிவுகளில் இருந்து நல்லதொரு நற்சான்றிதழைப் பெற்றுக்கொள்ள இந்த இராணுவ பங்களிப்பு ரவீந்திரசிங்கிற்குப் பெரிதும் உதவியுள்ளது.

அதன்பின்னர் சில நாள்கள் கழித்து சிங் அமெரிக்க இராணுவ ரகசியங்கள் அடங்கிய பத்திரங்கள் சிலவற்றை எங்கிருந்தோ பெற்று தனது உயரதிகாரிகளிடம் கையளித்துள்ளார். அப்போது அமெரிக்காவிற்கும் சோவியத் சார்ந்த நாடுகளுக்கும் இடையில் பனிப்போர் இடம்பெற்றுவந்தது. அதனால் சோவியத் முகாமில் இருந்த இந்திய அதிகாரிகளின் கண்களுக்கு சிங் மாபெரும் சாதனை வீரராகவே தென்பட்டார்.

அதைத் தொடர்ந்து 'றோ' அமைப்பு ரவீந்திர சிங்கை இராணுவத்திலிருந்து விடுவித்து தனது நிழலின்கீழ் அமர்த்திக்கொண்டது. அன்று முதல் டில்லியின் லோதி வீதியில் அமைந்துள்ள 'றோ' தலைமையகம் ரவீந்திரசிங்கின் அலுவலகமாக மாறியது.

சிங்கிக்கு அமெரிக்க இராணுவ ரகசியங்கள் எங்கிருந்து கிடைத்தன என்ற வினாவுக்கு 20 ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்க சீ.ஐ.ஏ. நிறுவனம் சிங்கிக்கு இராணுவ இரகசியங்கள் அடங்கிய ஆவணங்களை வழங்கி அவரை ஒரு புலனாய்வுப் புலியாகக் காட்டி றோவில் இணையவைத்துள்ளது என்ற விவரத்தை 20 ஆண்டுகளின் பின்னர் றோவின் புலனாய்வு அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

'றோ' நிறுவனத்தின் ஒருசில உயர்மட்ட அதிகாரிகளைத் தவிர ஏனைய அனைவரும் மாலையில் வீடு செல்லும்போது பரிசோதிக்கப்பட்டே வெளியே செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

சந்தேகத்திற்கிடமாக எதையுமே அவர்கள் வைத்திருக்கக்கூடாது. அவர்களது தொலைபேசி உரையாடல்கள் மற்றும் தொலைநகல்தகவல்கள் அனைத்தும் கூர்மையாக அவதானிக்கப்படுகின்றன.

இந்த நிறுவனத்தில் பணியாற்றும் அனேகமானோரின் இல்லங்கள் புதுடில்லியில் இருக்கும் பாதுகாப்புக்குடியிருப்புக்களிலேயே அமைந்துள்ளன. இங்குள்ள 'றோ' அதிகாரிகளின் இல்லங்கள் யாவும் இன்னுமொரு இரகசியத் தகவல் நிறுவனமான "இன்ரலிஜென்ஸ் பியூரோ" (ஐ.பீ.) மூலம் உன்னிப்பாகக் கண்காணிக்கப்படுகின்றன.

**- சரா -**

அமெரிக்கப் புலனாய்வு ஒற்றர்களால் தமது புலனாய்வு சேவையில் கடமையாற்றும் அதிகாரிகள் கொல்லப்படலாம் என்ற சந்தேகமே இந்திய அதிகாரிகள் இத்தகைய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளக் காரணமாக உள்ளன. அண்மையில் சீ.ஐ.ஏயின் பணிப்பாளர் ஜோர்ஜ் டெனம் மற்றும் அமைப்பின் பணிப்பாளர் ஒருவரும் இராஜினாமாச் செய்துள்ளனர். இந்தியாவை உன்னிப்பாகக் கண்காணிக்கவில்லை என்று அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டே அவர்கள் இராஜினாமாச் செய்ததற்கான காரணங்களில் ஒன்றாகும். முக்கியமாக 1998 இல் இந்தியாவினால் அணுகுண்டு பரீட்சிக்கப்படவுள்ளதை முன்கூட்டியே தெரிந்துகொள்ள இயலாது போனது தொடர்பாக அமெரிக்க இரகசியப் புலனாய்வுச் சேவை அதிகாரிகள் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன என்றும் தெரிய வந்துள்ளது.

இந்தியத் தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கு அமெரிக்கா கையாண்டுள்ள தந்திரம் யாதெனில் இந்திய இரகசியப் புலனாய்வுத்துறையில் பணிபுரியும் அதிகாரிகளின் பிள்ளைகள் அமெரிக்காவில் கல்வி பயிலவும் தொழில்புரியவும் வாய்ப்பளித்துள்ளதாகும்.

பிள்ளைகளுக்கு வசதிகள் வழங்கப்பட்ட பின்னர் அந்தப் பிள்ளைகளின் தந்தையர்கள் முறையான உதவிகளை வழங்காவிடில் பிள்ளைகளின் விசா நீடிக்கப்படமாட்டாது.

ரவீந்திரசிங்கின் ஒருமகளும், அமெரிக்கா சென்று அங்கேயே திருமணம் செய்து குடியேறி உள்ளார். இந்திய அதிகாரிகளும் சீ.ஐ.ஏயின் இந்தத் தந்திரம் பற்றி கண்காணித்தவாறே இருந்துள்ளனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் றோவின் உயர் மட்ட அதிகாரி ஒருவர், அமெரிக்கத் தூதரகத்தில் கடமையாற்றும் பெண் அதிகாரி ஒருவரோடு ஜெய்ப்பூர் ஓய்வு விடுதி ஒன்றில் இருந்தபோது இந்திய அதிகாரிகள் அதை வீடியோ படமாக்கியுள்ளனர்.

மேலுமொரு 'றோ' அதிகாரி சென்னையில் உள்ள மெரீனா பீச்சில் அமெரிக்க அதிகாரி ஒருவரோடு உரையாடியுள்ளதும் வீடியோப் படமாக்கப்பட்டுள்ளது.

ரவீந்திரசிங் தமது அலுவலகத்தில் வைத்து பெருமளவு ரகசிய ஆவணங்களை புகைப்படப் பிரதிகளாக மாற்றித் தமது இல்லத்துக்கு எடுத்துச் சென்றுள்ளார். அலுவலகத்தில் பணியாற்றும் அவரது தரத்தில் உள்ள அதிகாரிகள் சோதனைகளுக்கு உட்படுத்தப்படாதது அவருக்கு இந்த வாய்ப்பை அளித்துள்ளது. அவரது அமெரிக்க உறவினர் ஒருவர் மூலம் சிங்கின் இல்லத்தில் இருந்து அந்த ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. இதனால் ரவீந்திரசிங்கின் செயற்பாடுகள் எந்தவித சந்தேகங்களையும் ஏற்படுத்தவில்லை.

இந்தியாவிலும் மற்றும் அதை அண்டிய நாடுகளில் அரசியல் நிலைவரங்கள், ஸ்ரீலங்காவில் உள்ள விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பாடுகள், நேபாளத்தில் உள்ள மாவோ தீவிரவாத கெரில்லாக்களின் செயற்பாடுகள் என்பன தொடர்பான தகவல்கள் இந்த ஆவணங்களில் அடங்கியிருந்தன.

இந்த ஆவணங்கள் தற்போது சீ.ஐ.ஏ. அமைப்பிற்குக் கிடைத்திருக்கலாம் என இந்திய அதிகாரிகள் அஞ்சுகின்றனர்.

கடந்த ஜனவரி மாதத்தில் இருந்தே ரவீந்திர சிங் பற்றிய சந்தேகம் 'றோ' அதிகாரிகளுக்கு ஏற்பட ஆரம்பித்துள்ளது. தூர கிழக்கு நாடுகள் தொடர்பான விவகாரங்களே அவருக்குக் கையளிக்கப்பட்டிருந்தன. ஆனாலும் அவர் ஸ்ரீலங்கா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் தொடர்பாகத் தகவல்களைச் சேகரிக்கும் அதிகாரிகள் புதுடில்லிக்கு வந்த போது அவர்களை அழைத்துத் தகவல்களைக் கேட்டுள்ளார். இது பற்றி 'றோ'வின் பணிப்பாளர் சபைக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

அதைத் தொடர்ந்து சிங் தொடர்பான சகல தொலைபேசி உரையாடல்களும் இரகசியமாக ஒட்டுக்கேட்கப்பட்டன. அவரது தொடர்புகள் அலசப்பட்டன. என்றாலும் அவர் வீட்டுக்கும் அலுவலகத்திற்கும் மாத்திரமே சென்றுவருவதால் எதுவித துப்பும் கிடைக்கவில்லை.

அதைத் தொடர்ந்து, றோ அதிகாரிகள் சிங் பற்றி ஆராயும் பொறுப்பை ஐ.பீ. அமைப்பிடம் கையளித்தனர். ஐ.பீ. அமைப்பு அதிகாரிகள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளின் போது சிங் முக்கியமான ஆவணங்களைப் புகைப்படப் பிரதிகளாக மாற்றுவது தெரியவந்தது. அதுவும் ஐ.பீ. அமைப்பால் வீடியோ படமாக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் 19 ஆம் திகதியன்று இத்தகவல்கள் 'றோ' பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. அவர் தாம் உள்ளிட்ட அனைவரையும் மாலையில் வீடுசெல்லும்போது சோதனையிடுமாறு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்தத் தகவல் சிங்கிற்கும் எட்டியது. அன்று பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்ட சோதனைகளின்போது அவரது மோட்டார் வாகனத்தில் மதிய உணவை எடுத்து வரும் பாத்திரமும் தண்ணீர்போத்தலும் மாத்திரமே இருந்தன.

'றோ' நிறுவனத்தின் பணிப்பாளர் குறிவைக்கும் இலக்கு தானேதான் என்பதை உணர்ந்த சிங் அடுத்த நாளே, மகளைக் காண அமெரிக்காவுக்குச் செல்ல விடுமுறை தருமாறு கோரியுள்ளார். அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதோடு அவர் தொடர்பான தேடுதல்களும் அதிகரிக்கப்பட்டன. அவராலும் அதை உணர முடிந்தது. எந்த நிமிடத்திலும் தாம் கைது செய்யப்படக்கூடும். என்பதையும் அவர் உணர்ந்துகொண்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 30ஆம்திகதி இரவு பாதுகாப்புக் குடியிருப்பில் இருந்த தமது இல்லத்திற்குச் சென்ற சிங் தமது மோட்டார் வாகனத்தை வீட்டின் முன் நிறுத்தி விட்டு வீட்டுக்குள் சென்றார். அதிக நேரத்தைச் செலவழிக்காது தமது படுக்கை அறைக்குள் சென்றார். மின்விளக்கையும் அணைத்தார்.

ஓரளவு நேரம் கடந்த பின்னர் அவர் நித்திரையைத் தழுவிக்கொண்டிருக்கலாம் என்று வெளியே, அவரது நடமாட்டங்களை உன்னிப்பாக கண்காணித்துக் கொண்டிருந்த ஐ.பீ.இரகசியப்பொலீஸ் அதிகாரிகள் எண்ணினர். ஆனால் அவர்களது அசைவுகள் முற்றிலும் நின்று போய், அவர்களது கவனம் திசை திரும்பும் வகையில் பொறுமையாகக் காத்திருந்த சிங் தமது மனைவியோடு பின்பக்கத்தில் இருந்து மதிலேறிக்குதித்து அங்கு ஆயத்தமாக இருந்த தமது மைத்துனரின் மோட்டார் வாகனத்தில் ஏறித் தப்பிச்சென்றுள்ளார்.

அவர்கள் வரும் வரையில் நேபாள நாட்டு எல்லையில் சீ.ஐ.ஏ. அதிகாரிகள் காத்திருந்தனர். அதன் பின்னர் அவர்கள் பறந்து சென்று இறங்கியது அமெரிக்காவில் ஆகும்.

தற்போது அமெரிக்க அரசு, சிங்கிற்கும் அவரது மனைவிக்கும் குடியுரிமை வழங்கி பாதுகாப்பான இடத்தில் குடியமர்த்தி உள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

ஒரு மாதகாலமாக சிங் தப்பிச் சென்றுள்ள தகவலை மறைத்து வைத்திருந்த 'றோ' அதிகாரிகள் கடந்த 10ஆம் திகதியன்று பிரதமர் மன்மோகன்சிங்கின் கவனத்திற்கு அதைச்சமர்ப்பித்துள்ளனர். அதன் பின்னரே ரவீந்திரசிங் 'றோ' அமைப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

தற்போது பிரச்சினைகள் நிறையவே தலைதூக்கியுள்ளன. சிங் ஒரு 'டபிள் ஏஜென்ட்' என்பதைத் தெரிந்திருந்தும் அவர் தப்பிச் செல்ல வாய்ப்பளித்தது ஏன் என்பதே இங்கு பூதாகரமாக உருவெடுத்துள்ள வினாவாகும். மறுபக்கத்தில் சிங்கின் அடுத்தகட்ட நடவடிக்கை என்ன என்ற வினாவும் எழுந்துள்ளது.

"என்றாவது ஒருநாள் சிங் அமெரிக்காவில் வைத்தோ அல்லது வேறு நாடொன்றிலோ இனம் தெரியாத ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகக் கூடுமெனத் தற்போது 'றோ' அமைப்பு கூறிவருகிறதாம். சிங் என்பவர் "டபிள் ஏஜென்ட்" தான் என்பதைத் தேடிப்பிடிக்க 20 ஆண்டுகள் கடந்திருக்குமானால் அவர் சிக்குவதற்கு இருக்கும் வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கும் என்றே பிறிதொரு சாரார் கருதுகின்றனர்.

---

## மண் சுமந்த....

(I ஆம் பக்கத் தொடர்ச்சி)

காத்திருக்கவேண்டும் இந்த ஆபத்துக்கள் அகற்றப்படும் வரை உங்கள் காணிகளுக்கு செல்லாது காத்திருங்கள். சிலவேளை உங்கள் வீடு தேடிக்கூட இந்த வினைப்பொருள்கள் வரக்கூடும். மழைகாலங்களில் மண் அரிக்கப்படுவதால் மேலே வரும் இந்த பாரங்குறைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் வெள்ள ஓட்டம் வழியே வீதிகளுக்கு வரக்கூடும். உங்கள் வீட்டு முற்றத்திற்கும் வரக்கூடும். விழிப்புடன் இருங்கள். உங்கள் பிள்ளைகள் மீது எப்போதும் ஒரு விழி வைத்திருங்கள். விநோதமான எவற்றோடும் விளையாட விடாதீர்கள். உங்கள் கவனமே உங்களை என்றும் காக்கும்.

*(சிலரது பெயர்கள், ஊர்கள் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மாற்றப்பட்டுள்ளன.)*

---

## சமாதானம் சாக....

(III பக்கத் தொடர்ச்சி)

புரிந்துகொள்ளுமா? போரின் கொடூர அனுபவங்களை ஆங்காங்கு அவ்வப்போது அனுபவித்த தெற்கின் சிங்கள மக்களும். போரின் கொடூரங்களோடு இரவும் பகலும் வாழ்ந்துவரும் வடக்கு - கிழக்கின் தமிழ் மக்களும் இனியொரு போர் வெடித்து இரத்த ஆறு ஓடுவதை விரும்பவில்லையென்பது உண்மையிலும் உண்மை. போரை மறுக்கும். வெறுக்கும் இவ்விரு வெவ்வேறான சமூகங்களுக்குமிடையில் தீர்வுக்கான அணுகுமுறை பற்றி மிகப்பெரும் முரண்பாடுகளும் வேறுபாடுகளும் உள்ளன. இவ்விடயத்துக்கான சமரச அணுகுமுறைகளில் பாதிப்புக்குள்ளான மக்களின் குறிப்பாக வடகிழக்கு மக்களின் அரசியல் அபிலாஷைகளை ஒதுக்கி ஒரு மூலையில் தள்ளிவிட்டு மனித உரிமைகள், ஜனநாயகம், சமூகநீதி, முரண்பாடுகளுக்கான தீர்வுகள் என்றெல்லாம் முயற்சிப்பதில் பிரயோசனமில்லை.

சமாதான முயற்சிகள் சாகாமல் உயிரோடு காப்பாற்றப்படவேண்டும். இதில் சர்வதேசத்துக்கு மிக முக்கிய பங்கு உண்டு. உலகமயமாதலில் பொருண்மிய வர்த்தக நோக்கில் மட்டும் சிந்திக்காமல் - த்தமது தேசங்களின் நலன்களின் அடிப்படையில் மட்டும் சிந்திக்காமல் - பாதிக்கப்பட்டவர்களையும் பாதிப்புக்கொடுத்தவர்களையும் வேறுபடுத்தி இனங்கண்டு சமாதானத்தை நோக்கி இலங்கைச் சூழலை நகர்த்துவதில் சர்வதேசம் உதவும் என்று நம்பமுடியுமா?